
கல்கி



KALKI அக்டோபர் 10,1954 அண

4



ஒரு சந்தோஷமான குடும்பத்தின் சித்திரம்!

என்னுடைய குடும்பத்தார் எல்லோருடைய முகத்திலும் தவழும் புன்முறுவலுக்குப்பின்னால் ஒரு கதையிருக்கிறது. சிலமாதங்களுக்கு முன் என் கணவர் அடிக்கடி சீக்காக படுத்துவந்தார். மேலும், என் மூன்று குழந்தைகளும் ஆரோக்கியம் குன்றி, மெலிந்து வாழ்க்கையில் பற்றில்லாதவர்கள்போல் காணப்பட்டார்கள். நான் அவர்களுடைய உபாத்தியாயினியுடன் அகஸ்மாத்தாகப் பேசிக்கொண்டிருக்கும் போதுதான் அவள் ''உங்களுடைய கஷ்டங்களுக்குக் காரணம் ஒருக்கால் நீங்கள் உபயோகிக்கும் சமையல் கொழுப்பாக இருக்கலாமோ என்று நினைக்கிறேன்'' என்று கூறினாள். நான் விலையுயர்ந்த சிறந்த கொழுப்பை சில்லறையாக வாங்குகிறேன் என்று சொன்னதும் அவள் ''சில்லறையாக வாங்கும் கொழுப்பு எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், எப்பொழுதும் திறந்திருப்பதால் அழுக்கான கைகளாலும், ஈக்களாலும் அசுத்தப்படுத்தப்பட்டு நோய்கள் விளைவிப்பதாக இருக்கலாம்'' என்று சட்டென்று பதிலளித்தாள்.

அவள் டால்டா வனஸ்பதியை உடனே வாங்கும்படி எனக்கு யோசனை கூறினாள். ஏனென்றால் முதலாவதாக டால்டா, ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது. அதன் சீல் செய்த டின்னுக்குள் கிருமிகள் நுழையமுடியாது. அன்றியும் டால்டா வனஸ்பதியின் தரம் மிகச் சிறந்தது. என் குடும்பத்தினருக்கு டால்டா வனஸ்பதியில் சமைத்த உணவு சீக்கிரமே பிடித்துப் போய்விட்டது. டால்டா பரிமளிக்கச்செய்யும் உணவிலுள்ள இயற்கை ருசியை அவர்கள் மிகவும் விரும்பினார்கள். காற்றுப்புகாத சீல் செய்த டின்னில் வாங்க முடிகிற டால்டா வனஸ்பதி எப்பொழுதும் சுத்தமாகவும், புத்தம் புதிதாகவும் ஆரோக்கியமளிப்பதாகவும் இருக்குமென்று திடமாக நம்பலாம். டால்டா வனஸ்பதி என் குடும்பத்தினரை சந்தோஷமாகவும், ஆரோக்கியமாகவும், நான் முழுவதும் திருப்தியடைந்தவர்களாகவும் வைத்திருக்கிறது. நீங்களும் எல்லா உணவுகளையும் டால்டா வனஸ்பதியில் தயாரியுங்கள். இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

10, 5, 2, 1, ½ பவுண்டு டின்களில் கிடைக்கிறது.
டால்டாவில் விடமின் 'ஏ', 'டி' இருக்கிறது.

சிறந்த சமையல் கொழுப்பை தேர்ந்தெடுப்பது எப்படி?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு



மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

HVM. 220-50 TM

கல்கி
பொருளடக்கம்

மலர் 14
இதழ் 11

1954 அக்டோபர் 10

ஜய ௵
புரட்டாசி 24

" கல்கி "யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.



"அதற்குச்
சிறிதும்
சந்தேகம்
கிடையாது
அவர்
வெகு அழகாக
அணிந்து
கொண்டிருப்பது
பின்னிமில்
துணிகளே"

கல்கி

மலர் 14 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 11

நாலாவது பெரிய வல்லரசு!

பாரத நாடு உலகிலேயே நாலாவது வல்லரசாக விளங்கப் போகிறது என்று பண்டித ஜவாஹர்லால் நேரு சென்ற வாரம் பார்லிமெண்டில் கூறியபோது எழுந்த கரகோஷ ஆரவாரத்தின் பேரொலி நாற் திசையிலும் பரவி, இந்திய மக்கள் யாவரையும் புளகாங்கிதம் அடையும்படி செய்தது.

உலக அரங்கில் பாரத நாடு இப்போதே வல்லரசுகளுக்குச் சமமான செல்வாக்கையும் அந்தஸ்தையும் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

எந்த உலகப் பிரச்னையை ஒட்டியும் இந்தியாவின் கருத்து என்ன என்பதை வல்லரசு சர்க்கார்களும் பிரபல உலகப் பத்திரிகைகளும் அக்கறையுடன் கவனித்து வருகின்றன.

வல்லரசுகளின் ஆசியும் ஆதரவும் பெற்ற காரியங்கள்கூட, இந்தியாவின் அங்கீகாரமும் ஆதரவும் இல்லாவிட்டால் புகைந்துவிடும் என்பதைச் சமீப காலத்திய நிகழ்ச்சிகள் நிருபணம் செய்துள்ளன.

சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளுக்குள் இந்தியா இவ்வளவு சீரும் செல்வாக்கும் மதிப்பும் மாண்பும் பெற்று விளங்குவதற்குக் காரணம் என்ன?

நமது அருமைத் தலைவர் ஜவாஹர்லால்ஜியின் தலைமையில் இந்திய சர்க்கார் மேற்கொண்டுள்ள அப்பழுக்கற்ற அன்னிய நாட்டுக் கொள்கைதான்.

இராணுவ பலத்திலோ, தொழில் துறை முன்னேற்றத்திலோ அமெரிக்கா, ருஷ்யா, சீனாவுடன் இந்தியாவை ஒப்பிடுவதற்கில்லை.

அத் துறைகளில் இந்தியா மேற்படி வல்லரசுகளுக்குச் சமமான நிலையை அடைய இன்னும் சில ஆண்டுகள் செல்லலாம்.

ஆனால் ஆத்மீகத் துறையில் பாரத நாடு அடைந்துள்ள உன்னத ஸ்தானத்துக்கு உலக சரித்திரத்தில் ஈடு இணையே இல்லை.

சத்தியத்தையும் நீதி நெறியையும் அடிப்படையாகக் கொண்ட ஆத்ம சக்தியினாலேயே இன்று இந்தியா மகத்தான இராணுவ பலம் வாய்ந்த வல்லரசுகளுக்குச் சமமான அந்தஸ்தை அடைந்திருக்கிறது.

* * * *

வெளிநாட்டு விவகாரங்களில் இந்திய சர்க்கார் அனுஷ்டித்து வரும் கொள்கை பற்றிச் சென்ற வாரம் பார்லிமெண்டில் காரசாரமான விவாதம் நடந்தது.

எதிர்க் கட்சியான பிரஜா-சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ கிருபளானி அந்த விவாதத்தில் கலந்து கொண்டார். சர்வ தேசியப் பிரச்னைகளில் இந்தியாவின் ஸ்தானம் உயர்ந்து வருவதைப் பெருமையுடன் குறிப்பிட்டார். ஆனால் "அவ்வளவுக் கவ்வளவு இந்தியாவுக்குச் சமீபத்தில், இந்தியா நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கும் வெளி நாட்டு விவகாரங்களில், படுதோல்வி அடைந்திருக்கிறோம்!" என்று சொன்னார். இந்தியாவுக்கு நேரடியான சம்பந்தமுள்ள விவகாரங்களில் இந்திய சர்க்கார் செய்த தவறுகளை ஒன்று விடாமல் வரிசையாக எடுத்துக் காட்டினார்:

காஷ்மீர் பிரச்னையில் முடிவு காண்பதற்காக இந்திய சர்க்கார் கோடிக்கணக்கான தொகை செலவு செய்தனர்: ஆனால் அதில் தோல்வியே ஏற்பட்டது. காஷ்மீர் விஷயம் அன்று எவ்வளவு மோசமாக இருந்ததோ அதுபோலவேதான் இன்றும் இருந்து வருகிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட தகராறுகளில் ஒன்றாவது இன்னும் திருப்திகரமாகத் தீர்ந்தபாடில்லை.

தென் ஆப்பிரிக்கா இந்தியர் பிரச்னையிலும் நாம் தோல்வியே அடைந்தோம்.

தெற்கே உள்ள சின்னஞ் சிறு தீவான இலங்கைப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்திலும் நமக்குப் படுதோல்வியே ஏற்பட்டுள்ளது.

புதிய பல்லவி!



இலங்கை இந்தியர்களை நாடு கடத்தும் முயற்சியில் சாம, பேத, தண்ட முறைகளைக் கையாண்டு விட்டு இப்போது, இலங்கையை விட்டுப் போகிறவர்களுக்கு 'போனஸ்' வழங்கப்படும் என்று 'தான' முறையையும் இலங்கை சர்க்கார் கடைப்பிடிக்கப் போகிறார்களாம்.

நம் எல்லையை அடுத்துள்ள திபேத்தை, கம்யூனிஸ்ட் சீனா கபளீகரம் செய்ய முடியாமல் இந்திய சர்க்காரால் தடுக்க முடியவில்லை.

ஆசியாவின் அமைதிக்கும் உலக அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கக் கூடிய 'ஸியாட்டோ' உடன்படிக்கை உருவாவதை இந்திய சர்க்காரால் தடுக்க முடிந்ததா! இல்லை.

சுதந்திரம் பெற்று ஏழு வருஷங்கள் ஆகியும் இந்தியாவில் உள்ள இட்டுப் பிரதேசங்களை அன்னியரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்ய இந்திய சர்க்காரால் சாத்தியமாகவில்லை.

இவ்விதமாக இந்திய சர்க்கார் ஒரு முக்கிய விஷயத்தையாவது உருப்படியாகத் தீர்க்க முடியவில்லை; அடுக்கடுக்கான தோல்விகள் தான் அவர்கள் கண்ட பலன் என்று ஆச்சாரிய கிருபளானி பார்லிமெண்டில் வெளுத்து வாங்கினார்.

அதற்குப் பதில் அளித்த ஜவாஹர்லால் ஜீ, கிருபளானி கட்டிக் காட்டிய குறைகளை ஒப்புக் கொண்டார். ஆனால் "காஷ்மீர் முதலிய பல பிரச்னைகளில் சர்க்கார் தோல்வி அடைந்தார்கள் என்பதைக் காட்டிலும், சர்க்கார் இன்னும் வெற்றி பெறவில்லை என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

"அந்தப் பிரச்னைகளில் வெற்றி பெற நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். நமக்கு இறுதி வெற்றி கிடைக்கும் என்பது என் நம்பிக்கை" என்று நேருஜி உறுதியாகக் கூறினார்.

நல்லதொரு எதிர்ப்புக் கட்சி உருவாகி வேலை செய்ய வேண்டிய அவசியம் இதிலிருந்து நன்கு வெளியாயிற்று. எல்லாருமே நேரு பாடிய பல்லவியைத் திருப்பிப் பாடிப் பாராட்டி விட்டால் மட்டும் போதுமா? எதிர்க் கட்சி ஒன்று பெயருக்கேனும் இருப்பதால் அல்லவோ, குறைகளையும் எடுத்துச் சொல்ல முடிந்தது! நேருஜிக்கும் பதில் சொல்ல வசதி ஏற்பட்டது.

* * *

பொதுவாக வெளி நாட்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் நேருஜி அனுஷ்டித்து வரும் கொள்கை முற்றிலும் சரி என்பதைப் பார்லிமெண்டில் உள்ள எல்லாக் கட்சியினரும் எதிர்ப்பின்றி ஒத்துக் கொண்டனர்.

உலகிலேயே இதற்கு முன் சுதந்திரம் பெற்ற நாடுகள் உள்நாட்டிலும் சரி, உலக அரங்கிலும் சரி, ஐம்பது ஆண்டுகள், நூறு ஆண்டுகள் படாத பாடு பட்டு, படிப்படியாகத்தான் முன்னேற்றம் அடைய வேண்டியிருந்தது.

ஆனால், பாரதநாடு சுதந்திரம் பெற்ற ஏழே ஆண்டுகளில் அகில உலகமும் வியக்கக் கூடிய உன்னத நிலையை அடைந்துளது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

கொரியாவிலும் இந்தோ சீனாவிலும் வல்லரசுகளும் சாதிக்க முடியாத காரியத்தை இந்தியா சாதித்து வெற்றி பெற்றது.

போரில் வெற்றி காண்பதைக் காட்டிலும், சமாதான முயற்சியில் வெற்றி பெறுவது கடினமான காரியம் என்பதை, சென்ற மகா யுத்தத்துக்குப் பின் நிகழ்ந்த பல சம்பவங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்திருக்கின்றன.

அத்தகைய சமாதான முயற்சியில் இந்தியா பெற்ற வெற்றியே, சென்ற பல வருஷங்களில் முதல் தடவையாக இன்று உலகில் ஓரிடத்திலும் போர் நடவாமல் நின்றிருப்பதற்குக் காரணம்.

பாரதநாடு கத்தியின்றி, இரத்தமின்றி, காந்திய வழியைப் பின்பற்றி, சாத்வீக முறையினால் சுதந்திரம் எய்திய புதுமையை உலக மக்கள் கண்டு அதிசயித்தனர்.

அதே வழியைப் பின்பற்றி இந்தியா, இராணுவ பலத்தில் இணையற்று விளங்கும் உலக வல்லரசுகளுக்குச் சமமான நிலையை அடையும் புதுமையையும் அகில உலகமும் கண்டு அதிசயிக்கும் காலம் வரப் போகிறது என்பதை நேருஜி எடுத்துக் கூறினார்.

"இன்று அமெரிக்காவும் ருஷ்யாவும் இரண்டு மாபெரும் வல்லரசுகளாக விளங்கி வருகின்றன. இவற்றிற்கு அடுத்தபடியாக பெரிய வல்லரசாகக் கூடிய சகல யோக்யதாம்சங்களும் சீனாவுக்கு இருக்கின்றன. உலகிலே எதிர் காலத்தில் இந்த மூன்று வல்லரசுகளுக்கு அடுத்தபடியாக நாலாவது வல்லரசாகத் திகழக் கூடிய நாடு இந்தியா தான்" என்று நேருஜி குறிப்பிட்டார்.

இந்தியா உலக வல்லரசுகளில் ஒன்றாக விளங்குவதற்கு இரண்டு முட்டுக்கட்டைகள் இருந்தன.

அவற்றில் ஒன்று அன்னியர் ஆதிக்கம், இரண்டு உள்நாட்டில் ஒற்றுமையின்மை ஆகும்.

மேற்படி இரண்டில் பாரத நாட்டு மக்கள் அன்னியர் ஆதிக்கத்தை ஒழித்துச் சுதந்திரம் அடைந்து விட்டனர்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்கும், பாரதநாட்டு மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கும் ஒற்றுமை எவ்வளவு அத்தியாவசியமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

சுதந்திர விருட்சத்துக்கு ஒற்றுமையின்மையாகிற புல்லுருவியினால் ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்கும் பட்சத்தில், இந்தியா மாபெரும் வல்லரசாக விளங்குவதை விரைவில் காணலாம்!

எட்டு கோடி மக்களின் குரல்

சில தினங்களுக்கு முன் ஒரு நாள் புது டில்லி வானொலியில் எட்டு கோடி சுதந்திர மக்களின் கம்பீரமான குரல் கேட்டது!

அவர்கள் பாரத நாட்டுக்கும் நேருஜிக்கும் நன்றியும் நல்வாழ்த்தும் கூறினர்!

சுதந்திர இந்தோனேஷ்யாவில் உள்ள எட்டு கோடி மக்களின் பிரதிநிதியான இந்தோனேஷ்யப் பிரதமர் டாக்டர் அலி சஸ்த்ர மியோயோ சமீபத்தில் பாரத நாட்டின் தலை நகருக்கு விஜயம் செய்தபோது, அவருக்குப் பொது மக்கள் அமோக வரவேற்பு அளித்தனர். இந்திய சர்க்காரும், பார்லிமெண்டு அங்கத்தினர்களும் அந்தத் தலைவருக்கு நல்வரவு கூறி அவரைச் சிறந்த முறையில் கௌரவித்தார்கள்.

இந்தியாவுக்கும் இந்தோனேஷ்யாவுக்கும் உள்ள உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல, சரித்திர காலத்துக்கு முந்தியதாகும் என்று இந்தோனேஷ்யப் பிரதமர் குறிப்பிட்டார். ஆம், இந்தியாவுக்கு அடுத்தபடியாக ராமாயண, பாரத இதிகாசங்களுக்குக் கௌரவம் அளிக்கும் இந்தோனேஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்பு மிகத் தொன்மையானது. அந்த உறவைச் சமீப காலத்திய சம்பவங்கள் நீண்டகாலம் நிலைத்திருக்கும்படியாகப் பலப்படுத்தி யுள்ளன.

"இந்தோனேஷ்ய மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு இந்தியா அளித்த ஆதரவும் பேருதவியும் சுதந்திர இந்தோனேஷ்யாவின் சரித்திர ஏடுகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விளங்கும். இந்தப் பேருதவிக்காக நாலு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுக்கு வந்த ஜனாதிபதி சோகார்னோ இந்தோனேஷ்ய மக்களின் நன்றியைத் தெரிவித்தார். இந்தியாவுக்கு இந்தோனேஷ்ய மக்களின் வாழ்த்தைத் தெரிவிக்கவே நான் இப்போது இங்கு வந்திருக்கிறேன்."

இவ்வாறு இந்தோனேஷ்யப் பிரதமர் உணர்ச்சி ததும்பக் கூறியதைக் கேட்ட சகலருக்கும் மெய் சிலிர்த்திருக்கும் என்பது நிச்சயம்.

எண்ணூறு லட்சம் மக்கள் அடங்கிய ஒரு சுதந்திர நாட்டின் பிரதம மந்திரி இந்தியாவுக்கு நேரில் விஜயம் செய்து தமது தேசத்தின் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டது இந்திய மக்கள் பெருமிதம் அடைய வேண்டிய விஷயம் அல்லவா!

* * *

மூவாயிரத்துக்கு மேற்பட்ட தீவுகள் அடங்கிய இந்தோனேஷ்யா உலகத்திலேயே பெரிய தீவுத் தொடர் ஆகும். மூவாயிரம் மைல் நீளத்துக்கு மேல் பரந்து விரிந்து கிடக்கும் இந்தோனேஷ்யா இந்துமகா சமுத்திரமும் பசிபிக் மகா சமுத்திரமும் சந்திக்கும் கேந்திர ஸ்தானமாக விளங்கி வருகிறது.

இந்தியாவைப் போல் இந்தோனேஷ்யாவும் உலக சமாதானத்தில் ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதை இந்தோனேஷ்யப் பிரதமர் சுட்டிக் காட்டினார். கிழக்கே மணிலாவிலிருந்து மேற்கே கெய்ரோ வரையிலும் அதற்கு மேலும் கூடச் சமாதான மண்டலத்தைச் சிருஷ்டிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான் முதலிய எட்டு நாடுகள் மணிலாவில் கூடிச் செய்து கொண்ட தென் கிழக்கு ஆசியா பாதுகாப்பு உடன்படிக்கையினால் சமாதானம் ஏற்படாது என்பதை டாக்டர் சஸ்த்ரமியோயோ தெளிவாகக் கூறி விட்டார்.

புது டில்லியிலிருந்து வெளியாகியுள்ள இந்தியா — இந்தோனேஷ்யா பிரதம மந்திரிகளின் கூட்டறிக்கை ஆசியாவின் சரித்திரத்திலேயே முதன் முதலாகச் சமாதான சகாப்தத்துக்கு வழி வகுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும்.

கூடிய விரைவில் ஆசியா, ஆப்பிரிக்கா நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாட்டைக் கூட்டுவதே மேற்படி அறிக்கையின் நோக்கம்.

ஆசியா கண்டத்திலும் ஆப்பிரிக்கா கண்டத்திலுமாக உலகத்தில் உள்ள ஜனங்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். எனவே, பெரும்பாலான மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அந்த மகாநாடு பொதுவாக உலக சமாதானத்துக்கும் முக்கியமாக ஆசியாவின் அமைதிக்கும் வழிகாட்டியாக இருக்கும் என நம்பலாம்.

சர்வதேச சபையில் சண்டித்தனம்

உலக ஒற்றுமைக்கு, சர்வதேச நீதிக்கு, ஜனநாயக தர்மத்துக்கு உறைவிடமாக இருக்க வேண்டிய மாபெரும் ஸ்தாபனம் விதண்டா வாதத்துக்கு, வீம்புக்கு, வீண் பிடிவாதத்துக்கு நிலைக்களமாக இருந்து வருகிறது.

உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக, முதலாவது மகா யுத்தத்துக்குப் பின் அமைக்கப்பட்ட சர்வதேச சங்கத்தில் அமெரிக்கா சேராமல் அந்த ஸ்தாபனத்தைக் குட்டிச் சுவராக்கியது. இப்போது அதே உலக சமாதான இலட்சியத்துடன் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் அமெரிக்கா சேர்ந்து, அதன் பெருமையையும் செல்வாக்கையும் சீர்குலைத்து, அதைப் பலவீனப்படுத்தி வருகின்றது.

கல்வி, கலாச்சாரம், பொருளாதாரம், விஞ்ஞானம், ஆரோக்கியம் முதலிய பல துறைகளிலும் ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தினால் உலகத்தில் உள்ள பல நாடுகள் பலன் அடைந்திருக்கின்றன. ஆனால், அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் அவ்விதம் சொல்லுவதற்கில்லை.

உலக ஜனத் தொகையில் ஐந்தில் ஒரு மடங்கு உள்ள பிரம்மாண்ட தேசமான சீனாவுக்கு ஐ. நா. ஸ்தாபனத்தில் சென்ற பல வருஷங்களாக ஸ்தானம் அளிக்கப்படாதது, ஐ. நா. சபை செய்துள்ள தவறுகளுக்கெல்லாம் சிகரமாக அமைந்துள்ளது. தேசமற்ற, ராஜ்யமற்ற, பொதுஜன ஆதரவற்ற சியாங் கை ஷேக்கின் பிரதிநிதியை மேற்படி ஸ்தாபனத்தில் சீனாவின் பிரதிநிதியாக உட்கார வைத்திருப்பது உலக அதிசயங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

குடியரசு சீனாவுக்கு ஐ. நா. ஸ்தாபனத்தில் ஸ்தானம் அளிக்க வேண்டும் என்று சமீபத்தில் ஐ. நா. சபையிலே ருஷ்யா கொண்டு வந்த தீர்மானம் மறுபடியும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. எனவே, இன்னும் ஒரு வருஷ காலத்துக்கு ஐ. நா. சபையில் குடியரசு சீனாவுக்கு இடம் இல்லை என்பது உறுதியாகி விட்டது.

அதாவது சர்வதேச மகா சபையில் முக்கிய ஸ்தானம் வகிக்கும் அமெரிக்காவின் சண்டித்தனம் தாற்காலிகமாக வெற்றி பெற்றுள்ளது.

* * *

தற்போது ஆசியாவில் பல பிரச்னைகள் தீராமல் இருந்து வருகின்றன. உலக யுத்தமாக மாறுமோ என்ற பீதிக்குக் காரணமாக இருந்த கொரியாப் போரும் இந்தோ-சீனப் போரும் தாற்காலிகமாக நின்று சமாதானம் ஏற்பட்டிருக்கிறது. குடியரசு சீனாவின் ஒத்துழைப்பு இராவிடில் கொரியாப் பிரச்னையோ, இந்தோ சீனப் பிரச்னையோ தீர்ந்து சமாதானம் ஏற்பட்டிருக்க முடியாது.

குடியரசு சீனாவை விலக்கி விட்டு எந்த சர்வதேசப் பிரச்னையையும் திருப்திகரமாகத் தீர்க்க முடியாது என்று ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நார்வேயின் வெளிநாட்டு மந்திரி ஐ. நா. சபையில் கூறியுள்ளார். மேற்படி சபையில் குடியரசு சீனாவுக்கு ஸ்தானம் கொடுக்காதது மூடத்தனமான காரியம் என்று பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் ஸ்ரீ ஆட்லி கண்டித்துள்ளார். எவ் விஷயத்திலும் அமெரிக்காவைப் பூரணமாக ஆதரித்து, அதன் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் கூட, ''குடியரசு சீனாவை என்றென்றும் ஐ. நா. சபையிலிருந்து விலக்கி வைத்திருக்க முடியாது'' என்று அழுத்தமாகக் கூறியுள்ளார்.

உலக அறிஞர்களின் அபிப்பிராயம் இப்படியிருக்கும்போது, அமெரிக்காவின் சண்டித்தனத்துக்கு எத்தனை காலம் மற்ற தேசங்கள் உடந்தையாயிருந்து வரப் போகின்றன !

யாழ்ப்பாண நகரில் இலங்கைப் பிரதமர்

கொழும்பு, அக்டோபர் மீ 2உ

பிரதமர் ஸர் ஜான் இவ்வாரம் யாழ்ப்பாண நகருக்கு விஜயம் செய்தார். யாழ்ப்பாணம் ரயில்வே நிலையத்தில் சாவகச்சேரி பார்லிமெண்ட் அங்கத்தினர் ஸ்ரீ வி. குமாரஸ்வாமி இந்தியாவிலிருந்து விசேஷமாகத் தருவித்த 20 பவுண்ட் எடையுள்ள நில மாலையை அணிவித்துப் பிரதமரை வரவேற்றார். ஏராளமான மாலைகள் பிரதமர் கழுத்தில் வந்து விழுந்தன. அவருடைய அரசியல் கொள்கை எப்படியிருந்த பொழுதிலும் அதிதி உபசாரத்தில் உலகப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணத் தமிழ்ப் பெருமக்கள் பிரதம மந்திரிக்குச் சைத்யோபசாரங்கள் செய்து வரவேற்றார்கள். ஊர் முழுவதும் திருவிழாக் கோலத்தில் அலங்காரமாகக் காட்சியளித்தது.

யாழ்ப்பாணம் என்ற பெயர் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த சரித்திரப் பெருமை வாய்ந்த யாழ் வாத்தியத்தைப் போலச்செய்த ஒரு அழகிய வெள்ளிப் பேழையில் தமிழில் எழுதிய உபசாரப் பத்திரத்தை நகர மக்கள் வாசித்துக் கொடுத்தார்கள். இந்த வரவேற்புக்கு யாழ்ப்பாண சரித்திரத்தில் என்றுமே கண்டிராத அளவு ஜனங்கள் திரண்டு வந்திருந்தனர். பிரதமர் ஸர் ஜான் வேஷ்டியும் ஜிப்பாவும் நெற்றியில் சந்தன திலகமும் அணிந்து வந்திருந்தார். இந்தக் கூட்டத்தில் சமஷ்டி வாதிகள் என்று கூறப்படும் சிலர் கறுப்புக் கொடி காட்டிக் கோஷம் செய்யவும் அவர்களைப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தார்கள். பிரதம மந்திரியின் ஊர்வலம் புறப்படுவதாயிருந்த சமஷ்டி வாதிகளின் கோட்டை யெனப்படும் கொக்குவில் பகுதியிலிருக்கும் இந்துக் கல்லூரிக்குச் சிலர் தீவைத்து விட்டனர். இவ்விதம் ஓரிரண்டு அசம்பாவிதங்கள் நிகழ்ந்த பொழுதிலும் பிரதமர் அவருடைய விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டாரென்றே கூற வேண்டும்.

தமிழ் மக்களுக்கு மிருந்த மனக்கிலேசத்தை அளித்து வரும் மொழிப் பிரச்னையைப் பற்றிக் கொக்குவில் இந்துக் கல்லூரித் தலைவர் ஸ்ரீ பேரின்ப நாயகம் கல்லூரியில் பிரதமரை வரவேற்றபொழுது எடுத்துக்காட்டி, தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் நாடெங்கும் சரி சமதையான அந்தஸ்தைச் சட்டரீதியாக அளிக்க அரசியல் திட்டத்திலேயே ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டுமென்பதை வலியுறுத்தினார். இதற்குப் பிரதம மந்திரி பதிலளிக்கையில், அருமையான யோசனை கூறிய ஸ்ரீ பேரின்ப நாயகத்துக்கு நன்றி கூறிவிட்டுத் தமிழ்மொழி ஒதுக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகத்தை ஒழிக்க,


தமிழுக்கும் சிங்களத்துக்கும் சட்ட ரீதியாகச் சம அந்தஸ்து அளிப்பதாயும் இதற்குத் தேவையான திருத்தத்தை அரசியலமைப்புத் திட்டத்திலேயே செய்வதாயும் வாக்களித்தார். தமிழை ஒதுக்கிச் சிங்களத்தை மட்டும் ராஜாங்கபாஷையாக்கச் சில தீவிர சிங்கள ராஜ்ய வாதிகள் முயன்று வருவதினால் பிரதம மந்திரியின் மேற்படி பிரகடனம் விசேஷ தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் ஒவ்வொரு அங்குல நிலமும் இலங்கை மக்கள் அனைவருக்கும் சொந்தமென்றும் வகுப்பு சௌஜன்யத்துக்கு எல்லோரும் பாடுபட வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். தமிழருக்கும் இந்தியருக்கும் விரோதமாகத் துவேஷப் பிரசாரம் செய்து வரும் மூச் சிங்கள முன்னணியைப் பற்றிக் குறிப்பிடுகையில், ஜனநாயக நாட்டில் எல்லாச் சங்கங்களுக்கும் இயங்க உரிமையுண்டென்றும் ஆகையால் மூச் சிங்கள முன்னணியைத் தடை செய்வதற்கில்லையென்றும் பிரதமர் கூறினர். பிரதம மந்திரியின் யாழ்ப்பாணப் பிரசங்கம் தேனும் பாலும் கலந்த மாதிரி யிருந்ததென்றாலும் அதில் பொது மக்களுக்குத் திருப்தியை அளிக்காதது மூச்சிங்கள முன்னணி சம்பந்தமாகப் பிரதமர் அறிவித்ததுதான். இந்த இயக்கத்தினிடம் அவருடைய அனுதாபத்தை இது பிரதிபலிப்பதைப் போலிருக்கிறது!

இந்தக் கடிதம் பிரசுரமாகும் பொழுது இலங்கைப் பிரதம மந்திரியும் அவருடைய கோஷ்டியாரும் இந்தியாவிலிருப்பார்கள். பாரதப் பிரதமர் நேருஜியுடன் இலங்கை இந்தியர் நிலைமை பற்றி விவாதிக்க வந்திருக்கும் இலங்கைத் தூது கோஷ்டி சில திட்டவட்டமான அபிப்பிராயங்களோடு வந்திருக்கிறது. இங்குள்ள பத்து லட்சம் இந்தியர்களிலே இலங்கைப் பிரஜைகளாகாமல் நாடற்ற நிலைமையிலிருக்கும் சகல இந்திய வம்சாவளியினர்களையும் இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நேருஜியிடம் வலியுறுத்தவும் இதற்கு நேருஜி சம்மதிக்காத பட்சத்தில் டில்லி ஒப்பந்தத்தை ரத்துச் செய்து ஒரு தலைப்பட்சமாக இஷ்டம்போல நடவடிக்கையெடுப்பதென்றும் தீர்மானித்துக் கொண்டு இலங்கை தூதுகோஷ்டி வந்திருக்கிறது.

நாடற்றவர்களை இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளும் பேச்சுக்கே இடமில்லையென்பதை இந்திய அரசாங்கமும் மிக மிகத் தெளிவாக அறிவித்து விட்டது. பணிந்து கொடுக்காவிட்டால் ஸியாட்டோவில் சேர்ந்து விடுவேனென்று இலங்கை பூச்சாண்டி காட்டுவதைப் பொருட் படுத்தப் போவதில்லையென்றும் இந்தியா தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் வாசபர்மிட் முடிந்தவர்களை நாடு கடத்தும் திட்டம் தீவிரமாக அமுல் நடந்து வருகிறது. இவ்விதம் நாடு கடத்தப்படுவோர்களுக்கு நஷ்ட ஈடு, செலாவணி பர்மிட், சுங்கச் சலுகை முதலியவைகளைப் பெற்றுக் கொடுக்க உதவி புரிவதற்காகச் சென்ற சனிக்கிழமை கொழும்பு நகர மண்டபத்தில் மலையாளம் மகா ஜன சபையின் ஆதரவில் ஒரு பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதன்பயனாக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அந்தக் கமிட்டியினர் இலங்கை ஜனநாயக காங்கிரஸின் கீழ் ஒரு தனி இலாகாவாக இயங்கிச் சேவை புரிவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. —ரஜனி



அத்தியாயம் 11

அமைதி நிலவியது!

சென்ற சில ஆண்டுகளில் பல்லாயிரம் மக்களின் பாராட்டுதல்களுக்கு உரியவளாய் நான் புகழின் சிகரத்தில் வாழ்ந்த காலத்தில், பலமுறை தனிமையையும் அமைதியையும் வேண்டி ஏங்கியிருக்கிறேன். பார்க்க வருகிறவர்களும், பாராட்ட வருகிறவர்களும், முகஸ்துதி செய்ய வருகிறவர்களும், சுய காரியத்துக்காக வருகிறவர்களும், உண்மையாகவே தொழில் நிமித்தமாக வருகிறவர்களும், பக்கத்தில் உதவி செய்வதற்காக இருக்கிறவர்களும், வேலைக்காரர்கள் என்ற பெயருடன் வேலையொன்றுமில்லாமல் இருப்பவர்களும் என்னை ஓயாமல் சூழ்ந்திருப்பார்கள். எல்லாருக்கும் பகலில் இம்மாதிரி வாழ்க்கை இருந்தாலும், இரவிலாவது நிம்மதி இருக்கும். என்னுடைய தொழிலின் இயற்கையோ, பகலும் இரவும் ஒன்றுதான். இரவைப் பகலாக்கும் ஜகஜ்ஜோதியான தீபங்களுக்கு மத்தியில் கற்பனை உலகத்து வாழ்க்கையில் ஈடுபட வேண்டியிருக்கும். அப்போதெல்லாம், "ஆண்டவனே! இந்த இயற்கைக்கு மாறான வாழ்க்கை எப்போது முடியும்? என்றைக்குத் தனிமையின் இனிமையையும், உள்ளத்தின் அமைதியையும் அநுபவிப்பேன்!" என்று பலமுறை பிரார்த்தித்திருக்கிறேன்.

ஆனால் என் பிரார்த்தனை இந்த விதத்தில் நிறைவேறும் என்று நான் எண்ணவில்லை. சிறைச்சாலையில் தனித்த அறையில் தனிமை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. தனிமையை மட்டும் கண்டேனே தவிர, அதில் மன அமைதியைக் காணவில்லை. இரவு பகல் உறக்கமின்றி உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்ததைத்தான் கண்டேன்.

அந்தக் கொந்தளிப்பு என் தாய் தந்தையரைப் பற்றி எழுதத் தொடங்கியதிலிருந்து ஒருவாறு அடங்கி வருகிறது. வெகு காலமாக நான் அநுபவித்தறியாத அமைதி ஏற்பட்டு வருகிறது. வாழ்க்கையின் எத்தகைய பயங்கரமான கட்டத்தில் நான் இருக்கிறேன் என்பதை மறந்து விடுகிறேன். சொல்ல முடியாத வேதனையைத் தந்து வந்த சூழ்நிலையையும் மறந்து விடுகிறேன். ஏன்? நேற்று இரவு சிறிது நேரம் நிம்மதியாகத் தூங்கினேன். இங்கு வந்ததிலேயிருந்து சில சமயம் அரைத் தூக்கமாக இருந்தபோது தோன்றி வந்த பயங்கரமான கனவுகளை நேற்று இரவு காணவே இல்லை.

இதற்கு என்ன காரணம்? இத்தனைக்கும் என் தாய் தந்தையரின் வாழ்க்கை அமைதி நிறைந்த வாழ்க்கை அன்று. புயலும் மழையும் பூகம்பமும் எரிமலையுமாக நடந்து வந்த வாழ்க்கைதான். ஆனால் அத்தனைக்கும் நடுவில் என் பெற்றோர்கள் ஒருவரிடம் ஒருவர் வைத்திருந்த அன்பும், நம்பிக்கையும் பங்கம் சிறிதுமின்றி நீடித்திருந்தன. அதனாலேயே அவர்களுடைய வாழ்க்கையில் நேர்ந்த பல இன்னல்களையும் விபத்துக்களையும் அவர்கள் சகித்துக்கொள்ள முடிந்தது;

துன்பங்களுக்கிடையே இன்பத்தையும் மகிழ்ச்சியையும் காண முடிந்தது.

"அன்பே கடவுள்" என்று பெரியோர் கூறி யிருப்பதன் உண்மை ஒருவாறு எனக்கு இப்போது தெளிவாகப் புலனாகிறது. கடவுள் நித்தியமானவர். உலகத்தில் மற்ற எல்லாம் அழிந்து போகின்றன; திரும்பவும் தோன்றுகின்றன. ஆனால் இறைவனோ எல்லாவற்றுக்கும் சாட்சியாக என்றும் இருந்து கொண்டிருக்கின்றான்.

அது போலவே வாழ்க்கையில் இன்னல்களும் இடையூறுகளும் ஏமாற்றங்களும் வந்து விட்டுப் போய் விடுகின்றன. அவற்றை அநுபவிக்கும்போது கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் சமாளித்துச் சில நாளாகி விட்டால், மறந்து மறைந்து போய் விடுகிறது.

அன்பு என்னும் பண்பு மட்டும் என்றும் ஒரே தன்மையாக இருந்து வருகிறது. எப்போதும் இன்பம் அளித்து வருகிறது; மற்றக் கஷ்டங்களை யெல்லாம் சகித்துக் கொள்ளும் சக்தியையும் கொடுத்து வருகிறது.

சிந்தித்துப் பார்க்கும் போது, நான் இன்றைக்கு இத்தனை துயரங்களையும் அவமானங்களையும் சகித்துக் கொண்டு உயிர் வாழ்ந்திருப்பதே ஒருவருடைய அன்பின் காரணமாகத்தான் அல்லவா?

ஆதலின், என் தாய் தந்தையரின் வாழ்க்கை எத்தகைய சண்டமாருத வாழ்க்கையா யிருந்தாலும், அவர்களுடைய இணையில்லாத, என்றும் அழியாத அன்பின் காரணமாகவே, அவர்களைப் பற்றி எழுதும் போது, நானும் அமைதி காண்பதாக எண்ணுகிறேன்.

* * *

"துரோகம் செய்து விட்டீர்கள்!" என்றும், "இரண்டு பேரும் சேர்ந்து சூழ்ச்சி செய்து விட்டீர்கள்!" என்றும் ஆத்திரத்துடன் அலறிய காசிலிங்கத்தைச் சந்திரமணி தனது கரிய கண்களை அகல விழித்து வியப்புடன் பார்த்தாள். வியப்புடனே கூட என்றும் அழியாத எல்லையில்லா அன்பும் அவளுடைய கண்களில் நிறைந்து ததும்பியது.

"நான் உங்களுக்குத் துரோகம் செய்து விட்டதாக உண்மையாகவே கருதுகிறீர்களா? இவருடன் சேர்ந்து உங்களுக்கு விரோதமாகச் சதி செய்து விட்டேன் என்று நம்புகிறீர்களா? அப்படியானால், சொல்லுங்கள்! வேறு பேச்சு எதுவும் வேண்டாம். புனலருவியில் அதோ தண்ணீர் வெள்ளமாகக் கொட்டிக் கொண்டிருக்கிறது! அதில் விழுந்தால், நிமிட நேரத்தில் உயிர் போய் விடும்! உங்கள் நம்பிக்கையை இழந்த பின் ஒரு நிமிஷங் கூட நான் உயிர் வாழ விரும்பவில்லை!" என்றாள்.

காசிலிங்கம் சிறிது தம்மைத் தாமே சாந்தப் படுத்திக் கொண்டார்.

"சந்திரமணி! இது என்ன பேச்சு? நீ உயிரை விட்டால் நான் அப்புறம் எதற்காக இந்த உலகத்தில் உயிரோடிருக்கிறேன்? உன்னை அருவியில் தள்ளிக் கொல்லுவதற்காகத்தானா சர்க்கஸ் கம்பெனியை விட்டுத் திருத்தணி முருகன் சந்நிதியில் உன்னைக் கைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்தேன்? அதற்காகவா பிற்பாடு இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் பொறுமையோடு இருக்கிறேன்?" என்றார்.

"பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? பொறுத்துப் பொறுத்து உங்களாலும் முடியாமற் போய் விட்டதோ, என்னமோ! இல்லாவிட்டால், உங்களுக்குத் துரோகம் செய்து விட்டதாகக் குற்றம் சுமத்துவீர்களா? நம் இருவருக்கும் தாயும் தந்தையும் போல், தெய்வமே உதவி செய்ய வந்தது போல் வந்திருக்கும் இந்தப் பெரியவரைப் பற்றித்தான் அவ்விதம் சொல்வீர்களா...?"


"இல்லை, சந்திரமணி, இல்லை! நான் சொன்னதை நீ சரியாக அர்த்தம் செய்து கொள்ளவில்லை. நீ எனக்கு வேண்டுமென்று துரோகம் செய்து விட்டதாகச் சொல்லவேயில்லை. இந்தப் பரோபகாரியின் மீதும் அம்மாதிரி குற்றம் சுமத்தவில்லை. எனக்கு வந்த ஆத்திரத்தினால் நான் சொல்ல வந்ததைச் சரியாகச் சொல்லவில்லை போலிருக்கிறது. ஏதோ எனக்குத் தொல்லை ஏற்படாமல் காப்பாற்றுவதாக எண்ணிக் கொண்டு இவர் அம்மாதிரி செய்து விட்டார். உபகாரம் செய்வதாக நினைத்துக் கொண்டு அபகாரம் செய்து விட்டார். ஒரு வேளை அதற்கு நீயும் உடந்தையாக இருந்திருப்பாயோ என்று சந்தேகப்பட்டேன். உன்னிடம் யோசனை கேட்காமல் அவ்வளவு பெரிய காரியத்தைச் செய்திருக்க மாட்டார் என்று எண்ணினேன். அப்படி

யானால், இவர் உன்னிடம் தாம் செய்த அந்தக் காரியத்தைப் பற்றிச் சொல்லவே இல்லையா?''

''எதைப் பற்றி என்று சொல்லாமலே நீங்கள் பேசிக் கொண்டு போகிறீர்கள். என்ன காரியம் என்று சொன்னால் அல்லவா என்னிடம் யோசனை கேட்டாரா, இல்லையா என்று சொல்வேன்? என்னிடம் யோசனை கேட்டுச் செய்திருந்தால், நீங்கள் இவர் பேரில் குற்றம் சுமத்துவது நியாயம் அல்ல; அதற்கு என்ன தண்டனை உண்டோ, அதை எனக்கே கொடுக்க வேண்டும்!''

''தண்டனையைப்பற்றி யார் பேசியது? யாருக்கு யார் தண்டனை கொடுப்பது, சந்திரமணி! என்னுடைய மானம் மரியாதை எல்லாம் அடியோடு போய் விட்டதே என்று ஆத்திரப் பட்டு நான் பேசினால் நீ தப்பாகவே அர்த்தம் செய்து கொள்கிறாய்!''

''தங்களுடைய மானம் போகும்படி அப்படி என்னத்





தைத்தான் இவர் செய்து விட்டார்? அப்பா! நீங்கள் தான் வாயைத் திறந்து சொல்லுங்களேன்! இரண்டு பேருமாகச் சேர்ந்து என் மனத்தைக் கலக்குகிறீர்களே?'' என்றாள் சந்திரமணி.

'' ஆமாம்; அவரையே கேள்! அவரே வாயைத் திறந்து சொல்லட்டும்! அவர் செய்தது நியாயமா என்று அவரே சொல்லட்டும்!'' என்றார் காசிலிங்கம்.

இத்தனை நேரமும் ஒரே கலக்கத்தில் ஆழ்ந்து கீழேயும் மேலேயும் பார்த்துத் தவித்துக் கொண்டிருந்த மந்திரமூர்த்தி தொண்டையைக் கனைத்துக் கொண்டு கூறினார்:—'' முதலில் இவர் போட்ட கூச்சலினால் நானும் கலங்கிப் போய் விட்டேன். எதைப் பற்றிச் சொல்கிறார் என்றே தெரியவில்லை. உலகம்

துத் தெரிந்து கொண்டேன். நல்ல எண்ணத்துடன் செய்த காரியத்தை இவர் தவறாக எடுத்துக் கொண்டிருக்கிறார். ஒருவேளை நான் செய்தது தவறாகவும் இருக்கலாம். அதற்காக இவர் இவ்வளவு தடபுடல் செய்திருக்கக் கூடாது. போனால் போகட்டும்! நாம் இருவரும் அதைப் பற்றித் தனியாகப் பேசித் தீர்த்துக்

அப்பா! உங்களை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன். முக்கியமான காரியங்களை மூடி மறைப்பதில் யாதொரு உபயோகமும் இல்லை. அதனால் எவ்வளவோ இடைஞ்சல்கள் இருக்கின்றன. வந்தது வரட்டும் என்று நானும் இவரும் எங்கள் ஊரிலேயே மேளதாளத்துடன் பகிரங்கமாக விவாகம் செய்து கொண்டு புறப்பட்டிருந்தால், எங்களுக்கு எத்தனையோ கஷ்டங்கள் மிச்சமாயிருக்கும். என்னதான் விஷயம் என்பதை யாராவது ஒருவர் சொல்லித் தீருங்கள். உங்களுக்குப் புண்ணியமாயிருக்கட்டும்!''

''நானே சொல்கிறேன், சந்திரமணி! உன்னுடைய அழகான மாமன்மார்களில் இருவர் நம்மை விடாமல் தொடர்ந்து பிடித்து என்னுடைய ஐம்பது ரூபாய் சம்பளத்துக்கு உலை வைத்தார்களா? பிறகு அவர்கள் இந்தச் சாது மனிதரைத் தேடிப் பிடித்திருக்கிறார்கள். என்னவெல்லாமோ பொய்யும் புனைசுருட்டும் சொல்லியிருக்கிறார்கள். உன்னை உன் நகைகளுக்காக நான் திருடிக் கொண்டு வந்து விட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இவரும் அதை நம்பி விட்டாரோ, என்னமோ, தெரியாது! போலீஸில் என்னைப் பிடித்துக் கொடுத்துவிடப் போவதாகவும் பயமுறுத்தியிருக்கிறார்கள். அதன் பேரில் இந்த மனிதர் காதும் காதும் வைத்தாற்போல் 'நகைகளின் கிரயம் என்ன?' என்று கேட்டு, அந்தத் திருட்டுப் பயல்களிடம் மூவாயிரம் ரூபாயை ரொக்கமாகக் கொடுத்து அனுப்பி வைத்திருக்கிறார்!......''

''என்ன என்ன? இது உண்மையா? இந்த மாதிரி அநியாயமும் உலகத்தில் உண்டா!'' என்று சந்திரமணி, காசிலிங்கத்தைவிடச் சத்தமிட்டாள்.

''உண்மையா, இல்லையா என்று இவரையே கேள்! உன் அருமை அப்பாவையே கேட்டுத் தெரிந்து கொள்!'' என்றார் காசிலிங்கம்.

''ஆமாம், உண்மைதான்!......'' என்று மந்திரமூர்த்தி மேலும் பேசுவதற்குள், சந்திரமணி பதறிக் கொண்டு கூறினாள்:

''அப்பா! நீங்கள் இப்படிச் செய்யலாமா? என் அம்மாவின் நகைகள், எனக்கு மனப்பூர்வமாக ஆசீர்வதித்துக் கொடுத்தாள்! நாங்கள் திருடிக்கொண்டு வந்து விட்டோம் என்று இவர்கள் யார் சொல்லுவதற்கு? இவர்கள் அல்லவா திருடர்கள்? என் அம்மாவின் சொத்தை என்னிடம் கொடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அந்தத் திருடர்களுக்குப் போய் நீங்கள் வேறு பணம் அழுதீர்களா? இது என்ன அநியாயம்?''

''நன்றாகக் கேள், சந்திரமணி! என்னிடம் ஒரு வார்த்தை இவர் சொல்லியிருக்கக் கூடாதா? சொல்லியிருந்தால் அவர்கள் உடம்பு எலும்புகளையெல்லாம் நொறுக்கி அனுப்பியிருப்பேனே? என்னிடந்தான் கேட்கவில்லையென்றால் உன்னிடமாவது சொல்லியிருக்கக் கூடாதா? உன்னையும் கேட்காமல் அல்லவா இந்தக் காரியம் செய்து விட்டார்? நானா திருடன்? நீயா திருடி? இதைக் கேளுங்கள், பண்ணையாரே! இவளுடைய நகைகளையெல்லாம் நாங்கள் விற்றுச் சாப்பிட்டு விட்டதாக எண்ணிக் கொண்டிருப்பீர்கள். விற்றது என்னமோ உண்மைதான்! அங்கு மிங்கும் நிலையில்லாமல் திரிந்து கொண்டிருந்தபோது இவள் பேரில் அதிக நகைகள் இருக்கக் கூடாது என்பதற்காகவே விற்றோம். நகை விற்ற பணம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாயும் பாங்கியில் அப்படியேயிருக்கிறது; சர்க்கஸில் ஆடி நான் சம்பாதித்து மீத்து வைத்த பணம் ஆயிரத்தைந்நூறு ரூபாயும் இருக்கிறது. அந்த மூவாயிரத்தையும் எடுத்துக் கொண்டு போங்கள்! எங்களுக்காக நீங்கள் பண நஷ்டம் அடைய வேண்டாம்! அந்தச் சண்டாளர்களிடம் வாங்கிக் கொள்ள வேண்டிய வகையில் நான் பணத்தை வாங்கிக் கொள்கிறேன்!''

''கொஞ்சம் பொறு, தம்பி! எனக்குப் பேசுவதற்கே இடங்கொடாமல் இரண்டு பேரும் பேசிக் கொண்டே போகிறீர்கள். ஒரு வேளை நான் செய்தது தவறாகவே இருக்கலாம். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்தில் செய்தேன் என்பதைச் சொல்கிறேன், கேளுங்கள். சந்திரமணிக்கு இன்றைக்கோ, நாளைக்கோ குழந்தை பிறக்கப் போகிறது என்று இருந்த நிலையில், எஸ். என். ஈசுவரமூர்த்தி என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். 'மிக அவசர காரியம்!' என்று எழுதியிருந்தபடியால் போனேன். உங்களுக்குக்கூட ஞாபகமிருக்கலாம். என்னைப் போக வேண்டாம் என்று சந்திரமணி சொன்னதற்கு, 'சாயங்காலத்துக்குள் கட்டாயம் திரும்பி வந்து விடுகிறேன். கோர்ட் விவகாரம். அவசியம் போய்த் தீரவேண்டும்' என்று சொல்லி விட்டுப் போனேன். அங்கே, ஈசுவர மூர்த்தியின் வீட்டில் இரண்டு புதிய மனிதர்களைக் கண்டேன். அவர்கள் சந்திரமணியின் மாமன்மார்கள் என்று பிறகு தெரிந்தது. அவர்களுக்கும் ஈசுவர

மூர்த்திக்கும் கிண்டி குதிரைப் பந்தயங்களில் சந்தித்துப் பழக்கமாம். ஈசுவர மூர்த்தி என்னிடம் அவர்கள் வந்திருக்கும் காரியத்தைச் சொன்னார். எனக்கு அதைச் சொல்லவே கூச்சமாயிருக்கிறது. ஆமாம்; காசிலிங்கம் உன்னை உன் கார்டியன்களின் அநுமதியின்றிக் கடத்திக் கொண்டு வந்து விட்டதாகவும், நகைகளையும் திருடிக் கொண்டு வந்து விட்டதாகவும், போலீஸில் புகார் எழுதிக் கொடுத்துக் காசிலிங்கத்தைக் கைது செய்ய எல்லா ஏற்பாடுகளும் ஆகி விட்டதாகவும் கூறினார். என்னுடைய சிநேகத்தைக் கருதி அவர் தடுத்து வைத்திருப்பதாயும், கலந்து பேசி ராஜியாகப் போய் விடுவது நல்லது என்றும் யோசனை சொன்னார். என்னுடைய மூளையும் கொஞ்சம் குழம்பிப் போயிருந்தது. உனக்குப் பிரசவ வேளை நெருங்கி யிருக்கும் சமயத்தில் போலீஸ்காரர்கள் திடுதிடு வென்று பிரவேசித்து இவரைச் சிறைப்படுத்திக் கொண்டு போனால், உன் கதி என்ன ஆகுமோ என்று பயந்து போனேன். நீ இவரிடத்தில் எவ்வளவு ஆசைவைத்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும் அல்லவா? அந்தச் சமயத்தில் இவருக்கு ஏதேனும் நேர்ந்தால், உன் உயிருக்கே அபாயம் வரலாம் என்று பயப்பட்டேன். அந்தப் பயத்தினாலேயே, அவர்களுக்குப் பணம் கொடுத்து அனுப்பச் சம்மதித்தேன். பிறகு, நானே யோசித்துப் பார்த்ததில் நான் செய்தது சரிதானா என்று சந்தேகம் உண்டாகி விட்டது. நீங்கள் ஏதோ செய்யத் தகாத காரியம் செய்து விட்டது போலவும், அதைச் சரிப்படுத்த நான் லஞ்சம் கொடுத்து அனுப்பியது போலவும் அல்லவா ஆகி விட்டது? இதனால் உங்களுடைய வருங்கால வாழ்வுக்கு ஏதேனும் இடைஞ்சல் செய்து விட்டேனோ என்றும் என் மனம் உறுத்திக் கொண்டிருந்தது. அதனாலேயே உங்களிடம் சொல்லுவதற்கும் எனக்குத் தைரியம் வரவில்லை. நல்ல வேளையாக, நான் சொல்ல வேண்டிய அவசியமில்லாமல் காசிலிங்கத்துக்கு எப்படியோ தகவல் தெரிந்து விட்டது. நடந்தது நடந்து போயிற்று. இனி, உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்து விடலாம்!"

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரமணி, காசிலிங்கம் இருவருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பியது.

"அப்பா! வழியோடு போகிற அநாதைகளாகிய எங்களிடம் நீங்கள் இவ்வளவு அன்பு வைத்து யாரும் செய்ய முடியாத காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். மூவாயிரம் ரூபாய் என்றால் கொஞ்சமா? எதற்காகக் கொடுக்க வேண்டும்? என் உயிரைக் காப்பாற்றுவதற்காக அல்லவோ கொடுத்திருக்கிறீர்கள்?" என்றாள் சந்திரமணி.

"நானும் பதட்டப்பட்டுப் பேசி விட்டேன். என்னைத் தயவுசெய்து மன்னித்து விடுங்கள். நீங்கள் சந்திரமணியைக் காப்பாற்றியது மன்றி, எங்கள் குழந்தையின் உயிரையும் காப்பாற்றினீர்கள். அந்த நிலைமையில் போலீஸார் என்னைக் கைது செய்வதற்கு வந்திருந்தால், நிச்சயமாக ஏதேனும் ஆபத்து நேரிட்டிருக்கும்" என்றார் காசிலிங்கம்.

"போலீஸார் உன்னைச் சிறைப்படுத்துவது ஒருபுறமிருக்க, நீ ஏதாவது அவர்களோடு சண்டை பிடித்து அடிபிடி விவகாரத்தில் இறங்கி விடுவாயோ என்றும் எனக்குக் கவலையாயிருந்தது."

"சந்தேகம் என்ன? அப்படித்தான் செய்திருப்பேன்!"

"அப்பா! உங்களுக்கு நாங்கள் எத்தனையோ விதத்தில் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். அத்துடன் பணக் கடன் வேறு வேண்டாம். நீங்கள் அவர்களுக்குக் கொடுத்த தொகை மூவாயிரத்தையும் இவரிடம் வாங்கிக் கொள்ள வேண்டும்!"

"அதற்கென்ன, வாங்கிக் கொண்டால் போகிறது, சந்திரமணி! நீங்கள் எங்கே போகிறீர்கள், நான் எங்கே போய் விடுகிறேன்? மேலே நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றி யோசிக்கலாம். உன் மாமன்மார்கள் இத்துடன் நிற்க மாட்டார்கள். அவர்களுடைய குதிரைப் பந்தய மூடைக்கு மூவாயிரம் ரூபாய் எந்த மட்டில் போதும்? உன் தாயாரின் சொத்துக்கும் உனக்கும் சம்பந்தமில்லையென்று எழுதி வாங்கிப் போவதற்கும் அநேகமாக வருவார்கள்!"

"அந்த அயோக்கியப் பயல்கள் மறுபடியும் வந்து உயிரோடு பிழைத்துப் போவார்களா? ஏதோ உங்களை ஏமாற்றி விட்டார்கள். சமயமும் அப்படி யிருந்தது. மற்ற சொத்துக்கும் கையெழுத்து வாங்க வருவதற்கு அவர்களுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது? திருட்டுப் பயல்கள்! வரட்டும், ஒரு கை பார்த்து விடுகிறேன்!" என்றார் காசிலிங்கம்.

"ஆமாம், அப்பா! நான் எதற்காக என் சொத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்? என் பாட்டனார் என் தாயாருக்கு எழுதி வைத்தது. அம்மாவின் சொத்தின்

மேல் மகனுக்கு இல்லாத பாத்தியதை வேறு யாருக்கு? நாங்கள் இரண்டு பேருமாக மட்டு மிருந்தாலும் சொத்தைப் பற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லை. இந்தக் கண்மணி வேறு வந்திருக்கிறுள். இவளுக்கு ஏதாவது சொக்காய் பாவாடை வாங்கிக் கொடுக்கவாவது எங்களிடம் பணம் வேண்டாமா?"

"இந்தக் குழந்தையைப் பற்றி மட்டும் நீங்கள் கவலைப்படாதீர்கள். பெண் குழந்தையா யிருந்தாலும் நான் தத்து எடுத்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன். உங்கள் வாக்குறுதியை மறந்து விட வேண்டாம். நீங்கள் இன்னும் பாலிய வயதுதானே! இன்னும் குழந்தைகள் பிறக்கும்! எப்படி யிருந்தாலும், உனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சொத்து வேறு ஒருவருக்கு ஏன் போக வேண்டும்?"

"அப்படிச் சொல்லுங்கள், பண்ணையார்! சொத்து இவளுக்கு வந்து சேர வேண்டும் என்பது அவ்வளவு முக்கியமல்ல. அந்த அயோக்கிய மோசக்காரத் திருட்டுப் பயல்களுக்குப் போகக் கூடாது என்பதுதான் என்னுடைய கட்சி!"

"ரொம்ப சரியான கட்சி! அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காசிலிங்கம்! நீ பல காரியங்களில் கெட்டிக்காரன்; சந்தேகமில்லை. ஆனால் கோர்ட் விவகாரங்களில் என்னுடன் நீ போட்டி போட முடியாது. சுமார் இருபது வருஷ காலமாகக் கையில் தஸ்தாவேஜுக் கட்டுகளுடன் வக்கீல் வீட்டிலும் கோர்ட் வாசலிலும் காத்திருந்து, காத்திருந்து, காலத்தைக் கழித்தவன் நான். எத்தனையோ பணத்தைத் தொலைத்து அதற்குப் பதிலாகச் சட்ட ஞானம் கொஞ்சம் பெற்றிருக்கிறேன். உங்களுடைய விவகாரத்தையும் நானே நடத்துகிறேன்."

"கோர்ட்டுக்குப் போவது என்றால், அதற்கு வேறு செலவுக்குப் பணம் வேண்டும் அல்லவா? அதற்கு எங்கே போவது?" என்றாள் சந்திரமணி.

"இம்மாதிரி உங்களையும் என்னையும் பிரித்துப் பேச வேண்டாம். இப்போது நான் போட்டுக் கொள்கிறேன். சொத்து உங்களுக்கு வந்த பிறகு வட்டியுடன் திருப்பி வாங்கிக் கொள்கிறேன்."

"அதெல்லாம் முடியாது, பண்ணையார்! முடியவேமுடியாது!" என்றார் காசிலிங்கம்.

பண்ணையார் மந்திரமூர்த்தி வியப்புடன் காசிலிங்கத்தைப் பார்த்து "எது முடியாது?" என்று கேட்டார்.

"வட்டி கொடுக்க முடியாது. செலவழித்த அசல் தொகையை மட்டுந்தான் கொடுப்போம். வட்டி கொடுக்க எங்களுக்குக் கட்டாது!"

பண்ணையார் சிரித்து விட்டு, "உங்கள் இஷ்டம்! திருப்பிக் கொடுப்பதைக் கொடுங்கள்! ஆனால் நான் வற்புறுத்தவில்லை. நீங்கள் திருத்தணியில் கலியாணம் செய்து கொண்டதற்குச் சாட்சிகள் கிடைப்பார்களல்லவா?" என்றார்.

"கிடைக்காமல் என்ன? முருகன் தான் எங்களுக்கு முதல் சாட்சி! இன்னும் சிலரும் இருக்கிறார்கள்."

"இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள், அப்பா! என்னை இவர் பலவந்தப்படுத்தி அழைத்து வந்து விட்டார் என்று என் மாமன்மார்கள் சொல்ல முடியுமா? நான் பச்சைக் குழந்தை அல்ல; மைனர்ப் பெண்ணும் அல்ல; நான் இவருடன் புறப்பட்டபோது எனக்கு இருபது பிராயம் ஆகி விட்டது......"

"ஆமாம், சந்திரமணி! அப்படியெல்லாம் அவர்கள் எளிதில் சொல்லி விட முடியாது. உன் தாயார் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்ததாகச் சொன்னீர்களே? அந்தக் கடிதம் பத்திரமா யிருக்கிற தல்லவா?"

"ஓ! பத்திரமா யிருக்கிறது! சந்திரமணி! அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வா!" என்றார் காசிலிங்கம்.

சந்திரமணி உள்ளே போய்ப் பெட்டியிலிருந்து எடுத்து வந்த கடிதத்தைப் படித்து விட்டுப் பண்ணையார், "இம்மாதிரி தாயார் லட்சத்தில் ஒருவர்தான் இருக்க முடியும்!" என்றார்.

சந்திரமணியின் கண்கள் கசிந்தன. அதைப் பார்த்து விட்டுக் காசிலிங்கம், "சந்தேகம் என்ன? இல்லா விட்டால் என்னைப் போன்ற ஒரு மாப்பிள்ளை அவருக்குக் கிடைத்திருக்குமா? ஆனால் ஒன்று சொல்லுகிறேன், பண்ணையாரே! இவளுடைய மாமன்மார்களைப் போன்ற அயோக்கியர்களைக் கோர்ட்டு விவகாரத்தில் ஜயித்துப் புண்ணியம் ஒன்றுமில்லை. அவர்களுக்குத் தண்டோபாயம்தான் சரி! ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அவர்கள் என் கையில் அகப்படாமல் போகப் போவதில்லை. அப்போது ஒரு கை பார்த்து விடப் போகிறேன்!"

"தம்பி! இப்போது இந்த தேசத்தில் பிரிட்டிஷ் இராஜ்யம் நடைபெறுகிறது. நியாயமோ, அநியாயமோ, நம் இஷ்டப்படி ஒன்றும் செய்ய முடியாது. எது எது எப்படிச் செய்ய வேண்டுமோ, அப்

படிச் செய்ய வேண்டும். இந்தக் கடிதம் ஒன்றே போதும் நம்முடைய கட்சிக்கு. இம்மாதிரி ஒரு கடிதம் இருப்பது இவளுடைய மாமன்மார்களுக்குத் தெரியக் கூடாது. இதைப் பத்திரப்படுத்திவைக்க வேண்டும்!'' என்றார் பண்ணையார்.

இந்தச் சம்பவம் நடந்த பிறகு சில நாள் அந்த அருவிக்கரைப் பங்களாவில் அமைதி நிலவியது. களங்கமற்ற குழந்தையின் மழலைச் சிரிப்போடு பெரியவர்களின் குதூகலமான சிரிப்புச் சத்தமும் அடிக்கடி கேட்டது.

காசிலிங்கமும் பண்ணையார் மந்திரமூர்த்தியும் கோர்ட்டில் வழக்குப் போடுவது பற்றித் தீவிரமாக ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள்.

அத்தியாயம் 12

அன்பு காத்தது!

இரண்டு மாத காலம் வாழ்க்கை இன்பமாகச் சென்றது. சந்திரமணி குழந்தை வளர்ப்பில் மனத்தைப் பூரணமாகச் செலுத்தியிருந்தாள். குழந்தையை இப்படி இப்படி வளர்க்க வேண்டுமென்று அவளுக்குச் சொல்லிக் கொடுப்பதில் மந்திரமூர்த்தி மிக்க உற்சாகமாயிருந்தார். அவருக்கும் சத்திரத்திலிருந்து வந்த சமையற்கார ஆச்சிக்கும் சிலசமயம் விவாதம் வந்து விடும். குழந்தைக்கு எத்தனை நேரத்துக்கொரு தடவை பால் கொடுக்க வேண்டும், பால் புகட்டுவதைத் தவிரத் தண்ணீர் கொடுக்க வேண்டுமா, கூடாதா? குழந்தையைக் குப்புறப் போட்டுக் குளிப்பாட்ட வேண்டுமா, மல்லாந்து படுத்திருக்கையில் குளிப்பாட்டுவது உசிதமா, எத்தனை நாளைக்கு ஒரு தடவை விளக்கெண்ணெய் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் தீவிரமாக விவாதிப்பார்கள். இலேசில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். சத்திரத்து ஆச்சி, விளக்கெண்ணெய் போட்டுக் கொழுக்கட்டை மாதிரி வளர்ந்த குழந்தைகளைப் பற்றிச் சொல்லுவாள். விளக்கெண்ணெய் போட்டியதினால் அற்பாயுளில் மாண்டகுழந்தைகளைப் பற்றிப் பண்ணையார் சொல்லுவார். சந்திரமணி இந்த விவாதங்களை யெல்லாம் கேட்டு என்ன செய்வதென்று தெரியாமல் தவிப்பாள். இரண்டு பேர் கூறுவதும் சரி என்று சொல்லி விட்டு, இரண்டுக்கும் பொதுவாக ஒன்றைச் செய்வாள்.

இந்த விவாதங்கள் ஒன்றையும் தெரிந்து கொள்ளாமல் நான் வளர்ந்து வந்தேன். எல்லாரும் வியக்கும்படி கொழு கொழுவென்று ஆகி வந்தேன்.

காசிலிங்கம் இந்தக் காலத்தில் அதிகமாக வீட்டிலேயே கழித்தார். சில சமயம் பண்ணையாருடன் வெளியில் போய்ச் சுற்றி வந்தார். அப்போதெல்லாம் அவர்கள் என் அன்னையின் சொத்தைத் திரும்பப் பெறுவதற்குக் கோர்ட்டில் வழக்குத் தொடுப்பது பற்றியே அதிகமாகப் பேசினார்கள். என் அன்னைக்கு உடம்பு இன்னும் கொஞ்சம் தேறட்டும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள்.

சில சமயம் காசிலிங்கம் ஜமீன்தாருடன் வேட்டையாடுவதற்கும் போவார். இதை அடியோடு அவர் நிறுத்திவிட்டால் நல்லது என்பது மந்திரமூர்த்தியின் விருப்பம். இதைப் பற்றிச் சந்திரமணியிடமும் சொல்வார். பேச்சோடு பேச்சாக ஜமீன்தாருடைய குடும்பத்தைப் பற்றியும் சொல்லுவார்.

குங்குமத்துறை ஜமீன்தாரியைச் சேர்ந்த கிராமம் அல்ல. ஆனால் பக்கத்தில் பல கிராமங்கள் ஜமீனுக்கு உட்பட்டவை. குங்குமத்துறையில் ஜமீன்தாருக்குச் சொந்தப் பட்டா நிலங்கள் அதிகம் இருந்தன. அந்த நிலங்களுக்கு அருகில் மந்திரமூர்த்தியின் நிலங்களும் இருந்தன. அதனாலேயே அவர்களுக்குள் விரோதமும், அடிக்கடி விவகாரங்களும் ஏற்பட்டு வந்தன.

ஜமீன்தாருக்கு மூன்று மனைவிமார்கள் உண்டு. இவர்களில் பட்டத்து ராணியாக விளங்கிய மூத்த மனைவிக்கு ஒரு பிள்ளையும் இரண்டு பெண்களும் பிறந்திருந்தார்கள். பிள்ளைக்கு ஆறு வயது. அந்தப் பிள்ளையை 'இளைய மகாராஜா' என்றும், 'யுவராஜா' என்றும் சிப்பந்திகளும் கிராமவாசிகளும் அழைப்பார்கள்.

இப்போதுள்ள ஜமீன்தாரின் தகப்பனார் ரொம்பப் பொல்லாதவர் என்று பெயர் வாங்கினவர். இந்த மகாராஜா நல்ல பெயர் வாங்க வேண்டுமென்று ஆசைப் பட்டவராகத் தோன்றியது.

அவருடைய விருப்பம் நிறைவேறாமற் போவதற்கென்றே வந்தது போல் அவருடைய மைத்துனன் ஒருவன் வந்து அவர் அரண்மனையிலேயே தங்கி யிருக்

தான். அவன் பெயர் சொக்கய்யா. ஜமீன் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அவனை 'மாப்பிள்ளை மகாராஜா' என்று அழைப்பார்கள். அவ்விதம் சொல்லி விட்டு மனத்திற்குள் சபிப்பார்கள்.

சொக்கய்யாவும் ஒரு ஜமீன்தார்தான்' ஆனால் அந்த ஜமீன் ரொம்பவும் கடன் பட்டுப் போனபடியால் கோர்ட்டு நிர்வாகத்தில் இருந்தது. ஆகையால் மாப்பிள்ளை மகாராஜா குங்குமத்துறையிலேயே வசித்து வந்தார்.

ஜமீன்தார் ஆரம்பத்தில் மைத்துனரிடம் மிக்க பிரியமாயிருந்தார். வரவர அவர்களுக்குள்ளே சிநேகிதம் குன்றி விரோதம் வளர்ந்து வந்தது. மைத்துனருடைய நடவடிக்கைகள் ஜமீன்தாருக்குப்பிடிக்காமற் போனதுதான் காரணம்.

அசங்கியமாகப் பேசுவதில் பிரியமுள்ளவர் சிலர், இரண்டு பேருக்கும் யாரோ ஒரு ஒழுக்கங் கெட்ட பெண்ணின் காரணமாகச் சண்டை என்று கிளப்பி விட்டார்கள், இதற்குக் காது, மூக்கு வைத்துப் பெரிதாக்கி, ஊரெல்லாம் சில நாள் இதே பேச்சாக இருந்ததும் உண்டு.

மந்திரமூர்த்தி, ஜமீன்தார் குடும்பத்தைப் பற்றிய இந்தத் தகவல்களையெல்லாம் சொல்லி, "இந்த ஜமீன்தார் சிநேகம் மட்டும் காசிலிங்கத்துக்கு இல்லாமலிருந்தால் நன்றாயிருக்கும். மெள்ள மெள்ளக் கழற்றிக் கொண்டு வந்து விடுவது நல்லது!" என்பார். சந்திரமணியும் அதை ஆமோதிப்பாள். "நமக்கு யாருடைய சிநேகமும் வேண்டாம்; பொல்லாப்பும் வேண்டாம்!" என்பாள்.

காசிலிங்கமும், "ஆமாம்; சீக்கிரத்தில் அங்கிருந்து கழற்றிக் கொண்டு வந்து விடுகிறேன். திடீரென்று ஜமீன்தாரிடம் போவதை நிறுத்தினால் நீ சொல்கிறபடி ஏதாவது பொல்லாப்பில் முடிந்தாலும் முடியும்!" என்பார்.

* * *

ஒரு நாள் மந்திரமூர்த்தி திருநந்திபுரத்துக்குப் போயிருந்தார். அன்றைக்குக் கோர்ட்டில் ஏதோ வழக்கு வருவதாகவும், தாம் அவசியம் தலையைக் காட்ட வேண்டும் என்றும் சொன்னார். "நானே போகாமலிருந்து விட்டால், வக்கீலுக்கு மட்டும் என்ன சிரத்தையிருக்கும்? பணம் கைக்கு வந்துவிட்டது என்று பேசாமலிருந்து விடுவார்!" என்றார். அத்துடன் சந்திரமணியின் சொத்து சம்பந்தமாக வழக்காடுவது பற்றியும் வக்கீலிடம் யோசனை கேட்டு வருவதாகக் கூறி விட்டுப் போனார்.

அன்றைக்குப் பார்த்து ஜமீன்தார் காசிலிங்கத்தை வேட்டைக்குப் போவதற்கு வரும்படி சொல்லி அனுப்பினார். போகும்போது சந்திரமணியிடம் "அநேகமாக நான் வேட்டைக்குப் போவது இதுவே கடைசித் தடவையாக இருந்தாலும் இருக்கும்!" என்று காசிலிங்கம் சொல்லி விட்டுப் போனார்.

* * *

அன்றைக்கெல்லாம் சந்திரமணிக்கு மனம் நிம்மதியாகவே இல்லை. அருவிக் கரை பங்களா வெறிச்சோடிப் போயிருந்தது. "இரண்டு பேரில் ஒருவராவது இல்லாவிட்டால், வீடு கலகலப்பாகவே இல்லை!" என்று அடிக்கடி சமையற்கார ஆச்சியிடம் சொல்லிக் கொண்டாள்.

மனத்தில் என்னவெல்லாமோ விசித்திரமான எண்ணங்கள் உதயமாயின. ஒரு வேளை இந்த ஜமீன்தாரும் நம்முடைய மாமன்மார்களைச் சேர்ந்தவர்தானோ, என்னமோ? ஒருநாள் அரண்மனைக்குள் அவரைப் பிடித்து வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு காகிதத்தில் கையெழுத்துப் போட்டால்தான் ஆச்சு என்று வற்புறுத்தினால் காசிலிங்கம் என்ன செய்வார்? இலேசில் கையெழுத்துப் போட மாட்டார். ஆனால் பத்துப் பேர் சூழ்ந்து கொண்டால் தன்னந் தனியாக என்ன பண்ணுவார்?

அவர்கள் இருவரும் இல்லாத சமயத்தில் இந்த வீட்டுக்கு நம்முடைய மாமன்மார்கள் வந்து விட்டால் என்ன செய்கிறது? அம்மா கையெழுத்துப் போட்டுக் கொடுத்த கடிதத்தைக் கொடு என்று நம்மை வற்புறுத்தினால் என்ன செய்வது? அவர்களை எதிர்த்து நின்று நம்மால் சமாளிக்க முடியுமா? நம்மிடம் அப்படி ஒரு கடிதம் இருப்பது அவர்களுக்குத் தெரிந்திருக்குமா? தெரிந்திருக்கத்தான் வேண்டும். அம்மா கட்டாயம் சொல்லியிருப்பாள். சொத்துக்களை ஒப்புவித்து விடும்படியும் கூறியிருப்பாள். ஆனால் அவர்கள் எங்கே கேட்கப் போகிறார்கள்? அம்மாவை அவ்வளவு மிரட்டி வைத்திருந்தவர்கள் நம்மிடமா பயப்பட்டுவிடப் போகிறார்கள்? நம்மையும் மிரட்டத்தான் பார்ப்பார்கள். "கடிதத்தைக் கொடுக்கா விட்டால், காசிலிங்கத்தின் பேரில் திருட்டுக் குற்றம் சாத்துவோம்!" என்பார்கள். அதற்கெல்லாம் நாம் பயந்து விடக் கூடாது.


பற்களின் சுகாதாரத்திற்கு
சிறந்த மார்க்கம்!
ஆக்டிவ் க்ளோரோபில்லும்
'கோலினஸ்' நுரையும்
நீங்கள் இன்னும் ஒரு பழங்காலத்திய டூத்பேஸ்டையே உபயோகித்து வருகிறீர்களானால், உடனே அதைமாற்றி ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினஸ்' டூத்பேஸ்ட் உபயோகிக்கத் தொடங்குவது நலம்!
இந்த நூதன முறை டூத்பேஸ்டு உங்கள் பற்களை சுத்தமாக்குவதுடன், நிற்பதில்லை. பல் சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, புண்பட்ட ஈறுகளுக்கு உதவி, உங்கள் சுவாசத்தை மணிக்கணக்கில் நறுமணம் கமழ வைத்திருக்கிறது. இதன் அற்புத நுரை ஆக்டிவ் க்ளோரோபிலை வாயின் ஒவ்வொரு மூலைமுடுக்கிற்கும் எடுத்துச் செல்வதனால், உங்களுக்கு மிகுந்த அனுகூலம் கிடைக்கிறது!
பெரிய டியூப் 2 மாதங்களுக்கு வரும்
பற்களை சுத்தம் செய்ய சிறிதளவு 'கோலினஸே' மிகவும் பயன்படவல்லது! ஈரமில்லாத பிரஷில் அரையங்குல அளவு போதுமானது. எனவே, அன்றாடம் வழக்கமாக இருமுறை உபயோகித்தாலும், ஒரு பெரிய டியூப் இரண்டு மாதங்களுக்குத் தாராளமாக வரும். இன்றே ஆக்டிவ் க்ளோரபில் சேர்ந்த 'கோலினஸ் உபயோகிக்க ஆரம்பியுங்கள்!
உங்கள் குழந்தைகளுக்கு இலவசம்
"நகைமுகனும் அவனுடைய பிராணி நண்பர்களும்" என்ற நயமான சித்திரக் கதைக்கு இப்பொழுதே எழுதுங்கள் :
நகைமுகன்,
இலாகா 50 C,
த. பெ. 541, பம்பாய்
Kolynos
Chlorophyll
GK. 213

ஆனால் அவர்கள் எதற்கும் துணிந்தவர்களாயிற்றே? நம்மைக் காலும் கையும் கட்டிப் போட்டு விட்டு, வீட்டைக் குடைந்து சோதனை செய்தாலும் செய்வார்கள். பெட்டிகளை உடைத்துப் பார்ப்பார்கள். கடிதத்தை எடுத்துக் கொண்டு போய் விட்டால், அப்புறம் என்ன ஆவது?

ராட்சத ஜன்மங்கள்! கம்ஸனைப் போல் இந்தக் குழந்தையைப் பிடுங்கிக் கொண்டு, 'கடிதத்தைக் கொடுக்கிறாயா? உன் குழந்தையைக் கழுத்தை நெரித்துக் கொன்று விடட்டுமா?' என்று கேட்டாலும் கேட்பார்கள்! அப்போது குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று தோன்றுமே தவிர, சொத்துப் பெரிது என்று தோன்றுமா?

எதற்காக இவ்வளவு தூரத்தில் வந்து இந்த அருவிக்கரை பங்களாவில் நாம் குடி இருக்க வேண்டும்? ஊருக்கு நடுவில் வேறொரு வீட்டுக்குப் போய் விட்டால் என்ன? மந்திரமூர்த்திப் பண்ணையாரின் வீட்டிலேயே எல்லாரும் இருந்து விடலாம். அவருக்கு எவ்வளவோ சந்தோஷமா யிருக்கும். அவரைப் போல் நல்ல மனிதர் இன்னொருவர் உலகமெல்லாம் தேடினாலும் கிடைப்பாரா? ஏதோ முற் பிறவியில் செய்த புண்ணியத்தினாலும் அம்மாவின் ஆசீர்வாதத்தினாலும் அல்லவா இப்படிப்பட்ட பரோபகாரியின் சிநேகம் நமக்குக் கிடைத்தது? என்ன பொறுமை! என்ன பொறுமை! காசிலிங்கத்தின் முன் கோபத்தை யெல்லாம் எவ்வாறு சமாளித்துக் கொள்ளுகிறார்? இவருடைய மனத்தில் ஒன்றும் கபடமில்லை என்று தெரிந்திருப்பதினால்தான் பொறுத்துக் கொள்கிறார். அம்மாதிரி உணர்ந்து பொறுமையா யிருப்பதற்கு எவ்வளவு நல்ல குணம் வேண்டும்? அப்பேர்ப்பட்டவருடைய வீட்டிலேயே போய் ஒரே குடும்பமாக இருந்து விடுவதில் என்ன தவறு? — ஊருக்கு நடுவிலுள்ள அந்த வீட்டில் இருந்து விட்டால், நிர்ப்பயமாக இருக்கலாம். "இருட்டிப் போயிற்றே? இன்னும் அவர் வரவில்லையே?" என்று திக், திக்கென்று அடித்துக் கொள்ள வாசலைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம் அல்லவா?

அதிலும் ஓர் அபாயம் இருக்கிறது. ஒரே வீட்டில் எப்போதும் ஒன்றாயிருந்தால், காசிலிங்கத்தின் முன் கோபம் எப்போது எந்த ரூபம் எடுத்துக்கொள்ளுமோ, தெரியாது. பண்ணையாரின் பொறுமைக்கும் ஒரு நாள் பங்கம் வந்து விடலாம். அதனால் அவருடைய சிநேகத்தையும் இழக்கும்படி நேரிடலாம். வேண்டவே வேண்டாம்! சற்றுத் தூரத்தில், தள்ளி இருந்தாலும், தனித்தனி வீட்டில் இருப்பதே நல்லது.

சந்திரமணியின் யோசனை இப்போது இன்னொரு பக்கம் திரும்பியது. வேட்டையாடுகிறதாகச் சொல்லி இரண்டு பேரும் கையில் துப்பாக்கியுடன் போகிறார்களே? ஜமீன்தாரும் முன் கோபக்காரர் என்று கேள்வி. வேட்டையாடப் போன இடத்தில் இரண்டு பேருக்கும் ஏதாவது சண்டை நேர்ந்து விட்டால் என்ன செய்கிறது? துப்பாக்கிகளை ஒருவர் மேல் ஒருவர் திருப்பிக் கொண்டால் என்ன செய்கிறது? புலி சிறுத்தைகளைக் கொல்லும் துப்பாக்கியின் குண்டினால் மனிதர்களைக் கொல்ல முடியாதா, என்ன? அல்லது, சிறுத்தை மேல் சுட்ட குண்டு தவறிப் போய் மனிதர்மேல் பட்டு விட்டால்தான் என்ன செய்வது?...... இந்த எண்ணம் தோன்றியதும் சந்திரமணிக்குக் கதி கலங்கியது. அதை மாற்றி வேறு விஷயம் பற்றிச் சிந்திக்க முயன்றாள். ஆனால் திரும்பத் திரும்ப அந்த எண்ணமே வந்து கொண்டிருந்தது.

ஆண்டவனே! இன்று அவர் சௌக்கியமாகச் சீக்கிரம் திரும்பி வந்து சேரட்டும்! அவர் காலில் விழுந்து கெஞ்சியாவது இனிமேல் வேட்டைக்குப் போகாமல் செய்து விட வேண்டும்......

இந்தமாதிரி எண்ணங்கள் தோன்றிப் பகலெல்லாம் சந்திரமணிக்கு நிம்மதியில்லாமல் செய்து வந்தன. இரவு நெருங்கியபோது, உள்ளத்தின் தத்தளிப்பு அதிக மாயிற்று. "எத்தனையோ நாள் போயிருக்கிறார்! இன்றைக்கு மட்டும் என்ன வந்தது? எதற்காக இப்படி அசட்டுக் கவலைப்படுகிறோம்?" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு பார்த்தும் மனத்தில் திடம் ஏற்படவில்லை.

மேற்கு மலைத் தொடரின் கீழ்ப் புறத்து அடிவாரங்களில் சூரியன் சீக்கிரமாகவே மறைந்து விடும். ஐந்து மணியிலிருந்தே சூரியனைப் பார்க்க முடியாது. இருளும் விரைந்து வந்து விடும்.

ஆறு மணி சுமாருக்குச் சந்திரமணி குழந்தைக்கு வழக்கம்போல் பால் புகட்டுவதற்காக மடியில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். ஆச்சி கிண்டியில் காய்ச்சிய பாலும் புகட்டுவதற்குப் பாலாடையும் கொண்டு வந்து வைத்தாள்.

குழந்தையா யிருந்தபோது எனக்குப் பசி ரொம்ப அதிகமாயிருந்ததாம். அம்மா

விடம் பால் குடித்து விட்டுப் போதாமல் 'வீச் வீச்' என்று அலறுவேனும். "மூன்று மாதத்தில் இருந்தே தாய்ப் பாலுடன் பசுவின் பாலும் குடித்துத் தான் நீ வளர்ந்தாய்!" என்று மந்திர மூர்த்தி அடிக்கடி என்னிடம் சொல்லுவ துண்டு. "இப்போது பால் என்றால் உனக்கு வேம்பாய்ப் போய் விட்டதே!" என்று பிற்காலத்தில் அவர் என்னைக் கோபித்துக் கொள்வார்......

முக்கியமான கட்டத்தில் எதையோ விட்டு விட்டு எதையோ எழுதத் தொடங்குகிறேன். என்னுடைய பிரதா பங்களை யெல்லாம் எழுதுவதற்குப் பின் னால் எவ்வளவோ நேரம் இருக்கிறது...

அம்மா என்னை மடியில் போட்டுக் கொண்டு பாலாடையினால் பால் புகட்டிக் கொண்டிருந்தாள்.

"ஆச்சி! குழந்தையின் உடம்பெல் லாம் பால் வழிந்து விட்டது. அலம்பு வதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறீர்களா?" என்றாள்.

"இதோ கொண்டு வருகிறேன்" என்றாள் சத்திரத்து அம்மாள்.

அச்சமயம் ஏதோ சத்தம் கேட்டது. சந்திரமணி வாசற் பக்கம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

போலீஸ்காரர்கள் கும்பலாக வரு வதைக் கண்டு பிரமித்தாள்.

சந்திரமணியின் குடல்களில் வேதனை உண்டாயிற்று. நெஞ்சு வலித்தது. தொண்டையில் உமிழ் நீர் விழுங்க முடியவில்லை. உடம்பு வியர்த்தது. உள்ளங் கால் முதல் உச்சந் தலை வரை யில் ஒரு நீளமான கூரிய ஊசியினால் குத்தியது போல் வலித்தது.

மனத்தை உறுதிப் படுத்திக் கொண்டு சமாளித்துக் கொள்வதற்காக வேறு பக்கம் திரும்பினாள். பங்களாவின் பின் பக்க வாசல் வழியாகவும் இரண்டு போலீஸ்காரர்கள் வருவதைக்கண்டாள்.

மற்றொரு பக்கம் திரும்பிப் பார்த்தாள். அங்கே பலகணி வழியாக ஒரு பெரிய போலீஸ்காரரின் தலை தெரிந்தது.

பிறகு, எந்தப் பக்கம் எங்கே திரும் பிப் பார்த்தாலும் போலீஸ்காரர்களின் தலைப்பாகைகளே கண்முன் தோன்றின.

சந்திரமணியின் தலை சுழன்றது. அரு விக் கரை பங்களா சுழன்றது. தூரத் தில் தெரிந்த மலையும் அருவியும் சுழன் றன. மலை அடிவாரத்து மரங்கள் சுழன் றன. மடியிலே குழந்தையைப் பார்த் தாள். குழந்தையும் சுழன்று சுழன்று வந்தது. பால் கிண்டியும், பாலாடையும் விளையாட்டுச் சாமான்களும் சுழன்றன.

அச்சமயம் வாளியில் தண்ணீர் கொண்டு வந்த ஆச்சியும் போலீஸ்காரர் களைப் பார்த்து விட்டாள்.

"ஐயையோ!" என்று கூச்சலிட்டுக் கொண்டு, தண்ணீர் கொண்டு வந்த பாத்திரத்தைக் கீழே தடால் என்று போட்டு விட்டாள்.

அந்தச் சத்தம் சந்திரமணிக்குச் சிறிது சுயநினைவை உண்டாக்கியது.

இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் தான் தைரியமா யிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

மறுபடியும் வாசற்பக்கம் பார்த்தாள்.

முதலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார். அவருக்கு வழி காட்டிக் கொண்டு வந்தவர் போல், இன்னொரு வாலிபர் வந்தார். அவரை ஒரே ஒரு தடவை சந்திரமணி சற்றுத் தூரத்தி லிருந்து பார்த்திருந்தாள். அவர்தான் ஜமீன்தாரின் மைத்துனர் சொக்கையா என்றும் தெரிந்து கொண்டிருந்தாள். அவருடைய குணத்தைப் பற்றி மந்திர மூர்த்திப் பண்ணையார் கூறியிருந்தது உடனே நினைவுக்கு வந்தது.

இதனால் மனோநிடம் கொஞ்சம் அதிகமாயிற்று. "இது ஏதோ இந்த ஆளின் சூழ்ச்சி. இதில் நாம் ஏமாந்து போகக் கூடாது" என்று நினைத்துக் கொண்டாள்.

ஜமீன்தாரின் மைத்துனர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் ஏதோ மெதுவான குரலில் கூறினார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் பெரிய குரலில் "ஏன், அம்மா? காசிலிங்கம் எங்கே? வீட்டுக்கு வந்து விட்டாரா?" என்று கேட்டார்.

சந்திரமணி தைரியமாக, "இன்னும் வரவில்லை; ஜமீன்தாருடன் வேட்டைக்குப் போனார்!" என்றாள்.

"அது எங்களுக்குத் தெரியும். வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டாரா என்றுதான் கேட்டேன்!"

"இன்னும் வரவில்லை யென்றுதான் சொன்னேனே? ஒரு வேளை ஜமீன்தாருடன் அரண்மனைக்குப் போனாரோ, என்னமோ?" என்றாள் சந்திரமணி.

"ஓகோ! அப்படியா?" என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவருடைய குரலில் ஏளனம் தொனித்தது.

"ஏன் கேட்கிறீர்கள்? எதற்காக இவ்வளவு பேர் அவரைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சந்திரமணி.

"சரி; உனக்கு எப்படியும் தெரிந்துதான் ஆக வேண்டும். நானே சொல்லி விடுகிறேன். காசிலிங்கம் ஜமீன்தாருடன் வேட்டைக்குப் போனார் அல்லவா? ஜமீன்தாரையே வேட்டையாடி விட்டார்!"

"என்ன? என்ன?"

"காதில் விழவில்லையா? உன் புருஷன் காசிலிங்கம் ஜமீன்தாரைச் சுட்டுக் கொன்று விட்டான்! அதற்காகத்தான் அவனைத் தேடிக் கொண்டு வந்தோம்!"

சந்திரமணி சட்டென்று எழுந்து நின்று "பொய்! பொய்! பொய்! நீங்கள் சொல்வது சுத்தப் பொய்! இது ஏதோ சூழ்ச்சி! ஜமீன்தாரை எதற்காக என் புருஷர் சுட வேண்டும்? அவர்கள் இருவரும் சிநேகிதர்களாயிற்றே!" என்று சத்தமிட்டுக் கூறினாள்.

"அடே அப்பா! இது என்ன பத்திர காளி சொரூபம்?" என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர். ஆனாலும் அவருக்கும் கொஞ்சம் தயக்கம் ஏற்பட்டது.

* * *

இன்றைய தினம் எந்தப் பயங்கரமான குற்றம் என்பேரில் சுமத்தித் தண்டனை விதித்துச் சிறையில் அடைத்திருக்கிறார்களோ, அதே கொலைக் குற்றத்தை ஒரு சமயம் என் தந்தையின் பேரிலும் சுமத்தினார்கள்! இது விந்தையிலும் பெரிய விந்தை அல்லவா?

என் அன்னை சந்திரமணி தேவியின் ஒப்பற்ற அன்பு ஒரு வஜ்ர கவசமாக இருந்து என் தந்தைமீது அந்தக் குற்றம் ஒட்டாமல் பாதுகாத்தது! (தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

அஞ்சலி செய்கிறோம்

அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதி தேவி இந்த இதழ் அட்டையில் வெளியிட்டுப் பணிகிறோம்!

அறிவுத் தெய்வத்தின் பேரருள் இருப்பதினாலே யன்றோ தூக்கணாங் குருவி அவ்வளவு நேர்த்தியாகக் கூடு கட்ட முடிகிறது!

கலைத் தேவியின் கருணைப் பார்வை இருப்பதினாலன்றோ, பூவுக்கு நோகாமல் தேனீ, மலரிலிருந்து தேனை எடுத்துச் சேகரிக்க முடிகிறது!

வெள்ளைக் கலையுடுத்தி, வெண் தாமரையில் வீற்றிருக்கும் அருட் தேவியின் கடைக் கண் பார்வையினாலன்றோ வீணையினின்று அத்தகைய இன்னொலிகள் எழுப்ப முடிகிறது; அதைக் கேட்டு நாமும் பரவசம் அடைய முடிகிறது!

மலர்வாணியின் கிருபையினாலன்றோ, தீமை நசிந்து நன்மையும் நற்காரியங்களும் நடக்கின்றன! ஆகவேதான் மகாகவி பாரதியார் பின்வருமாறெல்லாம் பாடுகிறார்:

வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
 வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
 கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
 ஓதும் வேதத்தின் உண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
 கருணை வாசகத் துட்பொரு ளாவாள்

கலைத் தேவியை, தமிழகத்திலே ஒவ்வொரு வீட்டிலும் இந்த வாரம் கொண்டாடியிருப்பார்கள். தொழில் செய்பவர்கள் யாவரும் ஆயுத பூஜை செய்து அஞ்சலி செலுத்தியிருப்பார்கள். கலை மடந்தையின் பேரருளால் நாட்டில் கலைவளமும் தொழில் வளமும் பெருகுவதாக!

விழாக் கொண்டாட வேண்டியதுதான்!

"இந்த அதிசயத்தைக் கேட்டீர்களா! நேற்று வானிலை ஆராய்ச்சிக் கழகத்தார் 'இன்று மழை பெய்யும்' என்று அறிக்கை விட்டார்கள். மழை பெய்தே விட்டது!"—இவ்வாறு வானிலை ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னறிக்கைகளைப் பரிகசிப்பதற்காகச் சொல்லுவதுண்டு. பொதுவாக, வானிலை ஆராய்ச்சி இலாகாவின் முன்னறிக்கைகளின்படி எதுவும் நடப்பதில்லை. எப்போதேனும் நடந்து விட்டால் அது ஓர் அதிசயந்தானே!

பொதுவாக அரசாங்க இலாகாக்கள் போடும் திட்டங்கள் குறிப்பிட்டபடி காரியத்தில் நடைபெறும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை.

திட்டங்கள் வகுப்பது அரசாங்க இலாகாக்களின் பொறுப்பு. அவை நிறைவேறுவதோ சர்வேசுவரனுடைய விருப்பம்!

எந்த அரசாங்க இலாக்காவையேனும் ஒரு புது மந்திரியிடம் ஒப்புவித்தால், அவர் சில காலம் வரையில் அந்த இலாக்காவில் தாம் செய்யப் போகும் சீர்திருத்தங்களையும் முன்னேற்றங்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். பொது மக்கள் கேட்டு விட்டுப் புன்னகை புரிவார்கள்.

"இம்மாதிரி உமக்கு முன்னால் எத்தனையோ பேர் பேசியாகி விட்டது!" என்று நினைத்துக் கொள்வார்கள்.

சில காலத்துக்குப் பிறகு புதிய மந்திரியும் அப் பேச்சுக்களை மறந்து விடுவார்; ஜனங்களும் மறந்து போவார்கள்.

இந்தப் பொது வழக்கத்துக்கு மாறாக, யாரேனும் ஒரு மந்திரி "என்னுடைய இலாக்காவில் இன்னின்ன சீர்திருத்தங்களையும் முன்னேற்றங்களையும் செய்யப் போகிறேன்" என்று சொல்லி, அவற்றை உண்மையிலேயே செய்து முடித்தால், அது பெரும் அதிசயமே அல்லவா!

** ** **

விஞ்ஞான யுகத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் புதிய கருவிகளில் ரேடியோ ஓர் அற்புதமான கருவி. ரேடியோவின் மூலமாகப் பொது மக்களிடையே அறிவையும் பண்பாட்டையும் பல கலைகளையும் நல்ல முறையில் வளர்க்கலாம். தேசத்திலுள்ள ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திலும் ஞான தீபத்தை ஏற்றி வைக்கலாம்.

அந்தச் சாதனத்தை எந்த முறையில் உபயோகப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது, அதனால் விளையும் நன்மைகள்.

மிகச் சக்தி வாய்ந்த சாதனமாக இருப்பதாலேயே, ரேடியோவை இந்திய சர்க்காரின் சொந்தப் பொறுப்பாக வைத்துக் கொண்டு, அதற்கு ஒரு தனி இலாக்காவையும் வைத்து நடத்தி வருகிறார்கள்.

அகில இந்திய ரேடியோ ஆரம்பமான புதிதில் அதனால் விளையக்கூடிய நலன்களைப் பற்றி வெகுவாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்.

பிறகு, யுத்தம் வந்தது. ரேடியோ, யுத்தப் பிரசாரத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் சாதனமாயிற்று.

சுதந்திர இந்திய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, ரேடியோ இலாக்கா முன்னேற்றம் அடையும் என்று பலரும் எதிர்பார்த்ததற்கு மாறாக வரவரச் சீர்கேடுற்று வந்தது.

"ரேடியோ மகாதேவர்" என்று இந்தப் பத்திரிகையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியிருந்தது நேயர்கள் சிலருக்கு நினைவிருக்கலாம்.

அதற்குப் பிறகு நிலைமை பின்னும் சீர்கெட்டது. ஸினிமா இசைத்தட்டுகளை ஒலிபரப்பி விளம்பரப்படுத்துவதற்காகவே ரேடியோ நிலையங்கள் ஏற்பட்டனவோ என்று தோன்றியது.

ஸினிமா சங்கீதமோ வரவரக் கீழ் நோக்கிச் சென்று 'டப்பா சங்கீதம்' ஆகி வந்தது.


ஆகவே, ரேடியோவை எப்போது திருப்பினாலும் 'அப்பா! அப்பா! டப்பா! டப்பா!" என்ற கூச்சல் கேட்டது.

நமது பழமையான, ஒப்புயர்வற்ற இந்தியப் பண்பாட்டுக்கும், கர்நாடக சங்கீதத்துக்கும் ரேடியோ இப்படிச் சீர்கெட்டு வருவதினால் விளையக் கூடிய அபாயங்களை எடுத்துக் காட்டிக் "கல்கி"யில் பல கட்டுரைகள் எழுதினோம்.

அதே சமயத்தில், ஸ்ரீ கேஸ்கர் இந்திய அரசாங்கத்தில் ரேடியோ இலாகா மந்திரியாக வந்தார். "ரேடியோ நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்தப் போகிறேன்!" என்று சொன்னார்.

ஆச்சரியம் என்னவென்றால், அவர் சொன்னபடியே காரியத்தில் செய்து முடித்து விட்டார். ரேடியோ நிகழ்ச்சிகளின் தரம் பாராட்டக்கூடிய அளவில் உயர்ந்து விட்டிருக்கிறது.

இந்த முன்னேற்றம் குறிப்பாகச் சென்ற ஒரு வருஷத்தில் நேர்ந்திருக்கிறது.



சென்னை மயிலாப்பூர் பிரபல பட்டு ஜவுளி வியாபாரிகளான ராதா ஸில்க் ஹவுஸ் எம்போரியம் புரொப்ரைட்டர் ஸ்ரீ ஆர். கே. ராதாகிருஷ்ண செட்டியார் குமாரர் சிரஞ்சீவி **ஆர். கோதண்டராமன் (B. Com.)** அவர்களுக்கும், திருநாகேஸ்வரம் ஜி. கே. திருவேங்கடம் செட்டியார் குமாரி செள. **பெருந்தேவிக்கும்** கும்பகோணத்திற்கு அடுத்த இஞ்சிக்கொல்லை கிராமத்தில் சென்ற மாதம் 9ம் தேதி வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும், பரிசுகளும் வந்து குவிந்தன.

வாழ்க, மணமக்கள்!

தென்னாட்டு ரேடியோ நிலையங்களில் சங்கீதத்தின் தரமும் நாடக நிகழ்ச்சிகளின் தரமும் நிச்சயமாகச் சென்ற ஆண்டில் உயர்ந்திருக்கின்றன.

அக்டோபர் மாதத்தை 'ரேடியோ மாதம்' என்று குறிப்பிட்டு, அகில இந்திய ரேடியோ நிலையத்தார் இம்மாதம் முழுவதும் நீடிக்கும் பெரும் விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

விழாக் கொண்டாட வேண்டியதுதான்; அகில இந்தியா ரேடியோ நிலையத்துக்கு விழாக் கொண்டாடுவதோடு, ரேடியோ இலாகாவுக்குப் பொறுப்பு வகிக்கும் இந்திய சர்க்காரின் மந்திரி ஸ்ரீ கேஸ்கருக்கும் சேர்ந்து விழாக் கொண்டாடுவதும் பொருத்தமாயிருக்கும்.

ரேடியோ நிகழ்ச்சிகளில் இனி முன்னேற்றத்துக்கே இடமில்லை என்று யாரும் சொல்ல மாட்டார்கள். இன்னும் எவ்வளவோ துறையில் அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது.

அத்தகைய அபிவிருத்திகளைச் செய்வதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு வேண்டும்.

ரேடியோவின் உபயோகம் நாட்டில் இன்னும் விஸ்தாரமாகப் பரவ வேண்டும்.

இவ்வாறு பொது ஜனத் தொடர்பை மேலும் வளர்த்துக் கொள்ளும் நோக்கத்துடனேயே அகில இந்திய ரேடியோ நிலையத்தார் அக்டோபர் மாத விழாவை நடத்துகிறார்கள். (தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதற்காக அல்ல.)

இந்தியா முழுவதிலும் அகில இந்தியா ரேடியோவைச் சேர்ந்த இருபத்தொரு நிலையங்கள் இருக்கின்றன. மேற்படி நிலையம் ஒவ்வொன்றிலிருந்தும் பிரபல வித்வான்களின் சங்கீதக் கச்சேரிகள், நாடகங்கள், பிரசங்கங்கள், பாலர் நிகழ்ச்சிகள், பெரியவர் நிகழ்ச்சிகள், கவி அரங்கம், இசைப்போட்டி முதலியவை நடைபெறும். இந்த ரேடியோ விழாவை ஒட்டிய பல நிகழ்ச்சிகள் சென்னையிலே சில தியேட்டர்களிலும் சங்கீத சபைகளிலும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அகில இந்தியாவிலும் உள்ள ரேடியோ உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் அக்டோபர் விழாவில் ஒத்துழைக்க முன் வந்திருக்கிறார்கள். இந்த மாதத்தில் ரேடியோ பெட்டிகள் வாங்குவோருக்கு இலவச லைசன்ஸ் போன்ற சில சலுகைகள் அளிக்கிறார்கள்.

தென்னாட்டிலுள்ள ரஸிகர்களும் பொது மக்களும் இந்த ரேடியோ மாத நிகழ்ச்சிகளில் ஊக்கம் கொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நிகழ்ச்சிகளைக் கேட்ட பின்னர், அவரவர்களுடைய யோசனைகளை ரேடியோ நிலையங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அக்டோபர் ரேடியோ விழாவை முன்னிட்டு இம்மாதத்து ஐந்து "கல்கி" இதழ்களிலும் "சோமு"வின் விசேஷக் கட்டுரைகள் வெளியாகின்றன. அவற்றைக் குறித்தும் நேயர்கள் தங்கள் கருத்தை எழுதி அனுப்பலாம்.

மருத்துவக் கண்காட்சி

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது தமிழகத்தின் முதுமொழி. அந்தக் குறைவற்ற செல்வத்தைச் சென்னையிலிருந்து பதினேழு மைல் தூரத்திலுள்ள அலமாதி கிராமவாசிகளுக்குச் சென்னை ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் சென்ற நான்கு ஆண்டுகளாக இலவசமாக வழங்கி வருகிறார்கள். ஆம், வைத்திய உதவி அளித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு ஞாயிறு தோறும் சரியாக இரண்டு மணிக்கு வைத்தியக் கல்லூரி மாணவர்கள், மருந்துகள், ஊசி மருந்துகள், சோக்கள் முதலியவற்றுடன் ஒரு காரில் ஏறிக்கொண்டு அலமாதிக்குப் போய்ச் சேருகிறார்கள். சரியாக மாலை ஆறுமணி வரை யார் யாருக்கு எந்த எந்த விதமான வைத்திய உதவி வேண்டுமோ அந்த வகையில் எல்லாம் உதவி அளிக்கிறார்கள். ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளாக இருந்து ஆஸ்பத்திரியில் சேர்த்து வைத்தியம் செய்தால் பிழைக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் அந்த நோயாளியைத் தங்களுடனேயே காரில் அழைத்து வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்து வைத்தியம் செய்கிறார்கள். இப்படிச் சென்ற நான்கு ஆண்டுகளாக அலமாதி கிராமத்தில் நல்ல பணிபுரிந்து அந்தக் கிராமத்தில் 'நோய்' என்னும் பிசாசைப் பெரிய அளவில் விரட்டியிருக்கிறார்கள். நிரந்தரமாக அங்கே ஒரு ஆஸ்பத்திரி கட்டவும் முயன்று வருகிறார்கள்.



இதற்கெல்லாம் தேவையாகும் பணத்தை, உதவி நாடகங்கள், கச்சேரிகள் மூலம் திரட்டுவதன்றிப் பெரும்பகுதி தாங்கள் நடத்தும் மருத்துவக் கண்காட்சி மூலம் பெற்று வருகிறார்கள் என்னும் விஷயம் நேயர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும். இரண்டு ஆண்டுகளாக அவர்கள் நடத்திய மருத்துவக் கண்காட்சியைப் பொது மக்கள் ஏராளமான பேர் பார்த்துப் பெரும் திருப்தியடைந்து வந்திருக்கிறார்கள். உடற் கூறைப் பற்றிய உண்மைகளையும், நோய்களைத் தடுக்கும் முறைகளைப் பற்றியும், நவீன சஸ்திர சிகிச்சை முறைகளைப் பற்றியும் அறியப் பொதுமக்களுக்கு நல்லதோர் வாய்ப்பாக அமைந்திருந்தன, இந்தக் கண்காட்சிகள். இதற்கு அவர்கள் கொடுத்த பணம், அவர்கள் அறிவு வளர்ச்சிக்கு மட்டுமன்றி நல்ல பணிக்கும் பயன்பட்டிருக்கிறது என்பதில் யாருக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி இருக்கத்தானே செய்யும். அத்தகைய நல்ல வாய்ப்பு இந்த ஆண்டும் ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் அளிக்க முன் வந்திருக்கிறார்கள். அக்டோபர் 7-ம் தேதி முதல் 17-ம் தேதி வரை வைத்தியக் கண்காட்சி ஸ்டான்லி வைத்தியக் கல்லூரியில் நடத்துகிறார்கள். இதைப் பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, நல்ல பொதுப் பணிக்கும் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அபலை மனம்

சம்பந்தம்

அந்த ஊருக்கு மாற்றலாகி இன்னும் ஐந்து நாட்கள் கூட முற்றும் ஆகவில்லை. வீட்டில் இறக்கின சாமான்கள் அனைத்தும் போட்டது போட்ட வாக்கில் ஆங்காங்கே அப்படி அப்படியே கிடந்தன. அவைகளை ஒழுங்காய் எடுத்து வைக்க அவனுக்கு நேரம் இருந்தால்தானே! ஊர் தபாலாபீசில் வேலை ஏற்றுக் கொண்ட தேவபாலனுக்குத் தினம் காரியாலய அலுவலே சரியா யிருந்தது. வரும் ஞாயிற்றுக் கிழமை விடுமுறையை ஆவலாய் எதிர்பார்த்திருந்தான் அவன்.

ஆனால் அதற்குள் ஊருக்குக் கடிதம் போட வேண்டுமென்று ஒற்றைக் காலால் நின்றாளே அவன் மனைவி ராதாமணி!

"ஏன் ராதா, நான்தான் இங்கு வந்த மறு நாளே 'சுகமாய் வந்து சேர்ந்தோம்' என்று ஊருக்குக் கடிதம் எழுதிப் போட்டு விட்டேனே, பிறகு நீ ஏன் அவசரப்படுகிறாய்?"

"கல்லூரிக்கு விடுமுறையாம். தங்கை கமலா ஊருக்கு வந்திருக்கிறாளாமே!"

"இருக்கட்டுமே. வீட்டைக் கொஞ்சம் ஒழுங்கு படுத்திக் கொண்டு, பிறகு கடிதம் எழுதேன்" என்றேன்.

"உம், டில்லியிலிருந்து நேரே திருச்சிக்குச் சென்று கொண்டிருந்த உங்கள் தங்கை குடும்பத்தை மாத்திரம், எதிர்பாராமல் ரயிலில் சந்தித்து, வழியிலேயே இறக்கத் தெரிந்ததாக்கும்" என்றொரு விஷமச் சிரிப்பை நெளிய விட்டாள் ராதாமணி.

"அடடா, அப்படியா அது! நான் சொல்வதை நீ சரியாய்ப் புரிந்து கொள்ளவில்லையே! இங்கு இறைந்து கிடக்கும் சாமான்களை ஒழுங்குபடுத்தி, படங்களையெடுத்து வரிசையாய் மாட்டி, உன் ஜாலர் மணி திரைகளை நிலைப்படிக்கு ஒன்றாகக் கட்டி அழகுப் படுத்திக் கொண்டு, பிறகு உன் தங்கையை அழைக்கக் கூடாதா, என்கிறேன்?"

"இருக்கட்டும், பரவாயில்லை. கமலா என் தங்கைதானே? அவள் வந்தால் இதையெல்லாம் எடுத்து வைப்பதில் சற்று உதவியாய்க் கூட இருப்பாளே!"

"அப்படியா அது! சரி, சரி உடனே எழுதிப் போடு" என்று சொல்லிக் கொண்டே காரியாலயத்துக்குச் சென்று விட்டான் தேவபாலன்.

கமலா கல்லூரியில் படிக்கிறதிலே அக்காள் ராதாமணிக்கு அளவு கடந்த பெருமை. அதோடு அவளைப் பார்த்தும் வெகு நாட்களாகிறது. அதனால் 'இக்கடிதம் கண்டதும் உடனே வரவும்' என்றொரு அவசரக் கடிதம் எழுதித் தவறாமல் அன்றையத் தபாலிலேயே சேர்த்து விட்டாள் ராதாமணி.

அக்காளுக்குக் கலியாணம் நடந்த சமயத்திலே கமலா, கல்லூரியில் இடம் பிடிப்பதில் முனைந்திருந்தாள். அதன் பிறகு அநேக காரணங்களால் அக்காளைச் சந்திப்பதற்கில்லாமலும் போய் விட்டது. ராதாமணி குடித்தனம் நடத்துவதைப் பார்க்கக் கமலாவுக்குக் கொள்ளை ஆசை. அதனால் அக்கடிதத்தைக் கண்டதும் உடனே புறப்பட்டு வந்து விட்டாள் கமலா.

ராதாமணியும் தேவபாலனும் ரயிலடிக்குச் சென்று கமலாவைக் கூட்டி வந்தார்கள்.

கமலாவை நேரில் பார்த்ததும் பிரமித்தே போனான் ராதாமணி. இந்த ஒன்றரை வருஷத்தில் கிருகிருவென்று எப்படி வளர்ந்திருந்தாள் அவள்!

ராதாமணியின் வதனத்தில் என்றுமில்லாத ஒருவித பெருமையே விகசித்தது.

அன்றையிலிருந்து தேவபாலன், ஆபீஸ் அலுவலை ஒழுங்காய் முடித்துக் கொண்டு வேளையோடு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். பை நிறைய நல்ல பழமும் நறுமணப் புஷ்பமும் வாங்கிவரத் தவறுவதில்லை.

அவன் நடந்து கொண்ட விதம் ராதாமணிக்கு மிகுந்த திருப்தி யளித்தது.

அவளும், நெய்யையும் சர்க்கரையும் நிறைய வாங்கிப்போடச் சொல்லித் தன் தங்கைக்குத் தினம் ஒரு பட்சணமாகச் செய்து போட்டாள். மூவரும் சேர்ந்து கும்மாளத்துடன் சாப்பிட்டார்கள்.

ஒருநாள் சினிமா, ஒருநாள் நாடகம் என்று அவர்களுக்கு நாட்கள் உல்லாசமாக ஓடிக் கொண்டிருந்தன. கமலா கல்லூரிப் பெண்ணல்லவா! தேவபாலனிடம் சரளமாய்ப் பழகினாள்.

"உனக்குக் கல்லூரி திறக்கிற வரைக்கும் இங்கேயே இருந்து விடு கமலா" என்று நினைத்த போதெல்லாம் ராதாமணி சொல்லிக் கொண்டிருந்தாள்.

இத்தனை நாட்களாய் 'நீயும் நானுமாய் எதிரும் புதிருமாய்' என்றிருந்த அவ்வீடு கமலாவின் விஜயத்தினால் சற்று கலகலப்பாயிருந்ததைக் கண்டு தேவபாலனுக்கும் மிகுந்த சந்தோஷம்.

தன் பட்டுப் புடவை யனைத்தையும் தினம் ஒவ்வொன்றாகக் கமலாவுக்கு உடுத்திவிட்டு அழகு பார்த்தாள் ராதாமணி. 'இன்றைக்கு நான் உனக்கு உடுத்தி விடுகிறேன், அக்கா' என்று அன்றைய தினம் தன் பத்து முழக் கல்லூரிப் புடவையை ராதாமணிக்குப் பக்குவமாய்ச் சுற்றி விட்டு, முதுகிலும் மூன்று முழத்தைத் தொங்க விட்டிருந்தாள் கமலா. அப்பொழுது வெளியிலிருந்து வந்த தேவபாலன், அடையாளந் தெரியாமல் பட்டுப் புடவை யுடுத்தியிருந்த கமலாவிடம் சென்று "என் சமையல் ஆகிவிட்டதா? கமலாவுக்குப் பிடித்ததாகச் செய்திருக்கிறா யல்லவா?" என்று கேட்டு விட்டான். உடனே அவர்களுக்கிடையே எழுந்த சிரிப்பு அவ் வீட்டையே இரண்டு படுத்தியது.

மறுநாள் தேவபாலனுக்கு விடுமுறை. அன்றைக்கு மூவரும் மலையடிவாரத்துக்கு

உல்லாசப் பிரயாணம் கிளம்பினார்கள். நல்ல வெய்யில்; நாலு இடத்தில் ஏறி இறங்கு வதற்குள் ராதாமணிக்குக் களைத்து விட்டது. 'நான் இப்படியே உட்கார்ந்திருக்கிறேன்' என்று ஒரு ஆரஞ்சுப் பழத்தை உரித்துக் கொண்டு அந்த மரத்தடியிலேயே தங்கி விட்டாள் ராதாமணி.

கமலாவும் தேவபாலனும் கெடுக ஏறிச் சென்றார்கள். கடைசி வரை ராதாமணி கண் களுக்குத் தெரிந்து கொண்டிருந்த அவர்கள் 'திடுக்'கென்று மறைந்து விட்டார்களே! (அதோ! அதோ! அவர்கள்தானே! அப் பொழுது 'சே, மெதுவாய் அவர்களுடன் நாமும் போகாமற் போனேமே' என்றிருந் தது ராதாமணிக்கு.

சற்று நாழிகைக்குள் நாலா பக்கமும் மேகங்கள் சூழ, வானமே இருண்டு காட்டி யது. குன்றின் மீதிருந்த அவ்விருவரும் விடு விடென்று இறங்கிக் கொண்டிருந்தார்கள். பாதி வழியில் வந்து கொண்டிருந்தபொழுது கமலாவின் கிண் கிணிச் சிரிப்பொலி தேவ பாலனின் வெண்கலச் சிரிப்பொலியோடு கலந்து மிதந்து வந்தது ராதாமணிக்கு. 'அப் படிச் சிரிக்க, அவர்களுக்கு என்னதான் கிடைத்ததோ?' என்றே எண்ணினாள் ராதா மணி. நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

அதற்குள் மழை படபட வென்று வந்து விட்டது. தேவபாலனும் கமலாவும் குதித் தோடி வந்து சேர்ந்தார்கள். மூவரும் சற்று நாழிகை அந்த மரத்தடியிலேயே தங்கிப் பார்த்தார்கள். மழை சற்று வலுக்கவே ஓடிச் சென்று சமீபத்திலிருந்த ஒரு பங்களாவின் வெளி வராண்டாவில் ஒதுங்கிக் கொண் டார்கள். 'எனக்கென்னமோ இந்த மழை யில் நனைவதற்கு ரொம்பவும் பிடிக்கிறது அக்கா'' என்றாள் கமலா. 'உம் பிடிக்கும், பிடிக்கும்' என்று தலை யசைத்துக் கொண் டாள் ராதாமணி. மழை ஒன்றும் விற்ப தாகவே தெரியவில்லை. கடைசியில் ஒரு வண்டி அமர்த்திக் கொண்டு அவர்கள் வீடு வந்து சேர்ந்தார்கள்.

வண்டியிலிருந்து இறங்கினபொழுதே நச்சு நச்சென்று நாலைந்து தும்மல்களைச் சேர்ந்தாற் போல் தும்மினாள் ராதாமணி. அன்றிரவு படுத்த அவள் காலையில் எழுந்திருக்கவே யில்லை. தலைவலியும் சுரமுமாக உடம்புக்கு வந்துவிட்டது அவளுக்கு. காலையில் கமலா தான் காப்பி போட்டாள். அக்காளுக்கும் ஆடி ஓடிப் பணிவிடைகள் செய்தாள்.

தேவபாலன் காரியாலயத்துக்கு லீவு போட்டு விட்டு வீட்டிலேயே தங்கிவிட்டான். அன்று மத்தியானம் அவனுடைய மேற்பார் வையில், கமலாதான் சமைத்தாள். அவ னுக்கும் பரிமாறினாள். நாக்கைச் சப்புக் கொட்டியவாறே சமையலைப் பிரமாதமாய்ப் புகழ்ந்தான் தேவபாலன். அறையினுள்ளி ருந்த ராதாமணியின் காதுகளுக்கு அத்தனை யும் விழாமலா இருக்கும்! தன் தங்கையைப் புகழ்வது அவளுக்கென்னவோ பிடிக்கவே



யில்லை. மெதுவாய் எழுந்திருக்கலாம் என்று பார்த்தாள்; முடியவில்லை.

அன்று மாலை முன் கூடத்தில் ‘ஸ்டவ்’ எரியும் சத்தம் கேட்டது. தேவபாலனும் கமலாவும் கூடிக்கொண்டு ‘ஸ்டவ்’வில் ஏதோ தித்திப்புப் பட்சணம் செய்ததாகவே தெரிந்தது அவளுக்கு. சர்க்கரைப் பாகு மணமும் நெய் வாசனையுந்தான் அவளுக்குச் சேர்ந்து வந்ததே! அந்தப் பட்சணம் அவளுக்கு ரொம்பவும் பிடிக்குமே!

மிகவும் மனம் வெதும்பினாள் ராதாமணி. ஒரு நொடியில் தங்கை கமலாமீது அசட்டுப் பொறாமைகூட உதித்து விட்டது அவளுக்கு. "நீங்கள் ஏன் இப்பொழுது அனாவசியமாய் லீவு போட்டுவிட்டு வீட்டில் உட்கார்ந்திருக்கணும்? கடைசியில் அவசரத்துக்கு லீவு கிடைக்காமல் அவதிப் படுவதற்கா?" என்று தன் கணவனைச் சற்று வெகுண்டு கூடக் காட்டினாள் ராதாமணி.

ஒரு சில நாட்கள் ஊர்ந்து சென்றன. ராதாமணியின் மனம் அமைதியை யிழந்து துன்புற்றது. கமலாவை இனி ஒரு கணமும் தன் வீட்டில் வைத்துக் கொள்வதற்கு அவளுக்கு விருப்பமேயில்லை.

அப்பொழுது சமையல் உள்ளிலிருந்து இருவரும் பலத்த குரலில் இரைந்து சிரிக்கும் சத்தம் வரவே, மெதுவாய் எழுந்து, சென்று பார்த்தாள் ராதாமணி. அங்கு அச்சமயம் அடுப்பிலிருந்த சாம்பாரில் கொஞ்சம் கரண்டியில் எடுத்து ஆற வைத்து ‘உப்பிருக்கா, பாருங்கள்!’ என்று தேவபாலனின் நீட்டிய நாக்கில் சொட்டுச் சொட்டாய் ஊற்றிக் கொண்டிருந்தாள் கமலா.

அங்கு அக்காளைப் பார்த்ததும் "என்ன அக்கா இது!" என்றாள் கமலா. "இன்னும் இரண்டு நாள் படுக்கையிலேயே இருக்கச் சொன்னாரே டாக்டர்" என்றான் தேவபாலன்.

"உம். என் உடம்பு இருக்கட்டும். நீ இங்கு வந்து விளையாட்டாய் ஒரு மாதமாகி விட்டதே, கமலா! அங்கே அம்மா தனியாய்த்தானே இருப்பாள்? இப்போது நான் கண்ட சொப்பனத்தை என்னவென்று சொல்வேன்? அம்மா எங்கோ காரில் போய்க் கொண்டிருந்த பொழுது, வழியில் விபத்து ஏற்பட்டுக் கார் உருண்டு பள்ளத்தில் விழுகிறது. அம்மா ‘ஐயோ’ என்று கத்துகிறாள். திடுக்கென்று விழித்துக் கொண்டு விட்டேன். எனக்கு மனம் ஒரே பதட்டமாயிருக்கிறது. சீக்கிரம் சமைத்திருக்கிறதைச் சாப்பிட்டு விட்டுக் கிளம்பு, கமலா. நேரமாகி விட்டது. இந்தப் பத்தரை மணி வண்டிக்கே புறப்பட்டு விடு!" என்றாள்.

"உண்மையாகவா, அக்கா?" என்று தன் கண்களை அகலத் திறந்தாள் கமலா.

"ஆமாம், கமலா. பெண்களுக்கான பெட்டியில் ஏறிக் கொண்டு போய்ச் சேர். போனவுடனே, அங்கிருக்கும் நிலைமையை எழுது; நாங்களும் புறப்பட்டு வருகிறோம்" என்று சொல்லிக் கொண்டே முன் வாசலுக்கு வந்தாள் ராதாமணி.

"ஏன் ராதா! கல்லூரி திறக்கும் வரை கமலா இங்கேயே இருக்கட்டும் என்றாயே முன்னே!" என்று மெதுவாகக் கேட்டுக் கொண்டே வந்தான் தேவபாலன்.

"எல்லாம் எனக்குத் தெரியும். சும்மாயிருங்கள்" என்று பல்லைக் கடித்துக்கொண்டு சொல்லி, முகவாய்க் கட்டையைத் தன் தோளில் இடித்துக் கொண்டே தன் அறையினுள் நுழைந்தாள் ராதாமணி.

அதைக் கேட்ட தேவபாலன், திருதிருவென விழித்துக் கொண்டு அப்படியே சிலைபோல நின்று விட்டான்.

பாவம்! அப்பாவி தேவபாலனுக்கு "அபலை மனம்" எங்கே தெரியப் போகிறது!

ஸ்ரீ கிருபானந்தவாரியார் வடநாட்டு யாத்திரை

செந்தமிழ்க் கடலில் ஆழக் குளித்துச் சிறந்த நல்முத்துக்களைக் கொண்டு வந்து சொல்மாரியுடன் சேர்த்துப் பொழியும் ஆற்றல் படைத்தவரும், பழந்தமிழர் பண்பாட்டிலும் சமய தத்துவங்களிலும் ஆராய்ந்து கண்ட கருத்துக்களை அமுத வெள்ளமாகப் பெருக்கும் ஆற்றல் வாய்ந்தவரும், வடலூரில் ஸ்ரீ ராமலிங்க அடிகளுக்கு ஏற்ற ஞாபகச் சின்னமாக ஞான சபாமண்டபத்தை எழுப்பி ஒப்பற்ற தொண்டு செய்தவருமான ஸ்ரீ கிருபானந்தவாரியார் அவர்கள் நாளது அக்டோபர் மாதம் 11-ம் தேதி வடநாட்டு யாத்திரை தொடங்கும் செய்தியை வட இந்தியாவில் பல இடங்களிலும் வாழும் தமிழர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ வாரியார் அவர்கள் முதலில் சென்னையிலிருந்து பம்பாய்க்குப் பிரயாணமாகிறார்கள். பம்பாயிலிருந்து டில்லி, ஹரித்துவாரம், காசி, கல்கத்தா முதலிய பல ஸ்தலங்களுக்கும் நகரங்களுக்கும் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பாரதகண்டத்தின் வட பகுதியில் உள்ள முக்கியமான புண்ணியஸ்தலங்களைத் தரிசிப்பதுடன் ஆங்காங்கு தமிழர்கள் வாழும் இடங்களுக்குச் சென்று தமிழன்பர்களுடன் அளவளாவி விட்டுத் திரும்புவது இந்த யாத்திரையின் முக்கிய நோக்கம்.

டில்லி, கல்கத்தா, ஜம்ஷெட்பூர் முதலிய வடநாட்டு நகரங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களும் கலைச் சங்கங்களும் ஸ்ரீ வாரியாரின் பிரயாணத்தை நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஸ்ரீ வாரியாரைச் சொற்பொழிவு நிகழ்த்துமாறு அழைக்க விரும்பும் அன்பர்கள் பின்வரும் சென்னை விலாசத்துக்கு எழுத வேண்டும். மேற்படி கடிதங்கள் அவ்வப்போது ஸ்ரீ வாரியார் தங்கியுள்ள இடங்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

கடிதம் எழுத வேண்டிய விலாசம்:—

ஸ்ரீ மு. பெருமாள்,
"திருப்புகழமிர்தம்" ஆபீஸ், 144, சாமிநாயக்கன் வீதி, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2

வானொலி மண்டலம் 2

ரேடியோ நாடகங்கள்

சோமு




ரேடியோவில் சங்கீதத்துக்கு அடுத்தபடியாகப் பலரும் விரும்பிக் கேட்பது நாடகந்தான்.

இந்த நூற்றுண்டில் தமிழ்ப் பத்திரிகைகளே மறுமலர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. இந்தத் துணையினுல் முக்கியமாகப் பயன்பெற்ற இலாக்கா ரேடியோவின் நாடக இலாக்காதான். இன்று ரேடியோவில் அடிக்கடி நாடகங்கள் எழுதும் எழுத்தாளரில் பலர், ஆரம்பத்தில் தமிழ்ப் பத்திரிகைகளின் மறுமலர்ச்சியிலே மலர்ந்தவர்கள்தான். என்றுலும் இன்று தமிழ் நாட்டில் பத்திரிகைகளுக்கு எழுதும் அளவுக்கு, ரேடியோவுக்கு எழுதும் எழுத்தாளர்களின் எண்ணிக்கை இல்லை. இதற்கு முக்கியமான காரணம் ரேடியோ நாடகம் எழுதுவது என்பது தனியான ஒரு கலையாக இருப்பதுதான்.

மேடை நாடகங்களுக்கும், ரேடியோ நாடகங்களுக்கும் பல வித்தியாசங்கள் உண்டு. சம்பாஷணையின் அமைப்பு, காட்சிகளின் வைப்பு முறை, கதையின் ஆக்கம்-எல்லாவற்றிலுமே, செவி என்ற ஒரு சாதனத்தை மட்டுமே பூரணமாக நம்பிக்கொண்டு, ஆசிரியர் தமது நாடகத்தைச் சிருஷ்டிக்க வேண்டியதிருக்கிறது. தவிரவும், வீடுகளில் இருந்து கேட்கும் குடும்பத்தினரையும், ஹோட்டல்களிலும் கடற் கரையிலும், பூங்காக்களிலு மிருந்து கேட்கும் கூட்டத்தினரையும், எங்கேயோ ஒரு கோடியில் தன்னந் தனியாக இருந்து கேட்கும் ஒரு ஏகாந்த மனிதரையும் ஏக காலத்தில் மனத்தில் நிறுத்திக் கொண்டு, இத்தனை பேருடைய மாறுபட்ட விருப்பு வெறுப்புக்களையும் தேர்ந்து, ஆசிரியர் தமது கற்பனையை அமைக்க வேண்டியதிருக்கிறது! இது எழுத்தாளருக்கும், நடிக்கும் நடிகர்களுக்குமே, மிகவும் கஷ்டமான ஒரு காரியம்.

மேடைகளிலும், ரேடியோவிலும் ஒருங்கே புகழ் பெற்ற நடிகர் ஒருவர் 'இரண்டும் இரண்டு வேறு உலகம்' என்று ஒரு முறை குறிப்பிட்டார். அது மிகவும் உண்மை. மேடையிலே கூட்டம் எதிரே இருப்பதால், ஒரு உற்சாகம். கை தட்டல்களும், சூழ்நிலையும் சேர்ந்து அங்கங்கே நடிகருக்கு ஊக்கம் தருகின்றன. ரேடியோ நிகழ்ச்சி—அறையிலோ என்றுல், தம்மோடு நடிக்கும் தம்மைப் போன்ற நடிகர்களும், உயிரற்ற—ஆனுல், நெருங்கினுல் அலறக் கூடிய—ஒலிக் கருவியும், சிவப்பு விளக்கும் தவிர வேறு எந்த விதமான "ஆடியன்ஸு"ம் கிடையாது! "போதாத குறைக்குப் பொன்னியும் வந்தது" என்ற கணக்கில், ஸ்டுடியோ கடிகாரம் வேறு எதிரே இருந்து 'திரு திரு' என்று விழித்தவாறே இதயத் துடிப்பை அடித்துக் கொண்டிருக்கும்! இதெல்லாம் காரணமாக, ரேடியோ நாடக அனுபவம் ஒரு தனியான அனுபவந்தான்!

ரேடியோவில் நடிப்பது என்பது முழுக்க முழுக்கக் குரலையே பொறுத்த காரியம். சம்பாஷணையை மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. பார்த்துப் படித்தாலே போதும். சௌகரியந்தான்! ஆனுல், சில நடிகருக்கு இதுவே ஒரு பெரிய அசௌகரியமாகத்



சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட "நந்தனர்" இசை நாடகத்தில் ஸ்ரீ செருகளத்தூர் சாமாவும், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரும் நடித்தார்கள்.


தெரிவதும் உண்டு! மனப்பாடம் செய்து அப்படியே சொல்லிச் சொல்லிப் பழகி விட்டது! என்றாலும், ரேடியோவில் மனப் பாடம் செய்கிற தொல்லை கிடையாது என் பது பலருக்கும் சௌகரியமாகவே இருக் கிறது. ஆனால் கையில் நாடக சம்பாஷணைப் பிரதிகளை வைத்துக் கொண்டு எழுத்தைப் பார்த்துப் படிக்கும்போது பாடம் படிப்பது போல் படிக்கக் கூடாது. அதற்கு முதலில் தங்கு தடையின்றிச் சரளமாக எழுத்தைப் பார்த்துப் படிக்கும் திறமையும் அனுபவமும் வேண்டும். பிறகு எந்தப் பாத்திரம் தாங்கி நடிக்கிறோமோ அந்தப் பாத்திரமாகவே மாறி நிற்கும் மனப் பக்குவம் வேண்டும். இத் தனைக்கும் பிறகு படிக்கும் போதே, அதில் உணர்ச்சிகளை யெல்லாம் கொண்டு வர வேண்டும்! அது மட்டுமா? ஒரு சில நிமி ஷங்களுக்குள்ளாகவே காட்சிகள் துரிதமாக மாறிக்கொண்டே வரும். அதற்கு ஏற்றாற் போல் பல்வேறு உணர்ச்சிகளைக் கொண்டு வந்து கொட்ட வேண்டும். வினாடிக்கு வினாடி கதா பாத்திரத்தின் மன உணர்ச்சிகள் வேறுபட்டுக் கொண்டே இருக்கும். அது போல நடிகரும் தம்முடைய குரலைக் கொண்டே உணர்ச்சிகளை மாற்றிக் காட்ட வேண்டும். இந்தச் சமயங்களில் எல்லாம் தமக்கு எதிரே உள்ள ஒலிக் கருவியில் நிதா னம் தவறாமல் பேச வேண்டும். எத்தனை கோபமாகச் சீற வேண்டிய இடம் வந்தா லும், கூப்பாடு போடாமல் கூப்பாடு போட்டதாக ஒலிக்கச் செய்ய வேண்டும்! எத்தனை சோகம் வந்தாலும் கதறாமல் கதற வேண்டும்! இடி இடி என்று சிரிக்கவேண் டிய இடத்தில், இடிக்காமலேயே இடிக்க வேண்டும்! ஏனென்றால், குறித்த அளவுக்கு மேல் சத்தம் அதிகரித்தால் கருவி தாங்காது!


காட்சிகளின் 'செட்டிங்' எல்லாம் மனக் கற்பனையிலேதான்! நடிகருக்கு முன்னால் ட்ரௌசரும் புஷ்கோட்டுமாக நிற்கும் ஒரு 'கோஞ்சா'வை, தசகண்ட ராவணனாகவே எண்ணி இவர் ஆஞ்சநேயராக நின்று பேசவேண்டும்! ஒரு குள்ளமான ஆசாமி விசுவரூபம் எடுத்த ஆஞ்ச நேயராக எதிரே நின்று பேசுவார்! சிரிப்பு வரக் கூடாது! 'மேக் அப்' ஏதும் இல்லாமல் நிஜ ரூபத்தில் தோன்றுகிற நடிக நடிகைக ளோடு 'இந்திரன் சந்திரன்' என்று நேச மொழிகளைக் கொட்ட வேண்டும்! இது மட்டுமா? எங்கோ ஒரு மூலையில் ஒரு ஒலித் தட்டில் இருந்து சிங்கமும் புலியும் கூப்பிடும். யானைகள் பிளி றும். Effects என்னும் ஒலிக் குறிகள் அவை! இங்கே பெரிய வனாந்தரத்திலே நிற் பதாகப் பாவித்துக் கொண்டு நடிகர் அஞ்சு கிற குரலிலே நடுநடுங்க வேண்டும்! இதெல்லாம் ரேடியோ நடிப்புக் கலையின் நுண்ணியல்புகள்!!

இத்தனை இயல்புகளோடு இன்னொரு முக்கியமான விஷயம்: நடிப்பவரும், நடத்து கிறவரும் நாடக நேரத்தின் அளவில் கண் ணும் கருத்துமாக இருக்க வேண்டும். எவ் வளவுதான் ஒத்திகை பார்த்திருந்தாலும், சில சமயங்களில் ஒலிபரப்புகிற நேரத்தில் சிலர் படபடப்பாகப் பேச நேரும். வார்த் தைகள் வேகமாக ஓடும். அல்லது இடறும்! சிலர் வார்த்தைகளை இழுக்க ஆரம்பித்து விடுவார்கள்! சில சமயம், ஒலிக்கருவியோ அல்லது பின்னணி இசைத் தட்டோ கோளாறு செய்துவிடக்கூடும்! இந்த மாதிரி நேரங்களில் எல்லாம், நாடகப் பிரதியி லேயே கண்ணுக நிற்க வேண்டும். ஒரு கண் ணைக் கடிகாரத்திலும் ஓடவிட்டால் நலம்!

ஒலிக் குறிகளின் துணை கொண்டு பெரிய பெரிய காட்சிக் களங்கள் எல்லாம் வெளியே ரேடியோக் கேட்கும் நேயரின் செவியிலே ஓடுகின்றன என்ற பாவத்திலேயே நடிகர்கள் நடிக்க வேண்டும். ரத வீதிகளையும், சந்தை களையும், ஆகாய விமானங்களையும், நடன அரங்குகளையும், ஒலி மூலம் சித்திரிக்க முடி வதால், நடிகர் சற்றும் கூச்சமின்றி இந்தப் பின்னணிகளுக்கு மேலே தமது மொழி—மாளிகைகளை அடுக்கிக் கொண்டே செல்ல லாம்! வெற்று அறையிலே சாடு விடுகிறோம் என்ற நினைப்பே மறந்துவிட வேண்டும்!

இத்தனை இடைஞ்சல்கள் இருந்தாலும், ஒரு நாடகம் வெற்றிகரமாக நடந்து, நிகழ்ச்சி அறையிலே இருந்து நிம்மதியோடு வெளி வரும்போது ஏற்படுகிற ஆனந்தம் இருக் கிறதே, அது ஒப்பற்றது! ஏக காலத்தில் நாட்டின் எத்தனையோ பல இடங்களில் இருக்கும் ஆயிரக் கணக்கான நேயர்களோடு இதுவரை உறவாடியிருந்தோம் என்ற ஒரு இன்ப நினைப்புக்கு ஈடு இணை ஏது?











உக்கடைத் தேவரின் நில தானம்

○★○

"சாத்வீக முறையில் உழவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்" என்னும் உயர்ந்த லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆச்சாரிய விநோபா பாவே அவர்கள் பாரத நாட்டில் பூமிதான இயக்கம் ஆரம்பித்தார்கள். அதன் வெற்றிக்குத் தமிழ் நாட்டில் உள்ள பெருநிலம் படைத்தவர்கள் எல்லாம் ஆதரவு தந்து தாராளமாக நில தானம் வழங்கி வருகிருர்கள்.

உக்கடை ஸ்ரீ அப்பாவுத் தேவர் தஞ்சை மாவட்டத்தில் பெரும் நிலம் படைத்தவர்களில் ஒருவர். நாட்டின் நலம் கருதி நடக்கும் நல்ல இயக்கங்களுக்கு ஆதரவு தரும் பண்பு படைத்தவர். பூமிதான இயக்கத்துக்கு ஏற்கெனவே அறுபது ஏக்கர் நிலத்தை ஸ்ரீ சங்கர் ராவ் தேவ் அவர்களிடம் நன்கொடையாக வழங்கி இருந்தார். அந்த நிலங்களை நிலமற்ற அறுபது ஏழை உழவர்களுக்குச் சென்னை ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் செப்டம்பர்மீ 18உ பகிர்ந்தளித்தார். இந்தப் பகிர்ந்தளிப்பு வைபவம் உக்கடை கிராமத்திலுள்ள மாரியம்மன் ஆலயத்தின் முன் அமைக்கப்பட்டிருந்த விசேஷப் பந்தலில் சிறப்பாக நடந்தது. ஆயிரக் கணக்கான கிராம வாசிகளும், தஞ்சை மாவட்டப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

குடந்தை ஸ்ரீ டி. ஆர். வரதன் எம்.எல்.ஏ., சர்தார் வேதரத்தினம் பிள்ளை, ஸ்ரீ டி. கே. சீனிவாசன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றினர். ஸ்ரீ சங்கர் ராவ் தேவ் ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தார்.

1. உக்கடை ஸ்ரீ அப்பாவுத் தேவர் பூமிதான பத்திரத்தில் கையெழுத்து இடுகிருர். 2. விழாவில் கலந்து கொள்வதற்குக் கிராம வாசிகள் உற்சாகமாக வருகின்றனர். 3. ஸ்ரீ காமராஜ் அவர்களின் தலைமையில் ஸ்ரீ சங்கர ராவ் தேவ் ஆசி கூறுகிருர். 4. சாருபாலா சகோதரிகள் பிரார்த்தனை கீதம் பாடுகின்றனர். 5. நிலம் பெற்றுக் கொண்ட ஏழை உழவர்கள்.

சக்கரவர்த்தித் திருமகன்

28. சித்திரகூடம்

பரத்துவாஜருடைய ஆசிரமத்தில் ஒரு ராத்திரி படுத்துத் தூங்கி, காலையில் எழுந்து ராம லக்ஷ்மணர்களும் சீதையும் மகரிஷியை வணங்கி விட்டுச் சித்திர கூட மலைக்குப்போகப்புறப்பட்டார்கள். தம் சொந்தக் குழந்தைகளை ஆசீர்வதிப்பது போல் தன்னந் தனியாக வனம் செல்லும் ராஜ குமாரர்களை முனிவர் மிக்க அன்புடன் மந்திர பூர்வமாக 'நற்செலவு' கூறி வழி அனுப்பினார். போகும் வழியை நன்றாக விளக்கிச் சொன்னார். அவர் குறிப்பிட்ட மார்க்கமாகவே மூவரும் சென்றார்கள். முனிவர் சொல்லியபடி வேகமாக ஓடும் காளிந்தியாற்றைக் கடப்பதற்கு ஒரு தெப்பம் கட்டினார்கள். அதற்கு வேண்டிய மரக்கட்டைகளும் மூங்கில்களும் வெட்டிச் சேர்த்துக் காட்டுக் கொடிகளால் நன்றாகக் கட்டினார்கள். அதில் சீதை உட்காருவதற்காக லக்ஷ்மணன் இலைகளும் சிறு கிளைகளும் பரப்பி நன்றாக அமைத்தான். தெப்பத்தில் சீதையை ராமன் உட்காரச் சொன்ன போது சொல்லி அபய பாணி

தாள். "என் புருஷனுடைய விரதம் முடிவடைய வேண்டும், மரமே! கௌசல்யை, சுமித்திரை இவர்களை நான் திரும்பப் பார்க்கும்படி அருள்வாய்" என்று பிரார்த்தனை செய்தாள்.

"லக்ஷ்மணா! நீ முன்னால் சீதையுடன் செல்வாய். நான் பின்னால் ஆயுத பாணியாய் நடப்பேன். வழியில் அவள் கேட்கும் பூவோ பழமோ எதை இஷ்டப்பட்டாலும் அதைப் பறித்துக் கொடுத்து அவளை உற்சாகப்படுத்திக் கொண்டே நடப்பாய்" என்றான் ராமன்.

அவ்வாறே சீதையும், 'அந்த மரம் என்ன மரம்?' 'இந்தச் செடி என்ன செடி?' 'அதோ அந்தக் கொடியைப் பாருங்கள்; அதில் புஷ்பங்களைப் பாருங்கள்!' என்று மிக ஆனந்தமாய் ராமனையும் லக்ஷ்மணனையும் கேட்டுக் கொண்டும், அதற்கு முன் தான் பார்த்திராத புஷ்பங்களையும் பழங்களையும் பார்த்து மகிழ்ந்து கொண்டும் சென்றாள்.

பிறகு ஓர் ஆற்றங்கரையை அடைந்

காக எந்த உணவும் தக்க வழியில் சம்பாதித்து, பூஜையில் வைத்து அளவுக்கு மிஞ்சாமல் உண்பதில் யாதொரு தவறுமில்லை என்பது பாரத தேசத்துப் பொது தருமம்.

* * *


மறு நாள் காலையில் ராமன் லக்ஷ்மணனை எழுப்பி, "தம்பி, மரங்களில் பறவைகள் மதுரமாகச் சப்திப்பதைக் கேள்! புறப்படுவதற்கு நேரமாயிற்று" என்றான்.

லக்ஷ்மணன் வனவாச காலம் முழுதும் சாப்பிடாமலும் தூங்காமலும் விரதம் காத்தான் என்கிற கதை வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படவில்லை. ஆனபடியால் லக்ஷ்மணனை அதிகாலையில், இன்னும் கொஞ்சம் தூக்க மயக்கத்திலிருந்த சமயம், ராமன் எழுப்பினான் என்று இவ்விடத்தில் சொல்லியிருப்பதில் முரண் ஒன்றுமில்லை.

உடனே லக்ஷ்மணன் தூக்கம்தெளிந்து எழுந்தான். எல்லோரும் ஸ்நானம், ஜபம் முதலிய காரியங்களை முடித்துக்கொண்டு கிளம்பினார்கள்.

பரத்துவாஜர் குறிப்பிட்டிருந்த வழியிலேயே சென்றார்கள். அப்போது வசந்த காலம். மரங்களும் செடிகளும் சித்திர விசித்திரவண்ணப் புஷ்பங்களைப் பூத்து, கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல் பிரகாசித்தன. சில மரங்களில் கனிகளும் துளிர்களும் கிளைகள் தாங்க முடியாத பெரும் பாரமாகத் தொங்கின. "மனிதர்களால் சேதப்படுத்தாத விருக்ஷங்களின் அழகைப் பார்! தேன் கூடுகள் தொங்குவதைப் பார்! புஷ்பங்கள் உதிர்ந்து, புஷ்பப் படுக்கையாக விளங்கும் தரையைப் பார்! கூவும் பறவைகளின் குரலைக் கேட்டாயா? எவ்வளவு மனோகரமாக ஒன்றுக்கொன்று பிரதி நாதம் செய்து கொண்டு, ஆனந்தமாக வசிக்கின்றன! இதை யெல்லாம் அநுபவித்துக் கொண்டு நம்முடைய வனவாசத்தைச் சுகமாகக் கழித்து விடலாம்" என்று ராமன் லக்ஷ்மணனுக்கும் சீதைக்கும் அவ்வப்போது சொல்லிக் கொண்டே நடந்தான்.

அதற்குள் சித்திர கூட மலை தென்பட்டது.



அதைக் கண்டதும் மகிழ்ச்சி யடைந்து வேகமாக நடந்தார்கள்.

"இந்த மலைப் பிரதேசத்தின் அழகு பார்க்கப் பார்க்க வளர்ந்து கொண்டே போகிறது! கிழங்குகளும், பழங்களும் நிறைந்த வனமாக இருக்கிறது. ஜலம் எவ்வளவு சுத்தமாகவும் ருசியாகவும் இருக்கிறது! ரிஷிகளும், ஆசிரமவாசிகளும் இருக்கும் இந்த வனத்தில் நாமும் சந்தோஷமாக இருக்கலாம்" என்றான் ராமன்.

* * *

பிறகு வசிப்பதற்கு ஆசிரமம் கட்டத் தீர்மானித்தார்கள். லக்ஷ்மணன் மிக சாமர்த்தியசாலி. எல்லாச் சௌகரியங்களும் கொண்ட வசதியான குடிசையைக் காற்றுக்கும் மழைக்கும் அசையாதபடி கட்டி முடித்தான். சாளரமும் கதவுகளும் அமைத்துப் பாய்களும் வேய்ந்து தொங்க விட்டு எல்லாம் அழகாக லக்ஷ்மணன் ஒருவனாகவே செய்து முடித்து விட்டான்.

ரமணீயமான சித்திரகூட மலைப் பிரதேசத்தில் மால்யவதி நதிக்கரையில் கட்டிய இந்த ஆசிரமத்தில் மூவரும் வசித்து வந்தார்கள். எந்தக் கவலையுமின்றி வனவாச தருமத்தை அனுசரித்து வந்தார்கள். பிறந்து வளர்ந்த நகரத்தை விட்டு வெளியேற்றப்பட்ட துக்கத்தை மறந்துவிட்டு இந்திரன் தேவ கணங்களுடன் சுவர்க்கத்தில் வசிப்பது போல் சந்தோஷமாகக் காலங் கழித்தார்கள்.

* * *

கம்பரும் வால்மீகியும் இந்தக் கட்டத்தை ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டவர்கள் போல் அழகாக வர்ணிக்கிறார்கள்.

ஆசிரமம் கட்டி முடிந்ததும் அந்தப் பர்ணசாலையைப் பார்த்து.


"என்று கற்றனை நீ இதுபோல் ?"

என்று ராமன் தம்பியைக் கட்டி அணைத்துக் கண்ணீர் விட்டதாகக் கம்பர் பாடியிருக்கிறார். அப்படித்தானே நடந்திருக்க வேண்டும்!

"பூவை விட மெல்லிய பாதங்களைப் படைத்த இந்த மிதிலை ராஜகுமாரி பெருங் காட்டையும் நடந்து தாண்டினாள். அவளுடைய பாதங்கள் செய்த அற்புதத்தைப் போல், தம்பி, உன் கைகள் இந்தத் தச்சு, கொத்து வேலையும் செய்து விட்டன! நம்முடைய துரதிர்ஷ்டத்திலிருந்து உண்டான நல்ல அதிர்ஷ்டத்தை உன் கைவேலையில் கண்டேன்" என்று ராமன் ஆனந்தக் கண்ணீர் விட்டதைக் கம்பர் அற்புதமான முறையில் பாடியிருக்கிறார். இதை டி. கே. சி. எனக்குப் பல தடவை அவருடைய தனிப் பாங்கில் பாடிக் காட்டி உள்ளத்தை உருக்கியிருக்கிறார். பின்னால் வரும் கஷ்டங்களையும் துக்கங்களையும் எடுத்துக் காட்ட ஒரு அற்புதப் பின்திரையாகிறது இந்தச் சித்திரகூட மகிழ்ச்சி நிலை.


கம்பரும் வால்மீகியும் இருவரும் இந்த இடத்தில் ராம லக்ஷ்மணர்களையும் சீதையையும் விட்டு விட்டு அயோத்தியைக்குச் செல்லுகிறார்கள். அயோத்தியின் பரிதாப நிலையையும் பரதனுக்கு ஏற்பட்ட அநியாயப் பழியையும் துக்கத்தையும் கவனிக்கப் போகிறார்கள்.

தொழிற் கல்வி வாழ்க!



ஸ்ரீமான் சேஷசாயி தமிழ் நாட்டின் பிரபல தொழிலதிபர். அவருடைய சஷ்டியப்த பூர்த்தி சென்ற 1952ல் நடந்தபோது, அன்னாருடைய நண்பர்கள் சிலர் சேர்ந்து, அவர் பெயரால் "தி சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி" என்ற பொறி இயல் கல்லூரி ஆரம்பித்தார்கள்.


ஒவ்வொரு ஆண்டும். தஞ்சை, திருச்சிப் பக்கங்களிலிருந்து வெளியாகும் கல்லூரி மாணவர்கள் தொழிற் பயிற்சி பெறவும், பொறி இயல் கலைகளைப் பயிலவும் ஆவல்கொண்டு இன்ஜினீரிங் கல்லூரிகளுக்கு மனுப் போடுவார்கள். ஆனால் சென்னை சர்க்காரின் ஆதரவில் நடந்து வந்த பொறி இயல் கல்லூரிகளில் 'இடமில்லை' 'இடமில்லை' என்ற குரலே வரும். எனவே, மேற்கண்ட முயற்சி மிகவும் அவசியமாயிற்று. இந்தக் கழகம் எ. எம். ஐ. இ. பரீட்சைகளுக்கு மாணவர்களைப் பயிற்றி அனுப்பிவைத்து வருகிறது. பலர் நன்றாகத் தேறி இந்தப் பயிற்சிக் கழகத்துக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கல்லூரி சென்ற மூன்று ஆண்டுகளில் நல்ல வளர்ச்சி பெற்று, இந்த 1954ம் ஆண்டின் ஆகஸ்டு மாதத்திலிருந்து விவசாயத் துறையிலும், கட்டிடக் கலையிலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துப் பட்டம் வழங்க ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார்கள். இப்படிப் பல துறைகளில் வெகு வேகமாக முன்னேறி வரும் இப்பொறி இயல் கல்லூரிக்காக நிதி திரட்ட வேண்டி, சென்ற செப்டம்பர் மாதம் 19உ திருச்சியில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடந்தது. ஐயாயிரம் பேர் தம்மை மறந்து கானரஸம் பருகினர். 30,000 ரூபாய் வருவாயிற்று. இந்த உதவி நிதிக் கச்சேரிக்குத் திரு டி. எம் நாராயணசாமிப் பிள்ளை எம். எல். ஸி. அவர்கள் தலைமை வகித்து, பத்ம விபூஷண் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் சங்கீத வித்வத்தையும், நற்பணிகளுக்கு உதவ முன் வரும் பெரும் பண்பையும் பெரிதும் பாராட்டினார்.



கேஷ்ரஞ்சன்
தாங்கள்
கூந்தலின்
நன்மையை
விரும்புவோர்
விரும்புவார்கள்



குணத்திலும்
மணத்திலும்
சிறந்தது
ஜி.ஜி
தென் இந்தியாவில் டிஸ்ட்ரிபியூட்டர்கள் :
கோபால்ஜி அண்டு கம்பெனி
203, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1



உல்லாஸ தம்பதிகள்
லோத்ரா
கர்ப்பாசய ரோக நிவாரணி
இன்பமுடன் இருந்துவரவே வாழ்க்கை. மனைவி ஆரோக்கியமுடனிருந்தால் குடும்பம் உல்லாசமாய் இருக்கத் தடையென்ன? பெண்களின் கர்ப்பாசய ரோகங்களை நிவர்த்தி செய்து வாழ்க்கைக்கு மணமூட்டுவது லோத்ரா.
கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ் 14
தமிழ் நாடு ஏஜண்டுகள் :
சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேல கோபுர வீதி :: மதுரை


·SANFORIZED·
REGD TD MK
SHRUNK
'சான்பொரைஸ்ட்' துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப் பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
–எத்தனை முறை
சலவை செய்தாலும் கூட
முக்கிய கவனிப்பு—
உங்கள்
தையல்காரரிடம்
சொல்லுங்கள்:
"இது
'சான்பொரைஸ்ட்'
துணி—உடை
தைப்பதற்குமுன்
நனைக்க
வேண்டாம்"

தங்க மாம்பழம்

'ராஜி'



2. மாயக் குதிரை

பிரபாகரன் திரும்பிப் பார்த்தான். ''உமா, அதோ பார்த்தாயா? மூன்று வீரர்கள் குதிரைகளின் மீது சவாரி செய்து கொண்டு வருகிறார்கள். நாம் அவர்களுக்குத் தெரியாமல் இருட்டில் இந்த மரத்தடியில் ஒளிந்து கொள்ளலாம்'' என்றான். உடனே அவனும், உமாவும் மரத்தடியில் பதுங்கிக் கொண்டார்கள்.

குதிரைகளின் மீது சவாரி செய்து கொண்டு மெதுவாக வந்து கொண்டிருந்தார்கள், மூன்று வீரர்களும். அவர்கள் அணிந்து கொண்டிருந்த ஆடையிலிருந்து அவர்கள் அரண்மனையைச் சேர்ந்தவர்கள் என்று தோன்றியது.

''அந்தப் பையனையும், பெண்ணையும் ஊர் முழுவதும் தேடியும் காணவில்லையே!'' என்றான் வீரர்களில் ஒருவன்.

''அந்த மந்திரவாதிக் கிழவியின்மீது மகாராஜாவுக்கு எவ்வளவு கோபம் தெரியுமா?'' என்றான் அவர்களில்மற்றொருவன்.

''ஆமாம், கோபம் இல்லாமல் இருப்பாரா? அவர்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளாதது கிழவியின் தப்புதானே?'' என்றான மூன்றாவது வீரன். அவர்கள் இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டு போனார்கள்.

''உமா, கேட்டாயா? நம்மைப் பற்றித்தான் அவர்கள் பேசிக் கொண்டு போகிறார்கள்'' என்றான் பிரபாகரன்.

''அண்ணா, நம்மைப் பற்றி அவர்கள் ஏன் பேச வேண்டும்? நமக்கும் அரசனுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டாள் உமா.

''அது என்ன சம்பந்தமோ தெரியவில்லை. இங்கு நாம் தாமதித்தோமானால் மறுபடியும் கிழவியினிடம் அகப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். அபாயம்! ஓடிப் போகலாம், வா'' என்றான் பிரபாகரன்.

பாவம், உமாவால் வேகமாக நடக்க முடிய



வில்லை. இருந்தாலும் அண்ணு கோபித்துக் கொள்ளப் போகிருனே என்று கொஞ்சம் வேகமாகவும், சற்று மெதுவாகவும் நடந்து சென்ருள்.

அவர்கள் இருவரும் அப்படிப் போய்க் கொண்டிருக்கையில், வழியிலே ஒரு அழகான வெள்ளைக் குதிரை நின்று கொண்டிருந்தது. அது பெரியகுதிரை அல்ல; சின்னக் குதிரை. பார்ப்பதற்கு வெகு அழகாக இருந்தது.



"அண்ணு, அண்ணு! இந்தக் குதிரை மேலே அல்லவா பறந்து செல்லுகிறது!" என்ருள் உமா ஆச்சரியம் தாங்காமல்.

"எப்படிப் போனுல் நமக்கு என்ன உமா? இந்த இடத்தை விட்டுச் சீக்கிரம் போய்விட வேண்டும். ஆகாய விமானம் மாதிரி வெகு சீக்கிரத்தில் வெகு தூரம் போய் விடலாம்!" என்ருன் பிரபாகரன்.

குதிரையின் இறக்கைகள் பட படவென்று வெகு

அதன் மீது சேணங்கள் பூட்டப்பட்டுச் வேகமாக

"உமா, ஜாக்கிரதை! என்னைப் பிடித்துக் கொள்ள முடியா விட்டால், குதிரையின் முதுகையாவது பிடித்துக் கொள்!"

"அண்ணா, நீ கவலைப் படாதே! நான் குதிரையின் முதுகைப் பிடித்துக் கொள்ளுகிறேன். எப்படியாவது குதிரையைச் சீக்கிரம் கீழே இறங்கும்படி செய், அண்ணா! இல்லாவிட்டால் நான் நிச்சயமாகக் கீழே விழுந்து விடுவேன் போலிருக்கிறது!"

"உமா, நீ பயப்படாதே! உன்னைச் சீக்கிரம் குதிரையுடன் கீழே அழைத்துச் செல்லுகிறேன்" என்று உமாவைத் திரும்பிப் பார்த்தான். குதிரை ஆடுகிற ஆட்டத்தில் பிரபாகரன் சொல்லியது உமாவுக்குக் காதில் விழவில்லை. அந்தச் சமயத்தில் உமா குதிரையின் வால் பக்கத்தில் அடுத்த நிமிஷம் கீழே விழுபவள் போலத் தொத்திக் கொண்டிருந்தாள். அப்பொழுது குதிரை தன் முழு பலத்துடன் அசைவு கொடுத்தது. "ஐயோ! அண்ணா, நான் விழுந்து விட்டேன்!" என்று குதிரையின் வாலைப் பற்றித் தொங்கிக் கொண்டே உமா கூக்குரலிட்டாள்.

அதே சமயத்தில் பிரபாகரனின் இடது கை குதிரையின் முதுகிலிருந்து தளர்ந்து விடவே வலது கையால் குதிரையின் முதுகைப் பிடித்துக் கொண்டு "உமா, நானும் ஆபத்தில் இருக்கிறேன்!" என்று கத்தினான். பிரபாகரன் கத்தினானே தவிர, பயத்தினால் அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை.

குதிரையின் மீது சவாரி செய்து கொண்டு வந்த மூன்று அரண்மனைச் சேவகர்களும் நேராகக் கிழவியின் வீட்டுக்குச் சென்றார்கள். அப்பொழுது கிழவியின் வீட்டு வாசற் கதவு சாத்தியிருந்தது.

"ஏ, பெரியம்மா!" என்றான் ஒரு வீரன். பதில் இல்லை.

மற்றொருவன் பலத்த குரலுடன் "ஏ, பெரியம்மா! கதவைத் திறவுங்கள்" என்று கத்தினான்.

"யாரது, அங்கே?" என்றாள் உள்ளேயிருந்தபடியே கிழவி.

"நாங்கள் அரண்மனைச் சேவகர்கள்! தப்பிப் போனவர்கள் அகப்பட்டார்களா? எங்கு தேடியும் அகப்படவில்லை. எங்களுடன்கூட வீரப்ப தேவர் ஐயாவும் வந்திருக்கிறார்" என்றனர்.

வீரப்பதேவர் என்ற பெயரைக் கேட்டவுடன் கிழவி வெகு வேகமாக வாசற் கதவைத் திறந்தாள். "மன்னிக்க வேண்டும். நீங்கள் வந்திருப்பது தெரியாமல் உள்ளே இருந்து பதில் சொல்லி விட்டேன்" என்று கை கூப்பி நின்றாள்.

வீரப்பதேவனுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். உடம்பு நல்ல பருமனாகவும், ஆனால் சற்று குள்ளமாகவும் இருந்தான். உடம்பெல்லாம் கரியைப் பூசியது போல் அவ்வளவு கறுப்பாக இருந்தது. முகத்



நில் நீண்ட கறுப்பு மீசையுடன் இருந்தான். அவன் தோற்றத்தைப் பார்த்தாலே யாரும் பயப்படும்படியாக இருந்தது. அதுவுமல்லாமல் அவன் மன்னன் வீரசிம்மனுக்கு அந்தரங்கச் சேவகன். மற்றவர்களுக்கு தெரியக்கூடாத அரண்மனை ரகசியங்கள் யாவும் அவனுக்குத் தெரியும். கெட்ட குணம் படைத்த வீரசிம்மனுக்குத் தீய வழிகளிலேயே உதவி செய்பவன். அதனால் மாயா மகேந்திர பட்டணத்தில் உள்ள யாவரும் வீரப்ப தேவனிடம் நெருங்கவே பயப்படுவார்கள். அதுவுமல்லாமல் அவனிடம் விரோதம் நேராதபடி நடந்து கொள்ளப் பிரயத்தனப் படுவார்கள். அப்படி இருக்கும் வீரப்பதேவனிடம் பல விதத்திலும் உபகாரம் பெற்றுக் கொண்டிருக்கும் கிழவிக்கா கேட்க வேண்டும்!

குதிரையினின்று கீழே இறங்கினான் வீரப்ப தேவன். தன்னுடன் கூட வந்த இரண்டு சேவகர்களையும் சைகை காட்டி அனுப்பினான்.

"கிழவி, உன்னை நம்பி அரசர் மோசம் அல்லவா போய் விட்டார்! அவரிடம் இனிமேல் நீ நெருங்க முடியாது."

"என்ன அப்படிச் சொல்லுகிறீர்? நான் வேணுமென்றா அப்படிச் செய்தேன்? ஏதோ தவறி விட்டது. ஆனால் அவர்கள் இந்த வயற்காட்டிலிருந்து தப்பி ஓடிவிட முடியாது. அது மாத்திரம் நிச்சயம். பிரபாகரனும் உமாவும் தெற்குப் பக்கம் தான் சென்றார்கள் என்று நம்பிக்கையான செய்தி கிடைத்தது. உடனே என்னுடைய மந்திர சக்தியினால் ஒரு அழகான சிறிய வெள்ளைக் குதிரையைச் சிருஷ்டி செய்து சேணங்கள் பூட்டிய வண்ணமாக அனுப்பி யிருக்கிறேன். அவர்கள் எங்கே சென்றாலும் இந்தக் குதிரை அவர்களுக்கு எதிரில் போய் நிற்கும்" என்று கிழவி சொல்லிக் கொண்டிருக்கும்போது வீரப்ப தேவன், "இந்தக் குதிரை போய் நிற்கட்டுமே! அவர்கள் எதற்காக அதன் மீது ஏறுகிறார்கள்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டான்.

"ஏன் ஏறமாட்டார்கள்? உமக்குக்கூட அந்தக் குதிரையைப் பார்த்தால் ஏறிச் சவாரி செய்யத்தான் தோன்றும். அதுவும் வெகு தூரம் நடந்த களைப்பினால் அலுத்துப் போயிருக்கும் அவர்களுக்கு எப்படியாவது சுலபமாக வயற்காட்டை விட்டுத் தப்பித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்யத்தானே தோன்றும்?" என்று கேட்டாள் கிழவி.

"சரி, நீ சொல்லுகிறபடி அவர்கள் குதிரையின் மீது ஏறி, வேகமாகச் சவாரி செய்து கொண்டு போய்த் தப்பி விட்டார்களானால்?..." என்றான் வீரப்பதேவன்.

"இந்தக் கிழவியை என்ன வென்று நினைத்தீர்! நான் சிருஷ்டித்த குதிரை ஓடும் குதிரை அல்ல, ஐயா! பறக்கும் குதிரை! ஆனால் அது எங்கும் பறந்து செல்லாது. நின்ற இடத்துக்கு நேராக ஆகாயத்தில் செங்குத்தாகத்தான் பறக்கும். அதுவும் தன் இஷ்டப்படியெல்லாம் உடம்பை வளைத்துக் கொண்டுதான் பறக்கும். அதனால் அதன் மீது ஒருவரும் சிறிது நேரங்கூட உட்கார முடியாது. மேலே போகப் போகத் தாங்க முடியாத குளிர். அதுவுமல்லாமல் குதிரை ஆடும் ஆட்டத்தில் குதிரையின் மீது உட்கார்ந்தவர்கள் கீழே விழ வேண்டியதுதான். அப்பொழுது குதிரையும் தானாகவே கீழே வந்து விடும். அப்படி நேராவிட்டால் அதன் வாலை யாராவது கீழ் நோக்கிப் பிடித்து இழுத்தால் போதும், அது தானாகவே அரை நொடியில் கீழே வந்து விடும். தேவரே, நான் சொல்லுவது உண்மையா இல்லையா என்று பாரும்" என்று கூறிக் கிழவி ஒரு சிறு பூதக் கண்ணாடியை அவன் கண்ணருகில் வைத்துத் தெற்கு நோக்கிப் பார்க்கச் சொன்னாள்.

"பாட்டி, பாட்டி! ஆமாம் நீ சொல்லியது உண்மையே! அதோ பறக்கும் குதிரையின் மீது பிரபாகரனும் உமாவும் இருக்கிறார்கள். அடுத்த நிமிஷத்தில் அவர்கள் கீழே விழுவது நிச்சயம். அவர்கள் விழுந்தால் இறந்தல்லவா போய் விடுவார்கள்!" என்றான். (தொடரும்)

க வி ம ணி

சோம. லெ.

தமிழ் மலை சாய்ந்து விட்டது. இலக்கியத் தென்றல் ஓய்ந்து விட்டது. தலை சிறந்த ஒரு கவிஞர் காலமாகி விட்டார். மனிதருள் மாணிக்கமாக விளங்கிய ஒரு பெரியார் உயிர் நீத்து விட்டார். நாஞ்சில் நாட்டுத் தமிழருக்கு வழி காட்டிய ஜோதி அணைந்து விட்டது. தமிழ்ப் பண்பாட்டின் உருவமாக விளங்கிய தே. வி. இறைவன் திருவடி நிழலை அடைந்து விட்டார்.

பல ஆண்டுகளுக்கு முன் ஓர் அமெரிக்கர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். இந்தியாவில் பார்க்க வேண்டியவை எவை எவை என்று ஒரு நண்பரைக் கேட்டாராம். தாஜ்மகால், இமய மலை, மகாத்மா காந்தி என்று அவருடைய நண்பர் குறிப்பிட்டாராம். அது போன்றே தமிழ் நாட்டின் தென்பகுதியான நாஞ்சில் நாட்டில் காணத் தக்கவை என்ன என்று கேட்பவரிடம், "கன்னியா குமரி, சுசீந்திரம் கோவில், தேசிக விநாயகம்பிள்ளை" என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொள்வது தமிழ் நாட்டில் வழக்கமாக இருந்து வந்தது. பாட்டா (நாஞ்சில் நாட்டில் கவிமணி அவர்களை இப்படித் தான் அன்பாக அழைப்பார்கள்.) இக்காலத்துக் கவிஞர்களில் தலைசிறந்த கவிஞராய் விளங்கினார். பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகளும் அவர் பாடல்களைப் பாடி மகிழ்வர். 'கண்ணே மணியே முத்தம் தா, கட்டிக் கரும்பே முத்தம் தா......' என்பது போன்ற வரிகளைப் பாடும் போது சிறுவர் சிறுமியர்க்கு ஏற்படும் உணர்ச்சி அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். இவ்வாறு தாலாட்டு முதல் தரணி ஆட்சி வரையிலும் பாட்டாவின் கவிதைகளில் காணலாம்.

கவிதை என்றால் விளங்காத பொருளை, வழக்கொழிந்த நடையில், எதுகை மோனையுடன் சொல்லுவது என்ற நிலையை மாற்றியவர் கவிமணி.

"உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்-உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை"

என்று கவிதைக்கு இலக்கணம் வகுத்தவர் நமது கவிமணி அவர்கள்.

கவிமணியின் பாடல்கள் கற்றவர்களையும் கல்லாதவர்களையும் களித்துருக வைக்கும்; பாட்டாளி மக்களுக்குப் பரவசமூட்டும்; ஏழை எளியவர்க்கு இன்பத்தை நல்கும்; ஐந்து வயதுக் குழந்தைகளை ஆடிப் பாடச் செய்யும்; பூவையும் புல்லையும் பேச வைக்கும்: குருடனையும் குதிரையையும் புலம்ப வைக்கும்; கோழியையும் கிளியையும் கேட்க வைக்கும்; பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் அத்தனைக்கும் தித்திக்கும் அரிய சுவைக் கரும்பு என்று அவர் கவிதைகளைச் சொல்லலாம்.

"வெண்பாவிற் புகழேந்தி" என்ற வாக்கை, "வெண்பாவில் தேசிக விநாயகம்" என்று இக்காலத்துக் கேற்பச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. 14 சீர் விருத்தங்கள், நீண்ட ஆசிரியப்பாக்கள் ஆகியவற்றைக் கவிமணி அருமையாகவே பாடுவார். வெண்பாக்கள் அவர்களுக்கு இயல்பாக வரும். இயற்கையாக வரும். தண்ணீர் போல வரும். எதுகை மோனைக்கு அகராதி வைத்துப் புரட்டிப் பார்த்து அவர் தேடிப் பிடித்ததில்லை. சொற்களை எளிதில் கையாளும் ஆற்றல் அவருக்கு இருந்தது. கவிதைகள் சிலவற்றை இயற்றும்போது உடனிருந்திருக்கிறேன். அவர்கள் சில கவிதைகளைச் சொல்ல, யான் எழுதிக் கொண்டதும் உண்டு. ஒரு தடவை ஒரு பாட்டைப் பாடிவிட்டால், ஒரு காலும் அவர்களுடைய மனத்தை விட்டு அகலாது. ஒரு கவிதை இயற்றி விட்டால் அந்தக் கடிதம் தபாலில் சேர்க்கப்படும் வரை அல்லது அந்த நூல் அச்சுக்கு அனுப்பப்படும் வரை, பாட்டில் ஏதாவது திருத்தங்கள் செய்யலாமா என்பதைப் பற்றியே சிந்தனை இருக்கும். சில சமயங்களில் பாடபேதமாக, சில பாடல்களை இயற்றுவார்கள். கம்பனும் இப்படித் தான் பாடினன் போலும் என்று நான் எண்ணுவது வழக்கம். கவிமணி அவர்கள் ஆடம்பர மற்றவர்; பதவி விரும்பாப் பண்பினர்; பிறர் குறை காணாப் பெருந்தகையார்; பெரும் புகழால் நிதானம் இழக்காத பேரறிஞர்; அவருடைய உள்ளம், பேச்சு, செயல்—எல்லாம் அன்பு.

"பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க
—வேண்டும்"


என்பது அவர்களுடைய விருப்பம்.

காதில் பழைய காலத்துக் கடுக்கன், வைதிகத்துக்கு எடுத்துக் காட்டாகத் தலையில் 4, 5 மயிர்கள், திருநீறு பூசிய நெற்றி, இடுப்பிலே ஒரு முண்டு, மேலே போர்த்திய ஒரு துவாலைத் துண்டு, இளைப்பாலும் 'எக்சிமா' என்னும் சொறி சிரங்கு நோயாலும் துன்பப்படும் உடம்பு, சிரித்த முகம் இவ்வாறுதான் கவிமணி காட்சி யளித்தார்.

கவிமணியின் பாடல்களை முதலில் வெளியிட்டவர் காரைக்குடி சொ. முருகப்பா அவர்கள். "குமரன்" பத்திரிகையில் 'கருணைக் கடல்' வெளிவந்த பின்னர், தேசிக விநாயகம் பிள்ளையின் புலமையை அறிந்து பாராட்ட முன் வந்தவர் டி. கே. சி. அவர்கள். விளம்பரம் விரும்பாமல் மூலையில் ஒதுங்கிக் கிடந்த கவிமணியைத் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளி லெல்லாம் தெரிய வைத்தவர் டி. கே. சி. "கண்ணாரக் காண ஒரு கவிஞர்" என்று டி. கே. சி. கவிமணியைச் சிறப்பித்திருக்கிறார்.

கவிமணி கட்சிப் பற்றற்றவர். அதுபோலவே, "பொருள்-பற்று", அளவு கடந்த பணத்தைச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணமும் அவருக்குக் கிடையாது. அரசாங்க வேலையில் இருந்ததால் தமக்குக் கிடைத்து வந்த ஓய்வுச் சம்பளமே அவருடைய செலவுக்குப் போதியதாக இருந்தது. ஒரு தடவை, ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் கவிமணிக்கு ஓராயிரம் ரூபாய் வழங்கி

னார்கள். கவிமணி அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. பின்னர், அந்தப் பணத்தை வெள்ளிச் சாமான்களாக மாற்றி, டி. கே. சி. திவான்பகதூர் ஆவுடையப்ப பிள்ளை ஆகியோர் வாயிலாக ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அனுப்பி வைத்தார். இதையும் மறுக்க இயலாத நிலையில், பொருள்களைத் தாம் ஏற்றுக் கொண்டு, அதற்குரிய ஓராயிரம் ரூபாயைத் தம் பணத்திலிருந்து எடுத்து, திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி, தம் தாயார் பெயரால் பி. ஏ. வகுப்பில் தமிழ் மாணவர்களுக்கெனப் பரிசு வழங்க ஒரு நிதி ஏற்படுத்தினார். மற்றொரு தடவை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் கவிமணியைக் கௌரவப் பேராசிரியராக நியமித்து ஆண்டுதோறும் அவர்களுக்கு ஒரு தொகையை அன்பளிப்பாகத் தர விரும்பினர். இதையும் கவிமணி விரும்பவில்லை. அவருக்காக நிதி சேர்ப்பதற்குச் சிலர் முயலுவதாகத் தெரிந்த போதும், கவிமணி அந்த முயற்சியைத் தடுத்தார். இவற்றிலிருந்து அவருடைய எளிய வாழ்க்கையும் உயர்ந்த இலட்சியங்களும் தெளிவாகும்.



கவிமணியும் அவரது மனைவியாரும்

கவிமணி அவர்களுடைய சிறந்த இயல்பு அவர்களுடைய தன்னடக்கம் எனலாம். அவர்களைக் காண வருவோர் பலர். அவர்கள் ஒவ்வொருவரோடும் இனிமையாக உரையாடி அவர்களுக்கு விருந்துபசாரம் செய்வது அவருடைய அன்றாட வேலைகளில் ஒன்றாக இருந்தது. இளைஞர்களை ஊக்குவிப்பதில் அவர்களுக்கு நிகராக யாரையும் சொல்ல இயலாது. அவ்வளவு அன்போடு அறிவுரைகள் சொல்லுவார்கள். புகழை விரைவில் எதிர்பார்த்து அதற்காக எந்தச் செயலிலும் ஈடுபடக் கூடாது என்று அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். ஒரு தடவை கவிமணியுடன் நான் பேசிக் கொண்டிருந்த போது, பெண் பாடசாலையில் ஆசிரியராக இருந்த ஒருவர் உள்ளே வந்தார். அவருடைய மனைவி சில நாட்களுக்கு முன் இறந்து விட்டாளாம். இதை அறிந்த கவிமணி அவருக்குச் சொன்ன அறிவுரையை நான் ஒரு போதும் மறக்க இயலாது. "உடனே திருமணம் செய்து கொள்; அல்லது பெண் பாடசாலைப் பதவியை விட்டு விடு" என்பதுதான் அந்த அறிவுரை. அறிவு மட்டும் போதியதாகாது; ஒழுக்கத்திலும் மனிதன் சிறந்து விளங்க வேண்டும் என்பது அவர்களுடைய உறுதியான கருத்து.

அவர்களுடைய கருத்து அனைத்தும் உறுதியானதுதான். அரைகுறைக் கருத்து அவர்களிடம் இல்லை. எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் 50 ஆண்டுகளாக நினைத்து விவாதித்துச் சில முடிவுகளுக்கு வந்திருந்தார்கள். பார்த்தால் பசுப்போல இருப்பார்கள். ஆனால், விவாதத்துக்குரிய விஷயம் எதையாவது பேசத் தொடங்கி விட்டால், சிங்கம் போலக் கர்ஜிப்பார்கள். புலி போலப் பாய்வார்கள். அவ்வளவு ஆர்வம். அறிவும் அத்தனை தெளிவாக இருந்தது, கடைசிவரையிலும். ஹிந்தியைப் பரப்ப வேண்டுமென்பது பயித்தியக்காரர்களின் யோசனை என்று அவர்கள் பல தடவைகளில் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் மூலமாகவே பல்கலைக் கழகப் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்பார்கள். ஆங்கில இலக்கிய அறிவு நாட்டில் குறைந்து வருவதால், ஆங்கிலத்திலுள்ள சிறந்த நூல்களை இந்தத் தலைமுறையினர்தான் தமிழில் மொழி பெயர்க்கக் கூடியவர்கள் என்றும், ஆங்கில நூல்களைத் தமிழாக்குவதிலேயே பல்கலைக் கழகங்கள் ஈடுபட வேண்டும் என்றும் கவிமணி சொல்லுவார்கள்.

ஆங்கில இலக்கியத்தில் சிறப்பாகக் கவிதையில் கவிமணிக்கு ஈடுபாடு அதிகம். அவருடைய மனத்தைக் கவர்ந்த செய்யுட்கள் பலவற்றைக் கவிமணி அவர்கள் அவ்வப்போது தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். புத்தர் பிரானின் வரலாற்றை விளக்கும் "ஆசிய ஜோதி"யைத் தமிழில் தந்து தமிழுக்கே கவிமணி அவர்கள் பெருமையளித்திருக்கிறார்கள். புத்தருடைய அருட்பாங்கில் கவிமணி அவர்கள் இரண்டறக் கலந்து விட்டதால், இச் செய்யுட்கள் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன.


கவிமணி அவர்களுக்கு இசைப் புலமையும் மிகுதி. தமிழ் இசை இயக்கத்துக்கு அவர்கள் பேராதரவு தந்தார்கள். உள்ளம் உருகிப் பாடிய ஒப்பற்ற கீர்த்தனங்கள் பலவற்றை நமக்கு வழங்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

கல்வெட்டு ஆராய்ச்சி என்றால் கவிமணிக்குக் கருப்புக்கட்டி. பல கல்வெட்டுக்கள் அவர்களுக்கு மனப்பாடமாக இருந்தன. கல்வெட்டு ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பும் இளைஞர்க்கு உதவும் சில கட்டுரைகளை, கவிமணியின் உரைமணிகள் என்ற நூலில் எழுதியிருக்கிறார்கள். "ஆசிய ஜோதி" தமிழர் உள்ளத்தில் ஒளியை ஏற்றி வைத்தது.

ஸ்ரீ குண ரத்ந கோசம்

உலக மாதாவாகிய ஸ்ரீரங்க நாச்சியாரைப் பொருளாகக் கொண்டு ஸ்ரீ பராசர பட்டர் என்னும் பேரறிஞரால் வட மொழியில் இயற்றப்பட்ட புனித நூல் இது; பிராட்டியாரின் உத்தம குண ரத்தினங்கள் பொதிந்துள்ள பொக்கிஷம் இந் நூல். இச் சிறந்த நூலின் சுலோகங்களுக்குப் பதவுரையும், விரிவுரையும், நேர் மொழி பெயர்ப்பாகத் தமிழ்ச் செய்யுட்களும் இந் நூலில் வெளியாகி யிருக்கின்றன.

ஆக்கியோன்: திருமலை நல்லான்; 29, பெருமாள் முதலித் தெரு, சௌக்கார் பேட்டை, சென்னை—1; விலை: ரூ. 2—8—0.



பெங்களூர் திரு பா. கி. சாரங்கபாணி முதலியார் அவர்களின் குமாரர் ஸ்ரீ ஹரிஹரன் அவர்களுக்கும் வேலூர் திரு வி. பி. ரங்கராஜ் முதலியார் அவர்கள் குமாரி செல்வி கஸ்தூரிக்கும் செப்டம்பர் மீ 9வ வேலூரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர். திருமணத்தையொட்டி பெங்களூரில் செப்டம்பர் மீ 11வ நடந்த வரவேற்பு வைபவத்தில் நிகழ்ந்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரிக்கு, சென்னை, வேலூர், பங்களூர் ஆகிய நகரங்களில் உள்ள பிரமுகர்கள் பலர் விஜயம் செய்து சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள்!

''மருமக்கள் வழி மான்மியம்'' சமுதாயப் பிற்போக்காளர் கண்களைத் திறந்தது. ''உமார்க் கய்யாம்'' அறிவுப் புரட்சிக்குத் துணை செய்தது. ''காந்தளூர்ச் சாலை'' ஆராய்ச்சி மனப்பான்மை மலரச் செய்தது.

கவிமணி பிறந்த தேரூரில் அவர் பெயரால் ஒரு மண்டபம் அமைக்கப் பெற்றிருக்கிறது. நாகர் கோவிலை அடுத்த வடசேரியில் கவிமணி நிலையம் ஒன்று உருவாகி வருகிறது. இந்த நிலையத்தின் வேலைகள் நிறைவேற, பொருளுதவி செய்வது தமிழ் மக்களுடைய கடமையாகும். கவிமணி அவர்கள் பயன்படுத்திய நூல்கள் யாவும் இந்த நிலையத்திலேயே உள்ளன.


சிரங்கு நோயால் கவிமணி பட்ட அல்லல் எல்லையற்றது. அதைப் பற்றி அவர்களே பாடியிருக்கிறார்கள்.


உண்ட மருந்தாலும் உடல்முழுவ தும்பூசிக்
கொண்டமருந் தாலும் குண மிலையே - மண்டு
சிரங்கப்ப ராயா சினமாறிக் கொஞ்சம்
இரங்கப்பா ஏழை எனக்கு.

செயற்கை முறைகளால் சிறு நீர் கழிக்க வேண்டிய நிலையும் அவருக்கு ஏற்பட்டது. இந்நிலையில், நொந்த அவரது உள்ளம் பண்டித மணி அவர்கள் இறந்த போது, பாடிய பாடல் கல் மனத்தையும் கரைக்கும்.

''என்று வருவான் எமனென் றெதிர்நோக்கி
நின்று தளர்கின்றேன் நித்தமுமே - மன்றில்
நடங்கண்ட ஈசன் நடராஜன் பாதத்
திடங்கண்டு வைநீ எனக்கு.''

மேலும் தளராமல், கவிமணி இறைவன் திருவடி நிலையை அடைந்தது பற்றித் தமிழர்களாகிய நாம் ஆறுதல் அடைய வேண்டும். தாங்க முடியாத துயரத்தில் ஆழ்ந்திருக்கும் கவிமணியின் மனைவியாருக்கு நமது வருத்தம் உரியது. கவிமணி அவர்களுக்குக் குழந்தை இல்லையே என்ற கவலையைப் போக்கி அவருக்கு மகனாகவும் மருமகனாகவும் இருந்து எல்லா வகையாலும் அவருக்குப் பணிவிடை செய்து பேணி வந்த குமாரசாமிப் பிள்ளைக்கும் அவர் குடும்பத்தார்க்கும் தமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். தங்கள் துயரத்தில் தமிழகம் அனைத்தும் பங்கு கொள்ளுகிறது என்ற செய்தி அவர்களுக்குச் சிறிது ஆறுதல் தரும்.


Verily, the ideal films
for picturising ideal
subjects on FUJEX
quality paper.
Trade-Mark
The Famous
FOURSOME
OF THE
FUJI
FAMILY!
AT YOUR BECK & CALL
TO SERVE ONE & ALL!
FUJI
NEOPAN SS 120 .... Rs. 2. 1.0
NEOPAN SS 620 .... Rs. 2. 1.0
NEOPAN SS 127 .... Rs. 1. 14.0
NEOPAN SS 35 mm.
20exp. Cartridge ... Rs. 2. 13.0
32° Sch.
FUJI FILM
The Best From Modern Japan!
SOLE DISTRIBUTORS:
CHOWGULE & CO., (HIND) LTD.
Bombay P.O. Box 1478 New Delhi P.O. Box 486 Calcutta P.O. Box 8943 Madras P.O. Box 1743


CONTAINS NO ANIMAL OIL OR FAT
The Great HERBAL BALM
Zam-Buk
FOR CUTS
BRUISES SCRATCHES
BURNS SCALDS POISONED
WOUNDS PILES ULCERS LEG SORES
ECZEMA RASHES PIMPLES CHILBLAINS
COLD SORES CHAFED SKIN INSECT BITES
WONDERFULLY SOOTHING
AND HEALING
FOR
SORE ACHING FEET
Zam-Buk IS A REGISTERED TRADE MARK



ரோகிணியின் காதலன்

பூர்ண மதியின் தாவண்யமான மோகன நிலவு அந்த வனப் பிரதேசம் முழுவதையும் தன் இன்ப போதையில் ஆழ்த்தியிருந்தது. நாலா புறமும் சூழ்ந்திருந்த மலைத் தொடர்களையெல்லாம் வெண்ணிலவு தன் குளிர்ந்த கிரணத்தினால் இலேசாகப் போர்த்தி, நள்ளிரவில் அவ் வனப் பிரதேசத்தின் அமைதிக்கு ஒரு தனிக் கவர்ச்சியைக் கொடுத்தது.

வெண்மதி விரித்த அந்தத் தண்ணிலவு அழகி ரோகிணியின் மனத்தில் மட்டும் ஏனோ இன்பம் ஊட்டவில்லை. அதற்குப் பதிலாக அவள் உள்ளத்தில் வேதனையின் நிழல் படியும்படியாக அல்லவா செய்து விட்டது?

எழில் பொங்கும் அந்த வனத்தில் பூத்துக் குலுங்கும் மரங்களுக்கு இடையே அந்த வெட்டவெளிப் பிரதேசம் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாயிருந்தது. அரசாங்க வீரர்கள் அங்கு சிறு சிறு கூடாரங்கள் அமைத்துக் கொண்டு அவற்றில் தங்கியிருந்தனர். காவலுக்காக இருந்த சில வீரர்களைத் தவிர மற்ற வீரர்களெல்லாம் நித்திரா தேவியின் வசப்பட்டிருந்தனர். பாதி ராத்திரியில் அந்த வனப் பிரதேசத்தில் நிலவிய மரண அமைதி, இளவரசி ரோகிணியின் உள்ளத்தை மட்டும் ஏனோ அணுக அஞ்சியது.

ரோகிணியின் உள்ளத்தில் வீசிய புயலும் கொந்தளிப்பும் அளவிட முடியாததாயிருந்தது. அவளது கரிய பெரிய விழிகளின் ஓரத்தில் துளித்திருந்த கண்ணீர்த் துளி, நிலா வொளியில் நன் முத்துப் போல் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

ரோகிணிக்கு உற்ற மனத் துயரத்துக்கு என்ன காரணம்? இளவரசியான அவள் மனம் வெதும்பும்படியான வேதனை என்னவாயிருக்கும்? அவள் காலால் இட்ட பணியைத் தலையால் நிறைவேற்ற எத்தனையோ தாதிப் பெண்கள் காத்துக் கொண்டிருந்தனர். அப்படியிருக்க அவள் மன வேதனையில் மூழ்கியிருப்பானேன்!

ஆம். அவள் உள்ளம் விரும்பிய வாலிபனை இன்னும் இரண்டு நாட்களில் அவள் மறந்து விட வேண்டியதுதான். ராஜகுமாரியாகிய அவள், யாழ் வாசித்துக் கொண்டு இசை பாடும் அந்த அநாதை வாலிபனிடம் மனம் பறி கொடுத்தாள். ஆகா, அவனுக்குத்தான் எத்தனை அழகு! அவன் குரலில் இனந் தெரியாத ஓர் இனிமை இருந்து கொண்டு ரோகிணியின் உள்ளத்தைக் காந்தம் போல் கவர்ந்தது. விசாலமான அவன் விழிகளின் பார்வையில் பிரேமை வெள்ளம் பொங்கியது. ரோகிணி நேருக்கு நேராக அவனை நோக்கவே அஞ்சினாள். ஆனால் அவளுடைய கண்களோ அவளை ஏமாற்றி விட்டு, அவளையும் அறியாமல், ஓரப் பார்வையில் அவனை எத்தனையோ தடவை பார்த்து விட்டன. இந்தப் பூர்த்தி பெற முடியாத காதல் நினைவை அவள் மனம் மறக்க முயன்றபோது, அவளுடைய அந்தப் பொல்லாத கண்களோ அநுதாபத்துடன் நீரைப் பெருக்கின.

ஆனால் அவன் அவளுடைய அச்சத்தைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை. அவள் பார்த்தபோதும் பார்க்காத போதும், அவள் வதனத்தை விழுங்கி விடுவதுபோல், பார்த்தான். அதன்மூலம் அவள் உள்ளக் கோயிலில் நிரந்தரமான இடம் தேடிக் கொண்டான்.

ரோகிணிக்குப் பிரயாண அலுப்பு தோன்றாதிருக்கும் பொருட்டு மன்னன் பல கேளிக்கைகளுக்கு ஏற்பாடு செய்திருந்தான். பல கலைஞர்கள் அதற்காகவே வரவழைக்கப்பட்டிருந்தனர். அந்தக் கலைஞர்களுடன் யாழிசைக்கும் இளைஞனும் வந்திருந்தான். அவனைப் பார்த்த முதலெடுப்பிலேயே ரோகிணி தன் வசமிழந்தாள். இது வரையில் அவள் எந்த ஆண்மகனையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை. அவள் உறவாடியதெல்லாம் வானத்துச் சந்திரனுடன்தான். ரோகிணி தன்னுடைய நிலைமையை நினைத்து, அந்த இளம் இசைப் புலவனை மறந்துவிடச் சில

நாட்களாக எவ்வளவோ முயன்றான். ஆனால் அது முடியவில்லை. அந்த முயற்சியில் அவன் அடைந்த தோல்விதான் இப்பொழுது கண்ணீராக வெளிப்பட்டது.

* * *

ரோகிணி அவள் தகப்பனுக்கு ஏக புத்திரி. அழகுக் கலையின் அந்தரங்கத்தை விளக்கும் கவிதை சொல்லும் முகம்; உருக்கி வார்த்த தங்கத்தையும், செதுக்கிச் செப்பனிட்ட தந்தத்தையும் ஒன்றாக்கிச் செய்த பிம்பம்தான் அவள். அவளது கண்களில் சுடர்விட்ட மின் ஒளியில் இவ்வுலகத்தையே ஆக்கி அளிக்கும் ஜீவசக்தி யிருந்தது. வானக் கடலில் மிதக்கும் பூரண சந்திரன் வீசும் அமுத கிரணங்களின் ஒளி அவள் ரூப சௌந்தர்யத்தில் எப்போதும் பிரகாசித்தது.

ரோகிணிக்கு வயது வளர வளர, ரூப சௌந்தர்யமும் புத்தொளி பெற்று வளர்ந்து கொண்டே வந்தது. அதே சமயத்தில் ரோகிணியின் தந்தையினுடைய மனத்திலும் கவலை வளர்ந்தது. 'வானத்து ரோகிணியின் வண்ண எழில் பெற்று அழகுத் தெய்வமாக விளங்கும் இந்தப் பெண்ணுக்கு ஏற்ற நாயகன் எங்கே கிடைக்கப் போகிறான்!' என்று நினைந்து மன்னன் மனம் புழுங்கினான்.

ரோகிணி சதா சர்வ காலமும் இயற்கை எழிலின் இன்பத்தில் மனம் பறிகொடுத்துத் தன்னை மறந்திருப்பாள். கீதம் பாடும் குயிலின் குரலும், நாதங் கலந்த கிளியின் பேச்சும் ரோகிணியைப் பெரிதும் கவர்ந்தன. பசுமை போர்த்த பசும்புல் தரையில் நடப்பதிலும், பச்சை மரங்களின் நிழலில் இருப்பதிலும் ரோகிணிக்குச் சொல்ல முடியாத ஆனந்தம். ஆகையினால் அவள் அரண்மனை நந்தவனத்து வனமோகினியாகத் திகழ்ந்தாள். நிலவு பொழியும் இரவு வேளைகளில் அரண்மனை மேல் மாடியில் அமர்ந்து வெண்ணிலவு வான வீதியில் பவனி வருவதைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

சிறு குழந்தையா யிருக்கும்போதே தாயை இழந்து விட்ட அவளுக்குத் தந்தையிடம் அளவு கடந்த பிரியம். இன்னமும் சிறு குழந்தையைப் போலவே பழகுவாள்.

"அப்பா, அதோ பாருங்கள், வானத்தில்! அழகி ரோகிணி சந்திரனைத் தன் ஒளிக் கண்களால் விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்பா, சந்திரனின் அன்பு ஒளியினால் ரோகிணிக்கு மகிழ்ச்சி உண்டாகிறதா, இல்லை, ரோகிணியின் பிரேமையினால் சந்திரன் மகிழ்ந்து போகிறானா?" என்று கன்னிப் பெண்ணாயிருந்த ரோகிணி ஒருநாள் கேட்டாள்.

தந்தையின் முகத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி பிரதிபலித்தது.

"நல்ல கேள்வி, ரோகிணி! ரோகிணியின் பார்வையில்தான் சந்திரன் பூரித்துப் போகிறான். அகிலப் பிரபஞ்சத்துக்கும் சந்திரன் வீசும் நிலாக் கதிர், ரோகிணியின் பிரேமை யில்லாவிட்டால் அவ்வளவு குளிர்ச்சியா யிராது!" என்று மன்னன் தன் மகளுக்கு விடையளித்தான்.

இதைக் கேட்டு, நிலாமதி போன்ற ரோகிணியின் முகம், மகிழ்ச்சியினால் இன்னும் அழகாக மலர்ந்தது.

"அப்பா, நான் நினைத்ததையே நீங்களும் சொல்லுகிறீர்கள்!" என்று மன நிறைவோடு கூறினாள் ரோகிணி.

இந்தச் சம்பவம் மன்னனின் மனத்திரையில் அடிக்கடி நிழலோட்டமாக வரும்.

இப்பொழுது ரோகிணி சின்னஞ் சிறு கன்னிப் பெண்ணல்ல; எதற்கெடுத்தாலும் 'கலீர்' என்று களங்க மில்லாமல் சிரிக்கும் இயல்பு இப்பொழுது அவளிடம் அடியோடு மாறி விட்டது. அந்தக் களங்கமற்ற பெருஞ் சிரிப்புக்குப் பதிலாக நாணம் கலந்த புன்சிரிப்பு கன்னம் குழியத் தோன்றலாயிற்று. முன்பு அவள் நடந்தால் துள்ளிஓடும் மானின் நினைவு வரும். இப்பொழுது அவள் பூத்துக் குலுங்கும் பூங்கொடி மந்தமாருதத்தில் அசைவது போல் நடந்தாள். மணம் கமழும் மலரின் காந்தி அவளது எழில் உருவத்தில் இப்போது கலந்து காணப்பட்டது.

இந்த மாறுதலைக் கவனித்த மன்னன் விரைவில் ரோகிணிக்கு மணம் முடிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். சமீபத்தில் மன்னன் பல தேசங்களுக்கு யாத்திரை போயிருந்த போது, ரோகிணியின் உருவப் படத்தை உடன்கொண்டு போயிருந்தான். அவனது பால்ய நண்பனான மலை நாட்டு மன்னன் ரோகிணியின் சித்திரத்தைப் பார்த்து அவளைத் தன் மகன் இளமதிக்கு மணம் செய்துவைக்க விரும்பினான். இளவரசன் இளமதியைப் பார்த்து ரோகிணியின் தந்தை சற்று நேரம் அயர்ந்து போனான். கம்பீரமான எழில் உருவம். அரச பரம்பரைக்கு ஏற்ற உயர் பண்பும் மற்றும் உத்தம குணங்களும் குடிகொண்டு விளங்கிய அவன் அரசனைக் கவர்ந்து விட்டான்.

மலை நாட்டரசன் சமீபத்தில் தன்னூட்டில் நடக்கப்போகும் கலை விழாவுக்கு இளவரசி ரோகிணியையும் அழைத்துக் கொண்டு அவசியம் விஜயம் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளுடன் விருந்தாகவந்த மன்னனை அனுப்பி வைத்தான்.

அந்தக் கலைவிழாவில் கலந்து கொள்ளும் நோக்கத்துடன் தான் ரோகிணியும் அவள் தந்தையும் மலை நாட்டை நோக்கிப் பிரயாணமானார்கள். அந்தப் பிரயாணம் உல்லாஸமாயிருப்பதற்காக மன்னன் உற்சாக மூட்டும் பல கேளிக்கைகளை ஏற்பாடு செய்திருந்தான்.

யாழ் இசைத்துக் கொண்டு அற்புதமாகப் பாடும் வாலிபன் ஒருவன் அந்தக் குழுவில் வந்திருந்தான். அவனது இசையைக் கேட்டதும், ரோகிணிக்கு வேறெதிலும் மனம் செல்லவில்லை. உள்ளம் உருக, ஊன் உருக அவன் பாடிய பாட்டில் அவன் ஏக்கத்தையும், பரிவையும், எல்லையற்ற இன்பத்தையும்,

இன்னும் பல வேறு உணர்ச்சிகளையும் கண்டான். ஒரு சமயம், அவன் பாட்டில் ஆழங்காண முடியாத சோகம் கொந்தளிக்கும்: இன்னொரு சமயம், மனத்தை ஈர்க்கும் மந்த மாருதத்தின் இதந் தரும் ஸ்பரிச உணர்ச்சி பிறக்கும்; மற்றொரு சமயம் இன்ப வேதனையில் திளைக்கும் இன்ப கீதம் ஒலிக்கும்.

முதலில் அவனது இசையில் லயித்த அவளது உள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக அவளையும் அறியாமல் அவனிடமே ஈடுபடத் தொடங்கியது. அவனின்றி அவளுக்கு வாழ்வு இல்லை என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் உறுதி பெற்றது.

ஏழையும் அநாதையுமான அந்த வாலிபனின் வறுமைக் கோலம் அவள் கண்களுக்குப் புலனாகவே யில்லை. அதற்கு மாறாக அவன் ஒரு கந்தர்வ மன்னனாகக் காட்சி யளித்தான்.

தன் தந்தையிடம் சொல்ல வில்லை. அவர் தனக்கு ஏற்றவரனாகத்தான் தேடியிருப்பார் என்பது நிச்சயமாக அவளுக்குத் தெரியும். ஆனால் ரோகிணியின் தந்தை, அவள் இளவரசன் இளமதியை முன்னதாகப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே மலை நாட்டில் நடக்கப் போகும் கலை விழாவுக்கு அவளையும் அழைத்து வந்தார்.

இரவு முழுவதும் ரோகிணிக்கு அமைதியே இல்லை. போதாக் குறைக்கு, முதல் நாள் இரவு, இசைவாணனின் சுந்தர முகத்தை, அவன் தன்னைப் பார்க்காதபோது கவனித்தாள். பாடிக் கொண்டிருந்த அவன் கண்களில் கண்ணீர் ததும்பியது. சட்டென்று அவன் மறுபுறம் திரும்பித் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். ரோகிணியின் இதயம் நின்றுவிடும் போலிருந்தது. 'ஆகா!

அன்று பௌர்ணமி. நிலவொளியில் மனவேதனையுடன் ரோகிணி அந்தச் சின்னப் பாறையில் அமர்ந்திருந்தாள். தன் விருப்பத்தைத் தந்தையிடம் சொல்ல முடியாத நிலை அல்லவா ஏற்பட்டிருக்கிறது?

இளமதிக்கும் ரோகிணிக்கும் விவாகம் முடித்து விடுவது என்று மன்னன் தீர்மானித்து விட்டான். தனக்கு வரப்போகும் மணாளனைத் தான் முன்னதாகவே பார்க்க வேண்டும் என்று கூட அவள்



அவனும் அவளை நினைந்து உருகுகிறானா? இது பலிக்காத பகற் கனவு என்று தெரிந்து கண்ணீர் பெருக்குகிறானா? இறைவனே, இது என்ன சோதனை! இதயம் கனியப் பாடிக் கொண்டேயிருந்தவன் சட்டென்று பாட்டை நிறுத்திவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு திடீரென்று எழுந்து போய் விட்டானே!'

ரோகிணியின் சிந்தனையில் அந்த இசை வாணனின் எழில் உருவம் நிலைத்து நின்று விட்டது. தன் உள்ளக் கிளர்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ள முடியாமல் அவள் பட்ட வேதனை சொல்ல முடியாது. மனத்தில் ஒருவனை இருத்திக் கொண்டு எப்படி அந்த அரசிளங் குமரனின் கரம் பற்ற முடியும்? மன்னர் குலத்தில் பிறந்தவள் ஓர் அநாதை இசைவாணனை மணந்து கொள்வது எப்படிச் சாத்தியமாகும்? இதையெல்லாம் நினைத்து ரோகிணி தூண்டிற் புழுவினைப் போல் துடித்தாள்.

* * *

இரண்டு நாள் பிரயாணத்துக்குப் பிறகு, ராஜகுடும்பம் மலைநாட்டு எல்லையை அடைந்தது. அங்கிருந்தே ராஜ மரியாதைகளுடன் ரோகிணியும் அவள் தந்தையும் மற்றும் மந்திரி, சேனை வீரர்களும் வரவேற்கப் பட்டனர். எல்லோரும் நகரத்தை யடைந்ததும், மாபெரும் அரண்மனையின் ஒரு புறத்தில் உள்ள ராஜ விருந்தினர் விடுதியில் தங்கி யிருந்தனர்.

ரோகிணி தன் மனத் துயரத்தைத் தகப்பனார் அறிந்து விடப் போகிறாரோ என்கிற அச்சத்தினால் அவர் கண்ணிலேயே படாமல் சர்வ ஜாக்கிரதையாக இருந்தாள்.

தனிமையை விரும்பிய அவளுக்கு அரண்மனை நந்தவனம் அளவு கடந்த திருப்தியை அளித்தது. நந்தவனத்தில் இருந்த நவ நவமான வர்ண விசித்திரங்கள் அமைந்த மலர்களை உதிர்க்கும் செடிகளும் கொடிகளும், பச்சைப் பசேலென்ற பசும்புல்லும், குளிர்ந்த கொடி வீடுகளும், நீர் நிறைந்த தாமரைத் தடாகமும் ரோகிணியின் கவனத்தைச் சிறிதும் கவரவில்லை.

அந்தக் குளிர்ந்த மாலை வேளையில் அவள் மனசில் தாங்கொணாத வேதனையின் புழுக்கமே நிறைந்திருந்தது.

திடீரென்று நந்தவனத்தின் ஒரு புறத்திலிருந்து கனிவும் கசிவும், எல்லையற்ற இனிமையும் கொண்ட இன்னிசை வெள்ளம் மந்தமாருதம்போல் மெல்லெனப் புறப்பட்டு வந்தது. அந்த இனிய கானம் ரோகிணியின் உள்ளத்தையும் உணர்வையும் உருக்கியது. கட்டுக் கடங்காத ஆவல் உந்தித் தள்ள ரோகிணி எழுந்து இசை வெள்ளம் வரும் திசையை நோக்கி நடந்தாள்.

அடுத்த நிமிஷம் அவள் கண்ட காட்சி அவளை வியப்புக் கடலில் ஆழ்த்தியது.

"ஆ! இது உண்மையா?" என்று ரோகிணி தன்னையும் மறந்து பலமாகக் கூவி விட்டாள்.

அடுத்த விநாடி இசை பாடுவது நின்றது.

"உண்மைதான், ரோகிணி! உண்மைதான். இளவரசன் இளமதிதான் இசைவாணனாக வந்து ரோகிணியை மகிழ்வித்தான். உனக்கு இளமதியைப் பிடிக்கிறதா, ரோகிணி?" என்று கேட்டுக் கொண்டே வந்து இளமதி ரோகிணியின் தளிர்க் கரங்களைப் பற்றினான்.

ரோகிணி தன் கரங்களை அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ளச் சிறிதும் முயலவில்லை. அவள் இந்த எதிர்பாராத நிகழ்ச்சியினால் பிரமையில் ஆழ்ந்து விட்டாள்.

"ரோகிணி, ஏன் பேச மாட்டேன் என்கிறாய்? நான் உன்னுடைய உள்ளத்தை அறிந்து கொள்ளுவதற்காகவே, உங்கள் நாட்டுக்கு இசை வாணனாக வந்து உன்னைக் கண்டேன்; உன் உள்ளத்திலும் இடம் பெற்றேன். நான் செய்த காரியம் தவறானால் என்னை மன்னித்துவிடு, ரோகிணி! பேரழகியாகிய உனது உண்மைக் காதலைப் பெறாமல், உன்னை விவாகம் செய்துகொள்ள என் மனம் ஒப்பவில்லை...என் தகப்பனாரும் உன் தகப்பனாரும் சந்தித்துப் பேசியபோது, அவர்களிடம் என் விருப்பத்தை வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை..." என்று இளமதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரோகிணி தலை நிமிர்ந்து இளவரசனை ஒரு கனிந்த பார்வையோடு நோக்கினாள்.

"ரோகிணி, என் செய்கை உனக்குப் பிடிக்கவில்லையா?"

"...எனக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இன்ப அதிர்ச்சியில் என்னால் பேச முடியவில்லை. எதிர்பாராத விதமாகச் சில சமயம் இன்பக் கனவும் நினைவாக வருவதுண்டு என்று சொல்லிக் கேட்டிருக்கிறேன். என் வாழ்வில் அது நேர்ந்தது. இளவரசரும் இசைவாணரும் வெவ்வேறு மனிதர்களாயிருந்திருந்தால் என் வாழ்வு பாழாகியிருக்கும்..." அம்மம்மா! இதைச் சொல்லி முடிப்பதற்குள் அவளுக்குத் தான் எப்படி வியர்த்துவிட்டது! அவள் கன்னங்கள் ரோஜா இதழ்களைப் போல் சிவந்து விட்டன.

"ரோகிணி, என் மனத்தைப் பிடித்து அரித்துக் கொண்டிருந்த ஒரு பெரிய கவலை நீங்கியது. நம் பெற்றோர்களுக்கு எதிரில் ஒருவரையொருவர் சந்தித்துப் பார்த்துக் கொள்ளுவதற்கு முன்னால், உன் மனசை அறிய ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமே என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். ரோகிணி, என்மீது கோபம் இல்லையே...?" என்றான் மிகவும் குழைந்த குரலில், இளமதி.

"நீங்கள் ரொம்பப் பொல்லாதவர். என்னை என்னமாதிரி தவிக்க விட்டீர்கள்!" என்று ரோகிணி நாணத்துடன் கன்னங் குழியச் சிரித்துக் கொண்டே கூறினாள்.

நீலவானத்தில் பவனி வந்துகொண்டிருந்த சந்திரன் வெண்முகிற் போர்வையில் மறைந்தான். அவனுக்கு அருகில் இருந்த அவன் அன்புக் காதலி ரோகிணியும் அவனுடன் மெல்லிய முகில் திரையில் மறைந்தாள்.



கோகிலா

ரமண்லால் வஸந்தலால் தேசாய் ✣ மொழிபெயர்ப்பு: ரா.வீ.

21. மனம் மாறுகிறது!

ஜுகல் கிஷோர் சிரித்த முகத்துடன் ஜகதீஷைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான். "ஏன் அப்பா இப்படித் துணுக் குற்றுப் பிரமை பிடித்தவன் போல் நிற்கத் தொடங்கி விட்டாய்? நான்கைந்து நாட்கள் முன்பு கூட உன்னைப் பற்றித் தகவல் விசாரித்தேன். உனக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது உன் உடம்பு எப்படி யிருக்கிறது? கொஞ்சம் தேவலையா? உடம்பு நன்றாகக் குணம் ஆவதற்கு முன்னால் நீ எதற்காக வெளியில் புறப்பட்டாய்? இன்னும் இரண்டொரு நாட்கள் வீட்டிலேயே தங்கி இளைப்பாறக்கூடாதோ?" என்று கேட்டான்.

"நன்றாக ஜுரம் இறங்கி விட்டது. வீட்டில் எனக்கு இருப்புக் கொள்ள வில்லை. அதனால் தான்......"

"ஜுரம் குறைந்தாலும் உடம்பு இன்னும் தேறியதாகத் தெரிய வில்லையே! உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ கவலையினால் வாடுகிறாய் என்றும் தோன்றுகிறதே! எதற்காக இல்லாத கவலைகள் எல்லாம் பட்டு வீணில் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாய்?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை, கொஞ்சம் சிறைக்குப் போக வேண்டி யிருந்தது."

"என்ன? சிறைக்குப் போக வேண்டியிருந்ததா? என்ன அப்பா விளையாடுகிறாய்? சிறைக்குப் போவதென்றால் அதற்கு அசாத்தியமான நெஞ்சுரம் வேண்டும் அப்பா, நெஞ்சுரம் வேண்டும்! சிறைச்சாலை வரைக்கும் நடந்து செல்லக் கூடிய சாமர்த்தியமோ சக்தியோ கூட உனக்கு இருப்பதாகத் தெரியவில்லையே!" என்று கேலி செய்தான் ஜுகல் கிஷோர்.

அதைக் கேட்ட ஜகதீஷ் இலேசாக நகைத்தான். "நான் போனாலும் என்னை அங்கே வைத்துக் கொள்ளக் கூடியவர்கள் யாரும் இருப்பதாகவும் தெரியவில்லையே!" என்றான்.

"பூ! நீ சிறைச் சாலைப் பக்கம் போயிருந்தாயா? நான் என்னவோ ஏதோ என்று எண்ணி விட்டேன். ஆமாம், நீ சிறைச் சாலைப் பக்கம் எதற்காகப் போயிருந்தாய்?" என்று கேட்டான் ஜுகல்கிஷோர்.

"அங்கே ஒரு கைதியைப் பார்த்து விட்டு வர வேண்டி யிருந்தது!"

"கைதியையா? யார் அது, அந்தக் கைதி?"

"என் வீட்டில் ராதா என்று ஒருத்தி இருக்கிறாளே, தெரியும் அல்லவா? அவள் கணவன் சிறையிலிருந்து விடுதலை பெறப் போகிறான். என்றைக்கு அவனை விடுவிக்கப் போகிறார்கள் என்பதை அறிந்து வருவதற்காகப் போயிருந்தேன்!"

"ஓகோ! பேஷ், பேஷ்! இப்பொழுதெல்லாம் நீ பரோபகாரமான காரியங்களில் இறங்கி விட்டாய் போலிருக்கிறது! இதெல்லாம் எத்தனை நாட்களாக? வர வர நல்லவர்களோடு சேர்ந்து நீயும் நல்ல காரியங்கள் செய்யத் துணிந்து விட்டாயா, என்ன?" என்று குரலில் இளக்காரம் தொனிக்கக் கேட்டான் ஜுகல்கிஷோர்.

"வெள்ளையுடை உடுத்தி வெள்ளை உள்ளம் படைத்தவர்களைப் போல் வேஷம் போட்டு, வெளியே திரியும் மனிதர்களைக் காட்டிலும் சட்டத்தினால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் எத்தனையோ நல்லவர்களாக இருக்க முடியும் என்பதை காளாவட்டத்தில் நான் தெரிந்து கொண்டேன். அதனால்தான்..."

"பேஷ், பேஷ்! நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறாயே! ஆனால் அவர்களிடத்தில் முட்டாள்தனம் அதிகம்; சாமர்த்தியம் குறைவு என்பதை நீ புரிந்து கொள்ள வில்லை போலிருக்கிறது. திருடத் தெரிந்தாலும் தெற்றத் தெரிய வேண்டும் என்று சொல்வதை நீ கேட்டதில்லையா? அதை மறந்து விட்டாயே! அவர்கள் சீக்கிரம் அகப்பட்டுக் கொண்டு விடுவார்கள். நாங்கள் அகப்பட்டுக் கொள்ள மாட்டோம். இல்லா விட்டால் அவர்கள் ஏன் கம்பி எண்ணுகிறார்கள்? இவர்கள் ஏன் இன்பமாக வாழ்கிறார்கள்?" என்று கேட்டான் ஜுகல்கிஷோர்.

"ஆமாம். இந்த விஷயத்தில் உங்களுக்கு இவ்வளவுதானே ஆட்சேபனை?"

"ஆமாம், இதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? மாடு நெல்லைத் தின்றால் காவல் காப்பவனின் கைத்தடி தானாகவே மாட்டின் முதுகில் விழுகிறது!"

ஜுகல்கிஷோரை ஒரு முறை ஜகதீஷ் ஏறிட்டுப் பார்த்தான். ஆனால் வாயைத் திறந்து பதில் ஒன்றும் சொல்ல வில்லை.

"என் பேசக் காணும்? வாய் அடைத்து நின்று விட்டாயே! இந்த உலகம் போகிற போக்கு அப்படி இருக்கிறது அப்பா, அப்படியிருக்கிறது! மாடு நெல்லைத் தின்னும் பொழுது பார்த்து விட்டால் அதை அடிக்கத்தான் அடிப்பார்கள்; யாரும் சும்மா கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்!"

"அது சரி! இதை எதற்காக நீங்கள் சொல்கிறீர்கள் என்று எனக்குச் சரியாக விளங்க வில்லையே!"

"விளங்குமோ? விளங்காதுதான்! கணவன் குற்றம் செய்யும் போது பிடிக்கப்படுகிறான் என்று வைத்துக் கொள். அவன் வசவும் திட்டும் வாங்கித்தான் ஆக வேண்டும். அவன் மனைவியே அதைப் பார்த்து விட்டால்......? அப்புறம் அவன் அவன் புத்திக்குத் தகுந்தபடிதான் பிழைத்துக் கொள்ள வேண்டும்!" என்றான் ஜுகல்கிஷோர்.

"நீங்கள் பெரிய வேதாந்திபோல் புரியாத வேதாந்தம் அல்லவா பேசுகிறீர்கள்!" என்றான் ஜகதீஷ்.

"நான் ஒன்றும் வேதாந்தமும் பேசவில்லை; சித்தாந்தமும் பேசவில்லை. எது உண்மையோ, அதைத்தான் சொல்கிறேன். நீ புரிந்து கொள்ளவில்லையென்றால் அதற்கு நானா பொறுப்பாளி? வாழ்க்கையில் வெற்றி காண முடியாமல் நீ திண்டாடுவதற்குக் காரணம் உன் புத்திக் குறைவுதான். நான் சொல்வதைக் கேள்; ஒரு முறைக்கு இரு முறையாகக் காது கொடுத்துக் கேள். மனிதன் என்பவன் மிருகம் என்பதை முதலில் நன்றாகப் புரிந்து கொள். அவனுக்கு இந்திரிய சுகம்தான் வேண்டும். எத்தனைக் கெத்தனை உன்னால் இந்தச் சுகத்தை அவனுக்குத் தர முடியுமோ, அத்தனைக் கத்தனை உனக்கும் கிடைக்கும். இந்த ரகசியத்தைப் புரிந்து கொண்டு நடந்தால் இந்த உலக வாழ்க்கையில் நீ வெற்றி காண்பாய்!"

"அது சரி! இந்த சுகத்துக்காக நீங்களும் நானுமே இழுத்துப் பறித்துக் கொண்டு நிற்க நேர்ந்தால்...?"

"அப்படி யெல்லாம் நேராது!"

"சரி, நேராமலே இருக்கட்டும். ஆனால் தாங்கள் இதெல்லாம் எனக்கு எதற்காகச் சொல்கிறீர்கள்? எனக்காகத் தாங்கள் இத்தனை சிரமங்களை மேற் கொள்வானேன்? எனக்கு நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே! ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட கதையாகப் பேசுகிறீர்களே!" என்றான் ஜகதீஷ்.


ஜகதீஷின் இந்தக் கேள்வி ஜுகல் கிஷோரின் உள்ளத்தில் தைத்தது. இருந்தாலும் அவன் தன் உள்ளத்து உணர்ச்சியை முக பாவத்தில் காட்டிக் கொள்ளவில்லை. வெகு அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே, "ஏன்? இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று உன்னிடம் எனக்கு ஏற்பட்டுள்ள அன்பும் அநுதாபமும் காரணமாக இருக்கலாம். அல்லது என் தன்னலம் ஏதாவது ஒன்று உன் மூலம் நிறைவேறலாம். ஆராய்ந்து பார்க்கப் போனால் இரண்டு காரணங்களுக்கும் அடிப்படை ஒன்றேதான். ஏனெனில் உன்னால் என் தன்னலம் ஏதாவது நிறைவேறுவதாக இருந்தால்தானே உன்னிடம் எனக்கு அன்பும் ஆதரவும் ஏற்பட முடியும்? என்னைக் கேட்டால் அன்புகூடத் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டது தான் என்று கூறுவேன்" என்றார்.

"அப்படியானால் இப்பொழுது உங்களுடைய தன்னலம் எதற்காவது நான் சாதனமாக ஆவேன் என்று தோன்றுகிறதோ?"

"ஆமாம், அதனால்தான் நான் உன்னை இவ்வளவு விரும்புகிறேன்; உன்னிடம் இவ்வளவு அன்பு பாராட்டுகிறேன்!"

"சரி, உங்களுக்குச் சாதனமாக ஆவது போல் ஆகி நானே என் தன்னலம் எதையாவது பூர்த்திசெய்துகொண்டுவிட்டால்...?"

"அதனால் எனக்கு என்ன நஷ்டம்? நீ உன் தன்னலத்தைப் பூர்த்தி செய்து கொண்டால் எனக்கு இன்னும் நல்லதாகப் போயிற்று! அப்புறம் நீ நான் இருவருமே சேர்ந்து நம் நம் தன்னலத்தைப் பூர்த்தி செய்து கொள்ள முற்பட்டு விடுவோம். என்ன, நான் சொல்வது?" என்றான் ஜுகல் கிஷோர்.




"ஆனால் எனக்கு வேறு ஒரு சந்தேகம். உங்கள் தன்னலமும் என் தன்னலமும் ஒன்றையொன்று மோதிக் கொண்டு முந்திக் கொள்ளத் தலைப்பட்டு விட்டால்...?"

"உடனே நான் உன்னை என் வழியிலிருந்து நிர்த்தாட்சிண்யமாக விலக்கி விடுவேன். அப்புறம் உன் மேல் எனக்கு ஈவு இரக்கம், தயவு தாட்சிண்யம் என்று ஒன்றுமே பிறக்காது; பிறக்கும் என்று நீ எதிர்பார்க்கவும் முடியாது!" என்றான் ஜுகல் கிஷோர்.

ஜகதீஷ் சுபாவமாகவே அலட்சிய மனப்பான்மை கொண்டவன். அவனது ஆசைகள் அத்தனை பெரியவை அல்ல; மனக் கோட்டைகள் மலைபோன்றவை அல்ல. மக்களுக்கு ஊழியம் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு நேர்மையான முறையில் அவன் தேசத் தொண்டு செய்யக் கருதினான். கொண்ட கருத்தைச் செயலாகவும் உருவாக்கினான். ஆனால் காளாவட்டத்தில் அரசாங்க அதிகாரிகளிடமுள்ள மத மாற்சரியங்களும், குண அவகுணங்களும், சிறுமை பெருமைகளும் தேசத் தொண்டர்களிடையேயும் தாண்டவமாடுவதைக் கண்டான். தேசத் தொண்டைத் தங்களுக்கு ஒரு தளமாக உபயோகப் படுத்திக் கொண்டு பலர் பரஸ்பர விரோதத்தை வளர்த்துக் கொள்வதையும் ஒருவரையொருவர் நிந்தா ஸ்துதி செய்து கொள்வதையும் கண்டான். எனவே, அவனுக்குப் பொதுநல வாழ்வும் கசந்தது. அத்தகைய செயல்கள் பிடிக்காததனால் தானே அவன் அன்று ஒரு நாள் அரசாங்க உத்தியோகத்தை உதறித் தள்ளி விட்டு வெளியேறினான். அதே காரணங்களுக்காக அவன் பொதுநல வாழ்வுக்கும் முழுக்குப் போட்டு விடுவதென்று முடிவு கட்டினான். உத்தியோகத்தை உதறிய பின் தேசத் தொண்டில் கொண்ட ஆர்வமும் குன்றி விடவே, அவன் சாதாரணமாக வயிறு வளர்த்து வாழ்க்கையை ஓட்ட முயலும் எத்தனையோ மக்களைப் போல் தானும் வாழ்வதென்று தீர்மானித்தான்.

அதன் பலனாகவே அவன் உள்ளத்தில் உறைந்திருந்த தன்மான உணர்ச்சி தணியவில்லை, தூங்கவில்லை; மரிக்கவில்லை. உத்தியோகத்திலோ அல்லது தேசசேவையிலோ ஈடுபட்டிருந்தால் அல்லவா பிறர் கையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறதே என்று எண்ணித் தன்மான உணர்ச்சியை அடக்கியாள வேண்டியிருக்கும்! ஆனால் அவன் தான் அதையெல்லாம் விட்டொழித்து விட்டானே! அவன் யாருக்கு அஞ்ச வேண்டும்? அதனால்தான் ஜுகல் கிஷோரின் சொற்களினால் அவனுடைய ஆணவத்துக்குப் பங்கம் நேரவில்லை. போதாக் குறைக்கு அவன் இது வரை யாரிடமும் கை நீட்டிக் கருணைப் பிச்சை கேட்டதில்லை. அதனால் அவனுக்கு ஜுகல்கிஷோர் தன்னை யுத்த களத்திலே



சென்ற செப்டம்பர் மாதம் பத்தொன்பதாம் தேதி சென்னை மியூஸியம் தியேட்டரில் மாம்பலம் ஸ்ரீராம் கலைச் சங்கத்தினர், 'கல்கி' பத்திரிகையில் தொடர் கதையாக வெளிவந்ததும், 'கல்கி' உதவி ஆசிரியர் ரா. வீழிநாதன் அவர்கள் நாடகமாக்கித் தந்ததுமான 'மனோரமா' நாடகத்தை வெகு சிறப்பாக நடித்தனர். நாடகத்துக்குத் தலைமை வகித்த மந்திரி எம். பக்தவத்ஸலம் அவர்கள் நாடகத்தையும் நடிகர்களின் கலைத் திறமையையும் மிகவும் பாராட்டிப் பேசினார்.

வந்து நிற்குமாறு அறை கூவி அழைக்கிறானே என்று தோன்றியது.

அமைதியே உருவாகப் பின்னணியில் நின்று செயலில் ஈடுபட்டிருக்கும் பலரை இம்மாதிரி அறைகூவல்கள் முன்னணிக்குக் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கின்றன. ஜகதீஷும் அத்தகையவர்கள் கோஷ்டியில் ஒருவனாகி வீறு கொண்ட சொற்களில், "எனக்கு உங்கள் தயவு தாட்சிண்யம் ஒன்றும் தேவை யில்லை. எனக்கு வேலை சொல்லுங்கள். செய்யச் சித்தமா யிருக்கிறேன். உங்களுடன் வர வேண்டுமானால் இப்பொழுதே வரவும் தயாரா யிருக்கிறேன்!" என்றான்.

ஜுகல் கிஷோர் மானிட சுபாவத்தை அநுபவ வாயிலாக நன்கு உணர்ந்தவன். ஜகதீஷ் திடுதிப்பென்று தன்னுடன் வரச் சம்மதித்து விடவே, தன் சொற்கள்தான் இவ்வளவுக்கும் மூலகாரணமா யிருக்கவேண்டும் என்று எண்ணினான்.

உலகம் பலவிதம் என்பது எவ்வளவு உண்மை! சிற்சிலருடைய சுபாவம் பிறருடைய தயவு-தாட்சிண்யத்தைப் பொறுப்ப தில்லை. சிற்சிலருக்குப் பிறருடைய அறைகூவல்களைக் கேட்டால் சகிக்காது. ஜகதீஷின் சுபாவம் என்ன என்பதை ஜுகல் கிஷோர் உணர்ந்து கொண்டு விட்டான். ஆனால் சற்றுத் தயங்கினான். இருந்தாலும் ஜகதீஷின் அறைகூவலை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழி இருப்பதாகத் தோன்றவில்லை. எனவே ஜகதீஷைப் பார்த்து, "நாளை கின்று காலையில் நீ ஸர் பிஹாரிலாலின் ஆலைக்கு வந்து சேர்!" என்றான்.

"அங்கே வந்து நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"அதைப் பற்றி யெல்லாம் இப்பொழுது இங்கே ஒன்றும் கேட்காதே! நாளை கின்று நான் அங்கேயே வந்து சொல்கிறேன்!" என்றான் ஜுகல் கிஷோர்.

அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் விடை பெற்றுக் கொண்டு பிரிந்தனர்.

ராதாவிடம் அவள் கணவனைப் பற்றிச் சொல்ல ஜகதீஷ் துடியாகத்துடித்துக்கொண்டிருந்தான். அதனால் ஜுகல் கிஷோரிடம் விடை பெற்றுக் கொண்டதும் வீட்டை நோக்கி வேகமாக விரைந்தான்.

ஜுகல்கிஷோர் கொஞ்சம் யோசனையில் ஆழ்ந்தான். அவன் மனோஹரைப் பார்ப்பதற்காகப் போய்க் கொண்டிருந்தான். கூடவே, சாந்தா கௌரியின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலும் அவனை உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது.

மானிட சாதியிடமுள்ள மிருகத் தனத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த உலகத்தின் ஒழுக்கங்களும் பழக்க வழக்கங்களும் உருவாக்கப் பட்டிருக்கின்றன என்னும் கொள்கையைத் தன் வாழ்க்கையின் ஆதர்சமாகக் கடைப் பிடிப்பவன் ஜுகல்கிஷோர். அதனால் ஜகதீஷ் சொன்ன வார்த்தைகள் அவனைத் திக்கு முக்காட வைத்துவிட்டன.


"சரி, கோராமலே இருக்கட்டும். ஆனால் தாங்கள் இதெல்லாம் எனக்கு எதற்காகச் சொல்கிறீர்கள்? எனக்காகத் தாங்கள் இத்தனை சிரமங்களை மேற் கொள்வானேன்? எனக்கு நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே! கண்ணைக் கட்டிக் காட்டில்

கோடக் அளிக்கிறார்கள்—
உங்களுக்கு குதூகலமூட்டும் 2 புதுமாடல்கள்—
யாரும் வரவேற்கும்படியான விலையில்!



அழகான தோற்றம்

உலோகத்தில் தயாரிக்கப்பட்டதான, வலுவான கேஸ். கறுப்பு நிறம். வசீகரமான முறையில் க்ரோமியம் ப்ளேட் செய்யப்பட்டிருக்கிறது. பலம் பொருந்தியதும், சிறந்ததும் நன்றாக பொருத்தப்பட்டதுமான பிட்டிங்ஸ். இதைவிட அழகான காமரா எந்த விலையிலும் தென்படாது!





ஐ-லெவல் வ்யூ பைண்டர்

லென்ஸ்-டைப் வ்யூ-பைண்டர் நீங்கள் படம் பிடிக்க விரும்பும் வஸ்தியம் மிக தெளிவாகவும் பிரகாசமாகவும் தெரிகிறது. எச்சமயத்திலும் உங்கள் உபயோகத்திற்கு தயாராக இருக்கிறது இந்த காமரா.

அழகான தோற்றம்

சிறந்த சேவனம்

அவைகளை உங்கள் கோடக் வியாபாரியிடம் சென்று பாருங்கள்!

'கோடக் ஜூனியர் I காமரா

பாக்ஸ் காமராவை போலவே மிகவும் எளிதானது. 'ஜூனியர்'ன் போகஸிங் பாக்டரியிலிருந்து தானே சரிசெய்யப்பட்டு வருகிறது. மிக எளிதில் அவுட்-டோர் படங்கள் எடுக்கலாம். மங்கின ஒளியில் ப்ரீப்-டைம் எக்ஸ்போஷர்களும் மிக எளிதானது. ரூ. 76/-


லெதர் கேஸ் ரூ. 9/6/-

'கோடக்' ஜூனியர் II காமரா

பாண்ட்-லென்ஸ் (f/6.3) மங்கின ஒளியில் கூட மிக சிறந்த படங்கள் கிடைக்கும். பெரிய படங்களுக்கு 4 அடிவரை போகஸிங் கிடைக்கிறது. இரண்டு ஸ்னுப் ஷாட் - ஸ்பீடுகளுடன், டைம் எக்ஸ்போஷர்களும் கூட. இன்டோர் படங்களுக்கோ, அல்லது இரவில் படம் பிடிப்பதற்கோ ஒரு 'கோடக்' ப்ளாஷ் ஹோல்டரை பொருத்திக் கொள்ளுங்கள். ரூ. 115/-

லெதர் கேஸ் ரூ. 9/6/-

கோடக்' ப்ளாஷ் ஹோல்டர் மாடல் II விரைவில் கிடைக்கும்.





பெரிதான படங்கள்

உங்களுக்கு மிகவும் பிரியமான $2\frac{1}{4} \times 3\frac{1}{4}$ அங்குல ஸைஸில் எட்டு படங்கள் ஒரே ரோல் பிலிமிற்கும் கிடைக்கிறது. அவை உங்கள் ஆல்பத்தின் அழகை பன்மடங்கு அதிகரிக்கவைக்கும்



தானாகவே திறக்கிறது

பொத்தானை அழுத்துங்கள் உங்கள் 'ஜூனியர்' காமரா தானாகவே திறந்துகொள்கிறது. அதேபோல் மீண்டும் நன்றாக அடைத்துவிடும். உங்கள் காமராவை போட்டோ எடுப்பதற்கு தயார் செய்வதற்காக நீங்கள் உங்கள் அவகாசத்தை வீண் செய்ய வேண்டியதில்லை.

இன்னும் ஏராளமானவைகள்

எந்த தேவைகளுக்கும் யாருக்கும் பொருத்தமான ஏராளமான மாடல்களில் ரூ. 17/8/- லிருந்து விதவிதமான 'கோடக்' காமராக்கள் இருக்கின்றன. உங்கள் கோடக் வியாபாரியை விசாரியுங்கள் காண்பித்துத் தருவார்.

மேல் கொடுத்திருக்கும் விலைகளில் விற்பனைவரிசேராது.

கோடக் லிமிடெட்

(இங்லோந்தில் இணைக்கப்பெற்றது)

பம்பாய் - கல்கத்தா - டில்லி மதராஸ்

K 9013

விட்ட கதையாகப் பேசுகிறீர்களே!" என்று ஜகதீஷ் சொன்ன வார்த்தைகளுக்கு அவன் என்ன பொருள் கொள்வது?

ஜகதீஷின் வார்த்தைகள் அவன் உள்ளத்தை முன் போல் உறுத்தின. ஏதாவது தன்னல நோக்கம்தான் அவனை அப்படி ஜகதீஷிடம் இழுத்துச் செல்கிறதா?- ஆமாம், அவன் ஜகதீஷின் உதவியின்றி இருக்க முடியாதா? ஏன் இருக்க முடியாது? தாராளமாக இருக்கலாமே! இருக்கலாம் என்றால் அவன் ஜகதீஷைத் தன் வழியில் கொண்டு வருவதற்கு இத்தனை பிரயாசை எதற்காக எடுத்துக் கொள்ள வேண்டும்? ஜகதீஷ் சுகப்பட வேண்டும் என்ற ஆசையோ ஆவலோ அவன் உள்ளத்தில் உதித்ததாகத் தெரியவில்லையே! மனிதனை மிருகமாக நினைக்கும் அவனுடைய உள்ளத்தில் அந்த ஆசை ஏன் ஏற்படப் போகிறது? அவனுடைய அநுபவமும் அடக்கமும் நிறைந்த அறிவு, 'இந்த மனிதர்கள் எல்லோருமே மிருகங்கள் தானா?' என்ற கேள்வியைக் கேட்டு அவன் மூளையை முற்றுகையிட்டது. அதற்கு விடை காண்பதுதான் அவனுக்குக் குதிரைக் கொம்பாயிருந்தது. அந்தக் கேள்வி மூளையை முற்றுகையிட அதற்கு விடை காணாமலேயே அவன் மனோஹரின் வீட்டை நோக்கி நடந்தான்.

சுலக்ஷ்மாவைப் பார்த்தது முதற்கொண்டு மனோஹரின் மனம் மாறி விட்டது. சாந்தா கௌரியும் கலியாணப் பேச்சை எடுத்து அவன் மனத்தைக் கிளறி விடவே, வாழ்க்கை என்னும் ரதத்துக்கு இரண்டு சக்கரங்கள் கட்டாயம் தேவை என்ற முடிவுக்கு வந்தான். பெண்ணினத்துக்கு ஆணினம் தேவை; ஆணினத்துக்குப் பெண்ணினம் தேவை. ஒரு இனம் இன்றி இன்னொரு இனம் அபூர்ணமானது என்பதும் பலத்த யோசனைக்குப் பின் அவனுக்குப் புலனாயிற்று. இத்தனை நாட்களும் இல்லாத திருநாளாக அவன் மனத்தில் இத்தகைய எண்ணங்கள் ஓடவே, மனமொன்றிச் சுவாரஸ்யமாகத் தாம்பத்ய வாழ்க்கையைப் பற்றி யோசிக்க உட்கார்ந்து விட்டான். இது வரை எந்த ராஜா எந்தப் பட்டினம் போனாலும் கல்யாணமே செய்து கொள்வதில்லை என்று பிடிவாதமாக இருந்த அவனுக்குக் கல்யாண நினைவைத் தவிர வேறு நினைவே எழவில்லை.

தேசத் தொண்டு செய்ய வேண்டும் என்று தீவிர நோக்கம் கொண்டிருந்த அவனை, மண வாழ்க்கை அதற்கு இடையூறாக முடிந்து விட்டால் அதாவது கல்யாணம் ஆன பின் ஆர்வத்தோடு தேச சேவையில் ஈடுபட முடியாமற் போய் விட்டால் தேசத்தின் கதி என்ன ஆவது என்னும் கவலை வாட்டியது. நாம் மகத்தான தேசத் தொண்டுக்கு அருகதையற்றவனாக ஆகிவிடக் கூடாதே என்னும் பயமும் பிடுங்கித் தின்றது.

இப்படியெல்லாம் யோசனை செய்து, செய்து அவன் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்றும் தன்னைத் தேசத்துக்கு மிகவும் இன்றியமையாதவன் என்றும் முடிவு கட்டிக் கொண்டான். அதன் பலனாகத் தேசோத்தாரணத்துக்கென்றே அவதரித்த தனிப் பெரும் தலைவனாகவும் தன்னை மதிக்கத் தொடங்கினான்.

அவன் தந்தை அவனுக்குப் பொருள் சேர்க்கும் வேலையை வைக்கவில்லை. அவரே வேண்டிய பணம் சேர்த்து வைத்திருந்தார்.

அதனால் அவனுக்குச் சம்பாதித்துத்தான் சாப்பிட வேண்டும் என்ற தேவையும் ஏற்படவில்லை; கவலையும் உண்டாகவில்லை.

அவன் சின்னஞ் சிறு பாலகனாயிருந்த பொழுதே அவன் தந்தை அவனை விட்டு விட்டுப் போய் விட்டார். ஆனால் சாமர்த்தியமும் நுண்ணறிவும் வாய்ந்த அவன் தாயார், தகப்பனார் இல்லாத குறையைத் தெரியவொட்டாமல் அவனைப் போஷித்துப் பராமரித்துப் பெரியவனாக்கி விட்டாள். அது மட்டும் அல்ல; அவனிடத்தில் எண்ணற்கரிய பல சீரிய நோக்கங்களையும் உண்டாக்கினாள். செல்வம் நிறைந்த குடும்பத்தில் சீரும் சிறப்பும் மிகுந்து வளர்ந்த பிள்ளையாதலால் அவனைச் சுற்றிப் பல பையன்கள் இருந்தார்கள். பள்ளியில் மாணவர்கள் அவனையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டார்கள். பலருக்கு அவன் குதிரை வண்டியில் கண். குஷியாகக் குதிரை வண்டியில் காற்று வாங்கப் போகலாம்; பள்ளிக்குப் போகலாம் என்ற எண்ணம். வேறு பலருக்கு அவன் வீட்டு விருந்துச் சாப்பாட்டில் குறி. 'எப்பொழுது ஞாயிற்றுக் கிழமை வரப்போகிறது? எப்பொழுது நம்மை விருந்துக்கு அழைக்கப் போகிறான்?' என்று சாதக பட்சியாக எதிர் நோக்கியிருப்பார்கள். இன்னும் சிலர் அவனிடமிருந்து கிட்டும் பொருளுதவிக்காகப் பருந்தாகச் சுற்றுவார்கள். ஒரு புஸ்தகம் வேண்டும் என்றால் அவன் பத்துப் புஸ்தகங்களைக் கொண்டு வந்து போடுவான். ஒவ்வொருவருக்கும் அவன் ஒவ்வொரு விதத்தில் உதவி வந்தான். ஆதலால் எல்லோருடைய உள்ளத்திலுமே அவன் இடம் பெற்றிருந்தான்; மிகுந்த மதிப்பும் மரியாதையும் அடைந்திருந்தான்.

அவன் கூரிய அறிவு வாய்ந்தவன். அவன் தாயார் பிறருடன் பேசிப் பழகுவதில் மிகுந்த பெருந்தன்மை வாய்ந்தவள். நடத்தையில் நேர்மை மிக்கவள். ஒழுக்கத்தில் சிறந்தவள். தாயாரின் குணம் பிள்ளைக்கும் படிவது இயல்பு தானே?

அதனால் அவனுடைய பேசும் முறையிலும் பழகும் விதத்திலும் புதுமை மிளிர்ந்தது; பெருமை தாண்டவமாடியது. நாளடைவில் அவன் தன் நிலையை உணர்ந்தான்; பெருமையைப் புரிந்து கொண்டான். தேசத் தொண்டில் ஈடுபாடு கொண்ட அவனுக்குத் தேசத்தின் பொருட்டுப் பற்பல காரியங்களைத் தன்னால் சாதித்துவிட முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. (தொடரும்)

5—10-10

அவள் சங்கற்பம்

ராஜு

களங்கமற்ற உள்ளத்தைக் களங்கப் படுத்துவதே மனித சுபாவம்.

நன்மை, தீமை அறிய முடியாத வயதுள்ள ஒரு இளம் பெண்ணின் சிந்தையைச் சிதைக்கிறார்கள் சில பேர்கள்.

பளிங்குபோல் வெண்மையாகத் துலங்கும் அவள் உள்ளத்தைப் பரீட்சை செய்து பார்க்கிறாள் ஒரு பாட்டி! இவர்களின் மாய வலையில் சிக்குண்டதா அவள் உள்ளம்?

சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக மலை வாயில் விழுந்து கொண்டிருந்தான். அன்று முழுவதும் அலைந்து இரை தேடின களைப்பைத் தீர்த்துக் கொள்ளப் பறவைகள் தத்தம் கூடுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. மரக் கிளைகளில் மாங்குயில்கள் மதுர கீதம் பாடிக் கொண்டிருந்தன.

இந்த ரம்மியமான வேளையில் ரகுவும், சந்திராவும் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"சந்திரா! அடி, சந்திரா!" என்னும் குரல் எதிர் வீட்டிலிருந்து கிளம்பியது.

"அடே ரகு, எங்கம்மா கூப்பிடுகிறாள், நான் போகிறேண்டா" என்று சொல்லிக் கொண்டும், தெருவின் குறுக்காக வீட்டுக்குள் ஓடினாள் சந்திரா.

"எத்தனை தடவையடி உன்னைக் கூப்பிடுகிறது? எங்கேயடி தொலைந்து போயிருந்தாய்?" என்று படபடப்பாகக் கேட்டாள்.

"ரகுவின் வீட்டிலே விளையாடிக் கொண்டிருந்தேன்" என்று பணிவுடன் சொன்ன சந்திராவின் பூப் போன்ற மிருதுவான கன்னத்தில் 'பளீ' ரென்று ஓங்கி ஒரு அடி கொடுத்து விட்டாள் செல்லம்.

"எத்தனை தடவை சொல்வதடி? அவர்கள் வீட்டுக்குப் போகக்கூடாதென்று?"

சந்திரா வாய் திறக்கவில்லை. கண்களில் நீர்கூடக் கசியவில்லை. கன்னத்தைத் தடவிக் கொண்டே அவள் நின்ற இடத்திலே நின்று கொண்டிருந்தாள்.

"அந்தக் குழந்தை அழுகிறதே. அதை எடுத்து வைத்துக் கொண்டிருக்க உனக்கு வக்கில்லையா? அதைக் கவனிப்பேனா? உன் எழவிலே நிற்பேனா? போடி, போய்க் குழந்தையை எடுத்துக் கொள்" என்று சொல்லி அவள் கழுத்தில் கையைப் போட்டு உள்ளே தள்ளினாள் செல்லம்.

சந்திரா குழந்தையை எடுத்துக் கொண்டு வராந்தாவுக்கு வந்தாள்.

★

சீதாராமனுக்கும் ஜானகிக்கும் திருமணம் நடந்த மறு வருஷம் சந்திரா பிறந்தாள்.

சந்திரா பிறந்து இரண்டு வருஷங்களாகச் சந்தோஷமாகச் சென்று கொண்டிருந்த அவர்கள் குடும்ப வாழ்க்கையில் திடீரென்று ஒரு சோகம் நிலவியது.

சாதாரண ஜுரம் என்று படுத்த ஜானகி எலும்புருக்கி நோயால் பீடிக்கப் பட்டாள்.

குழந்தையைக் கவனிக்கவும், ஜானகியைக் கவனிக்கவும் வீட்டில் சமையல் முதலிய வேலையைக் கவனிக்கவும், நேரம் தவறாமல் ஆபீஸுக்குப் போக வேண்டிய சகல பொறுப்புக்களும் சீதாராமன் தலையிலேயே விழுந்து விட்டன.

இந் நிலையில் எவ்வளவு நாட்கள் கஷ்டப் படுவது? இவள் இறந்து விட்டாலாவது, இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் அடிக்கடி அவன் மனத்தில் எழுந்தது.

"என்னால் நீங்கள் கஷ்டப்பட்டது போதும், இனியும் வேண்டாம்" என்று சொல்லுவது போல் ஜானகியும் ஒரு நாள் கண்ணை மூடி விட்டாள்.

ஜானகி இறந்து விட்ட சில மாதங்களிலேயே செல்லம் என்பவளை இரண்டாந் தாரமாகச் சீதாராமன் ஏற்றுக் கொண்டான்.

பிறந்தகத்திலிருந்து, முதன் முதலாகக் குடும்பப் பொறுப்பை ஏற்கப் பட்டணம் வந்து சேர்ந்தாள் செல்லம்.

செல்லத்தைக் கண்ட சிறுமி சந்திரா ஓடிப் போய் "அம்மா" என்று அவள் கால்களைக் கட்டினாள்! செல்லத்தின் முகம் கடுகடுத்தது. "அம்மாவாம் அம்மா! போடி, அந்தண்டே!" என்று 'வெடுக்' கென்று கூறி அந்தச் சிறுமியை இழுத்து விட்டு விட்டாள் செல்லம்.

இதைக் கவனித்த சீதாராமனின் முகம் சுண்டி விட்டது. குழந்தை சந்திராவின் வாழ்வு வளம் பெறுவதற்காகத் தானே அவன் மறுமணம் செய்து கொண்டான்! நாட்கள் கடந்தன! செல்லமும் ஒரு குழந்தைக்குத் தாயானாள். ஆனாலும் செல்லத்தின் கொடுமைகள் சந்திராவைச் சுற்றிக் கொண்டு தானிருந்தன.

ஒருநாள் செல்லம் தன்னையும், தன் குழந்தையும் அலங்கரித்துக் கொண்டு. வீட்டைப் பூட்டி, சாவியைச் சந்திராவின் கையில் கொடுத்து, "அப்பா இப்போ வந்து விடுவார்; அவரிடம் சாவியைக் கொடு. நான் கோவிலுக்குப் போகிறேன்" என்று சொல்லி விட்டு, அடுத்த வீட்டுக் கோகிலத்துடன் சினிமாவுக்குப் போய் விட்டாள்.

இவர்கள் சென்ற சிறிது நேரத்தில், ரகுவின் அம்மா சந்திராவை அழைத்து, "உங்க அம்மா எங்கேடி போயிருக்கிறாள், தெரியுமா?" என்று கேட்டாள்.

"கோவிலுக்கு, மாமி!" என்றாள் ஒரு பாபமும் அறியாத அச்சிறுமி.

"உன்னை அழைத்துக் கொண்டு போகவில்லையா?" என்று கேட்டாள் அவள்.

"இல்லே, மாமி! இப்போ எங்க அப்பா வந்துடுவா. நான் வீட்டுச் சாவியைக் கொடுக்கணுமோ யில்லேயோ? அதுக்காகத் தான் போகவில்லே" என்று கூறிச் சந்திரா சாவியைக் காண்பித்தாள்.

அவள் கையிலிருந்த சாவியைத் திரும்பத் திரும்பப் பார்த்த அவள், 'அடி பாதகி, இந்தப் பெண்ணை இப்படியா ஏமாற்றுகிறாய்?' என்று முணுமுணுத்தாள்.

"என்ன மாமி?" என்றாள் சிறுமி சந்திரா.

"இது உங்க வீட்டுச் சாவி யில்லேயடி! அவள் பொய்ச் சாவியைக் கொடுத்திருக்கிறாள்!" என்றாள் ரகுவின் அம்மா.

"இல்லே, மாமி! நீங்க தெரியாமே சொல்றேள். இது எங்க வீட்டுச் சாவிதான்" என்றாள் சந்திரா.

"ஐயோ! பாவம் நீ எதைக் கண்டாய், குழந்தை!" என்று சொல்லி முடிப்பதற்குள், "சந்திரா, சந்திரா" என்ற குரல் கேட்டது.

"மாமி, அம்மா வந்துட்டா, சாவியைக் கொடுங்கள்" என்று வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடிப் போனாள்.



சினிமாவுக்கு 'டிக்கட்' கிடைக்காத ஏமாற்றம். தான் கொடுத்துச் சென்ற பொய்ச் சாவி ரகுவின் தாயாருக்குத் தெரிந்தது வேறு. எல்லாக் கோபத்தையும் வைத்துக்கொண்டு வீட்டுக்குள் சந்திராவை இழுத்துச் சென்று அடி, அடி என்று தன்னுடைய கோபம் தீரும் மட்டும் அடித்துத் தீர்த்தாள்.

சீதாராமனின் மனம் கேட்குமா? "ஏன் செல்லம்! குழந்தை என்ன செய்தது? எதற்காக அவளை இப்படி அடிக்கிறாய்?" என்றுதான் கேட்டான்.

'விசுக்'கென்று செல்லம் அழுது விட்டாள். "செய்த குற்றத்தைக் கண்டித்தால் சிபாரிசுக்கு வந்து விடுவார்கள். நீங்க அப்பாவும் பொண்ணும் எப்படியும் போங்கோ. நானும் என்னுடைய குழந்தையும் பிறந்தகத்துக்குப் போகிறோம்" என்று கூறிப் பலமாக அழ ஆரம்பித்து விட்டாள்.

அவளைச் சமாதானம் செய்வதற்குள் பெரும்பாடாகி விட்டது. இந்தத் தொல்லைகளுக்காகவே சீதாராமன், செல்லம்—சந்திரா விஷயத்தில் தலையிடுவதில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. செல்லம் வீட்டினுள் காரியமாக இருந்தாள். சந்திரா இடுப்பில் குழந்தையை வைத்துக் கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

சந்திரா நிற்பதைக் கண்ட ரகு, அவளை விளையாடக் கூப்பிட்டான். சந்திராவும் குழந்தைதானே! உள்ளே பார்த்தாள். அம்மா தன்னைக் கவனிக்கவில்லை என்று தெரிந்ததும் விளையாடுவதற்கு ரகுவுடன் அவன் வீட்டுக்குப் போய் விட்டாள்.

ரகுவின் அம்மா சந்திராவைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, "சந்திரா! உங்க சித்தி என்னடி செய்கிறாள்?" என்றாள்.

"சித்தியா! அது யார் மாமி?"

"அதுதாண்டீ உங்க வீட்டிலே யிருக்காளே, அவள்!"

"எங்க அம்மா என்று சொல்லுங்கோ" என்றாள் சிறுமி. "பாவம், உன்னை இவ்வளவு தூரத்துக்கு அவள் வசம் பண்ணிட்டாளா?" என்றாள் ரகுவின் தாயார்.

'இதுவரை 'அம்மா, அம்மா' என்று பேசி வந்த மாமி, இப்போ சித்தி, சித்தி என்று ஏதோ சொல்லுகிறாளே' என்று சிந்தித்த சிறுமி, ஒன்றும் புரியாமல், "நான் விளையாடப் போகிறேன், மாமி!" என்று கூறி எழுந்தோடி விட்டாள்.

*

சீதாராமன் சந்திராவை அழைத்து, "உன்னை நேற்று அம்மா ஏன் அடித்தாள்?" என்று கேட்டான்.

"அப்பா! நான் தம்பியை எடுக்காமே போய் ஒரு வீட்டிலே விளையாடினேன். தம்பி அம்மாவைத் தொந்தரவு செய்தானாம். தம்பியை அடிக்கக் கையை ஓங்கினாள். அதுக்குள்ளே நான் தம்பியை எடுத்துக் கொண்டுவிட்டேன். அந்த அடி என்மேலே விழுந்து விட்டது" என்றாள். சீதாராமனின் கண்களில் நீர் நிரம்பியது. 'அவள் கொடுமையை அறியாத குழந்தை என்ன சொல்லுகிறது' என்று நினைக்கும் போது அவனுடைய இதயம் மிகவும் வேதனை யடைந்தது.

சீதாராமனின் கண்களிலிருந்து நீர் வடிவதைப் பார்த்த சந்திரா, "அப்பா, ஏன் அழறே? எனக்கு வலிச்சிருக்குமோன்னு? இல்லேப்பா, எனக்கு வலிக்கவே இல்லே. நீ அழாதே!" என்று கூறி அவனுடைய கண்களைத் துடைத்தாள்.

செல்லத்தின் தம்பி கோபுவுக்குத் திருமணம் என்று அழைப்பு வந்திருந்தது. செல்லம் தன் குடும்ப சகிதம் கலியாணத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.

அன்று திருமணம். செல்லம் ஒரு தேவலோக ரம்பை போல் காட்சி யளித்தாள்.

அவள் தன்னுடைய நகை நட்டு அத்தனையும் போட்டுக் கொண்டிருந்தாள்!

சந்திரா ஒரு பவள மாலையுடனும், ஒரு சாதாரண நூல் பாவாடை, சட்டையுடனும் நின்று கொண்டிருந்தாள்.

இதைக் கவனித்த செல்லத்தின் அம்மாவுக்கு மனத்தில் ஒருவிதமான அனுதாபம் உண்டாயிற்று.

சந்திராவை அழைத்து அருகில் அமர்த்திக் கொண்டு, "சந்திரா, நீயேண்டீ நகை ஒன்றும் போட்டுக்கல்லே" என்று மெல்ல விசாரித்தாள்.

"நான் நகை போட்டிருந்தால் யாராவது திருடன் கொண்டு போயிடு வான்னுதான் போட்டுக்கல்லே" என்றாள் அச்சிறுமி.



"சரி, அப்போ ஏன் பட்டுப் பாவாடை சட்டை போட்டுக்கல்லே?"

"அம்மா என்னைப் பட்டுப் பாவாடை சட்டை போட்டுக்கச் சொன்னா. நான் தான் வேண்டாம் என்று சொல்லி விட்டேன். அது அழுக்காப் போயிடும். அதனாலே தான், பாட்டி!" என்றாள்.

அவள் ஆச்சரியத்தினால் வாயடைத்துப் போய் விட்டாள். தன் மகன் வந்ததிலிருந்து அச் சிறுமியைக் கவனிக்கவே யில்லை. அப்படியிருந்தும் அவளை அக் குழந்தை காட்டிக் கொடுக்க வில்லையே என்றெண்ணி மேலும் சந்திராவைச் சோதித்தாள்.

"சந்திரா, அது உங்க அம்மா யில்லையடீ!" என்றாள் செல்லத்தின் தாயார்.

"இல்லே பாட்டி. அது எங்கம்மாவே தான்" என்றாள் சந்திரா.

"இல்லேடீ" என்றாள் பாட்டி.

"இல்லே, அது எங்கம்மாதான்!" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கடைசியில் பெரிதாக அழ ஆரம்பித்து விட்டாள்.

சந்திராவின் அழுகைச் சப்தம் கேட்டு ஆவேசமாக ஓடி வந்த செல்லம், "ஏண்டீ! சுப வேளையில் அபசகுனம் மாதிரி அழறே?" என்று கேட்டுக் கொண்டே அச்சிறுமி மீது ஆத்திரமாகப் பாய்ந்தாள்.

அவளைத் தடுத்து நிறுத்திய செல்லத்தின் தாய் நடந்ததைச் சொன்னாள்.

"செல்லம், இந்தக் குழந்தை தெய்வப் பிறவியடீ! நானும் எத்தனையோ குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன். இத்தனை நல்ல அறிவு படைத்த குழந்தையைப் பார்த்ததில்லை. நீ அவளிடம் உன் கொடுமைக் குணத்தைக் காட்டியும்கூட இந்தப் பெண் உன்னைத் தன் பெற்ற தாயாகவே நினைத்துக் கொண்டிருக்கிறாளே! என்ன அதிசயமான குழந்தை உள்ளம்! செல்லம், நான் உன்னைப்பெற்றவள். நான் சொல்லுவதைக் கேள். இந்தக் கள்ளங் கபடற்ற குழந்தைக்குத் தாயன்பைக் காட்ட வேண்டியது உன் கடமை. அவள் சின்னஞ் சிறு உள்ளம் நொந்துபோகும் வண்ணம் ஒரு நாளும் நடந்து கொள்ளாதே. உன் பெண்மை உனக்கு இதைப் பற்றிச் சொல்லித் தரவில்லையா?" என்று படபடவென்று உணர்ச்சியுடன் பொரிந்து தள்ளினாள் செல்லத்தின் தாயார். அவ்வளவுதான்!

செல்லத்தின் மனம் மாறி விட்டது! தான் செய்த கொடுமைகளை எண்ணி மிகவும் வருந்தினாள். 'தெய்வத்துக்குச் சமமான குழந்தையைப் படாத பாடு படுத்தி விட்டோமே? அப்படியிருந்தும் நம்மேல் அன்பு செலுத்தும் இக் குழந்தைக்கு ஈடேது, இணையேது?' என்று மனத்துக்குள் வருந்தியவளாய், "கண்ணே, சந்திரா! நான் உன் அம்மாதான். பாட்டி விளையாட்டுக்காகச் சொல்லியிருக்கிறாள். நீ அழாதே" என்று கூறி அவளைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

அவளுடைய அன்புப் பிடியில் சிக்குண்ட குழந்தை திணறியது.

மங்களமான அத்தினத்தில் சந்திராவின் மேல், செல்லம் ஒரு மகத்தான சங்கற்பம் எடுத்துக் கொண்டாள். அதாவது சந்திராதான் தன்னுடைய முதல் செல்வம் என்று!

செல்லம், மணியை இடுப்பில் வைத்துக் கொண்டு, சந்திராவை ஒரு கையால் அணைத்த படி கல்யாணப் பந்தலில் பெருமிதத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவள் மனம் கடந்த காலங்களை அவளுக்கு நினைவுப் படுத்திக் கொண்டிருந்தது.

செல்லம் நின்ற நிலையைப் பார்த்தவர்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள்.

இதைக் கண்ணுற்ற சீதாராமனின் மனம் எல்லையில்லா சந்தோஷம் அடைந்தது. இதைப் போலவே கடைசிவரை செல்லத்தின் அன்பு சந்திரா விஷயத்தில் மாறாமலிருக்க வேண்டுமென்று கடவுளிடம் வேண்டிக் கொண்டான்.

பாவம், அவனுக்கு எங்கே தெரியப் போகிறது, செல்லம் அன்று எடுத்துக் கொண்ட சங்கற்பம்!


நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும்
வாசனையுடனும் இருக்க, உயர்ந்த,
புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட்
பவுடர். மென்மையும், நறுமணமும்
சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும்
வெப்பத்தில் குளுமையும்
இனிமையும் தருகிறது.
ஸ்நானத்துக்குப் பின்
வாசனைப் பூஷணம். ஈரத்தை
உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்!
கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை!
யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது
உங்கள் வதனத்தை அழகு
படுத்தும் பவுடர்.
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்
புதிது!
PROTEX
All-Purpose
TOILET POWDER
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு

கட்சிகளை மறந்து விட்டோம்!

எங்கள் ஊரில் தற்போது உள்ள பஞ்சாயத்து நிர்வாகம் சரிவர நடந்து வருவதைக் கண்டு நிர்வாகத்தினரும், ஊரிலுள்ளோரும் மட்டற்ற மகிழ்ச்சியோடு இருப்பதோடல்லாமல், எதிர்காலத்தில் பலவித முன்னேற்றத் திட்டங்களையும் செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

அவ்வித முன்னேற்றத் திட்டங்கள் பஞ்சாயத்தின் ஒவ்வொரு நிர்வாகச் செயல்களிலும் பிரதிபலிக்கின்றன. தெருக்கள் சுத்தம் செய்யும் வேலைகளில் ஏற்கெனவே இருக்கும் இரண்டு குப்பை வண்டிகளைத் தவிர, புதியதாக டயர் வண்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. பஸ் ஸ்டாண்டில் சிமெண்ட் நடைபாதைகள், பெஞ்சுகள் போடப்பட்டும், குடி தண்ணீர் வைத்தும், மின்சார விளக்கு இரவு முழுவதும் எரிக்க விடப்பட்டும் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் குடி தண்ணீர் திட்டத்துக்காகப் பஞ்சாயத்துக்கு ஒதுக்கியிருக்கும் ரூ. 2760-ல் பஞ்சாயத்து கட்ட வேண்டிய ரூ. 1380-ம் கட்டி (பாதி ரூ. 690 பஞ்சாயத்தும், பாதி ரூ. 690-ம் தேவாங்க செட்டியார்களின் பொதுப் பணத்திலிருந்தும் செலுத்தியது.) இவ்வூர் முதல் வார்டில் ஒரு மின்சாரத் தானே இயங்கும் குடி தண்ணீர்த் திட்டத்தை முடிக்கப்போகிறோம். இன்னும் மூன்று மாதங்களில் மேற்படி திட்டம் பூர்த்தியடைந்து விடும். மற்றக் கிணறுகள் எல்லாம் தூர் எடுத்துக் குடி தண்ணீருக்குத் தகுதியுடையனவாக வைக்கப்பட்டிருக்கின்றன. தெருக்கள் எல்லாம் மராமத்து செய்து மேடுபள்ளமில்லாமல் சமன் செய்யப்பட்டிருக்கின்றன. தெருக்களின் முச்சந்திகள், நான்கு சந்துகள் பிரியுமிடத்தில் அதிக பிரகாசமுள்ள மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்து வாசகசாலையில் இப்பொழுதிருக்கும் தினசரி, மாதாந்திரப் பத்திரிகைகளோடு, நூல் நிலையத்துக்காகப் புத்தகங்கள் ரூபாய் 375-க்கு வாங்கப்பட்டிருக்கின்றன. பூங்காவில் ரேடியோ மூலம் நாட்டின் விஷயங்கள் மக்களுக்கு ஒலி பரப்பப்படுகின்றன. தவிர, இப்பொழுதிருக்கும் நிர்வாக அதிகாரி தனியாகப் பழைய பாக்கிகளை வசூல் செய்கிறார். மீன் வளர்ச்சி இலாகாவுக்கு இரண்டு குளங்கள் அவர்களுடைய பராமரிப்புக்கு விடப்பட்டிருக்கின்றன.

28—5—53-ல் நாங்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம். அன்று முதல் 29—6—54 முடிய 257 தீர்மானங்கள் கொண்டு வந்து 196 தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். சுமார் ரூ. 1500-க்கு ஆபீசுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கியிருக்கிறோம். தனிப்பட்ட குத்தகைதாரர் ஒருவரின் வாரச் சந்தையை நல்ல முறையில் நடத்த வழி செய்வதற்கு முயன்று வருகிறோம். ஆனால் ஸ்தல ஸ்தாபன மேலதிகாரிகள் குத்தகைதாரரின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்தல நிலைமையை நேரில் அறியாமல் மேற்படியாருக்கே எல்லாவித சலுகைகளையும் கொடுக்க முயலுகிறார்கள். அவைகளை நேரிலோ க : தத்திலோ அவர்களுக்கு விளக்கி அச் சந்தையை நல்ல முறையில் கண்காணிக்க எங்களாலான சகல முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். ஜனவரியில் வரும் காலரா என்னும் கொள்ளை நோயை இவ்வாண்டில் பெரிதும் பரவாதபடி செய்திருக்கிறோம். பத்து ஆண்டுகளுக்கு முன் காலரா நோயில் இறந்ததில் இப்போது 25-ல் 1 பங்கு வீதம்கூடக் கிடையாது. குடிதண்ணீர் உபயோகிப்பதை மிகவும் கண்டிப்பான முறையில் அமுல் செய்கிறோம். எங்கள் பஞ்சாயத்தின் முக்கிய கவனமெல்லாம் குடி தண்ணீர், விளக்குகள், நல்ல தெருக்கள், இவை மூன்றும்தான்.

எங்கள் பஞ்சாயத்தின் தலைவர் அப்பதவிக்குத் தகுதியுடையவர் என்று யாவரும் உறுதியாகச் சொல்வார்கள். அவர் தம் கடமையைச் சரியாக நடத்துவதோடு தன்னுடைய சொந்தப் பொறுப்பில் அநேக நன்மைகளைப் பஞ்சாயத்து மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறார்.

எங்கள் பஞ்சாயத்தில் பெரும்பான்மை காங்கிரஸ் உறுப்பினர்களும், மற்றும் கம்யூனிஸ்ட், சுயேச்சை உறுப்பினர்களும் உள்ளனர். அன்று தேர்தலில் கட்சியின் சார்பாக நின்று வெற்றியடைந்த பிறகு, விசுவாசப் பிரமாணம் எடுத்துக்



கொண்டது முதல் இன்று வரை கட்சியை வைத்துக்கொண்டு குழப்பாமல் தங்கள் வார்டுகளிலுள்ள மக்களின் நலன்களையே பெரிதாக மதித்துச் செயலாற்றுகிறார்கள். தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் ஆகிய எல்லோருமே சேர்ந்து தீர்மானங்களை விருப்பு வெறுப்பில்லாமல் ஒற்றுமையாக முடிவு செய்து அவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் திட்டமிட்டிருக்கும் குடி தண்ணீர்த் திட்டம் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் அங்கீகரித்து, ஜில்லா கலெக்டர் அவர்களின் சகாய நிதி அங்கீகாரத்துக்குப் போயிருக்கிறது. நமது நாடு குடியரசான பிறகும்கூட நமது சர்க்காரின் ரெவன்யூ இலாகாவில் பழைய தாமத முறையிலேயே எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன. ரெவின்யூ இலாகாவினர் மனத்தை, அவர்களை ஜனங்களுக்குப் பணி புரியும் விதத்தில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்து தீர்மானங்களுக்கு ஜில்லா பஞ்சாயத்து ஆபீசரின் அங்கீகாரம் ஏழு நாளிலும், ரீஜனல் இன்ஸ்பெக்டர், ஸ்தல ஸ்தாபன மாகாண

இன்ஸ்பெக்டர் இவர்களின் அங்கீகாரம் பதினைந்து நாளிலும் கிடைக்க வேண்டும். சாதாரணமாக இப்பொழுது மேற்படியார்களின் அங்கீகாரம் வாங்க மூன்று மாதங்களுக்கு மேல் ஆகின்றது. நிற்க, பொது மக்களும் தங்கள் வார்டுகளின் தெருக்களின் குறைகளை எழுத்து மூலமாக அங்கத்தினர்களிடத்திலோ, தலைவரிடத்திலோ, மனுப் பெட்டியிலோ சேர்ப்பதுடன், விடாது கிர்ப்பந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்.

சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் கையைத் தூக்கச் செய்து, பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை விரோதங்களையும், கலகத்தையும் தூண்டி விட ஏதுவாகும். சட்டசபைத் தேர்தல்களில் நடப்பது போல் இரகசியமாக வோட்டுப் பெட்டியில் வோட்டுப் போடும் முறைதான் சிறந்தது. முக்கியமாக நிர்வாக அதிகாரியிடமிருந்து பணப் பொறுப்பைத் தலைவரிடத்தில் கண்டிப்பாக மாற்ற வேண்டும். நிர்வாக அதிகாரி ஆலோசனையாளராகவும், காரியதரிசியாகவும் இருந்து செயலாற்ற வேண்டும். நிர்வாக அதிகாரி என்ற பதத்தை எடுத்து விட்டுக் காரியதரிசி என்று அவருக்கு உத்தியோகப் பெயரிட வேண்டும். ஆபீஸ் சிப்பந்திகளைக் கண்டிக்கவோ, அபராதமிடவோ தலைவர்களுக்கு நேரடியான அதிகாரம் இருக்க வேண்டும். அப்படி யிருந்தால்தான் ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் ஒழுங்காகத் தங்கள் வேலைகளைச் செய்வார்கள்.

பிரத்தியட்ச நிலைமையில் பஞ்சாயத்துக்கள் குற்ற விசாரணை செய்து நியாயம் சொல்வது நேர்மையாக இருக்காது. சிவில் வழக்குகளை இப்போதிருக்கும் வரம்பு நூறு ரூபாய் வரையில் விசாரிப்பதுதான் நடக்கக் கூடிய காரியம். கிரிமினல் வழக்குகளில் அப்பஞ்சாயத்தின் எல்லையிலுள்ள வழக்குகளை, அப்பஞ்சாயத்தில் மூவர் அல்லது ஐவர் கொண்ட குழுவைக் கலந்தாலோசித்து நீதிபதி தீர்ப்புச் சொல்வது (பஞ்சாயத்து) ஊர் இருந்துவதற்கு நல்ல வழியாகும்.

புவனகிரி
3-7-54


சி. பி. சட்டநாதன்
உபதலைவர், பஞ்சாயத்து சபை

திருக்குறள் தின விழா



செப்டம்பர் மாதம் 19-ந் தேதி பால சைவ சுத்த சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் திருக்குறள் தினவிழா "கல்கி" ஆசிரியர் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் பேசிய ராஜாஜி, "திருக்குறள் எல்லா மதங்களையும் கடந்து நிற்பது மட்டுமல்ல, அதன் கொள்கைகள் பரந்தவை. ஹிந்துக்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் ஆகிய எல்லா மதத்தினரும் மதித்துப் போற்றும் நூல்"...என்று பாராட்டிக் கூறினர். கடைசியில், மேற்படி சங்கத்தின் ஆதரவில் கடந்த நாலு வருஷங்களாகத் திருக்குறள் வகுப்புகள் நடத்தி வந்த சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர் ஸ்ரீ ஆர். சக்கரபாணி நாயகருக்கு ரூ. 501 பண முடிப்பு வழங்கப்பட்டது.

ஸ்ரீமான் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஸ்ரீ சக்கரபாணி நாயகருக்குப் பண முடிப்பு வழங்குவதையும், விழாவுக்கு விஜயம் செய்திருந்த ரஸிகப் பெரு மக்களையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.


உங்கள் வோட்டு
நீண்டகாலத்திற்கு உழைக்கும்
'விஸ்டம்'
டூத் பிரஷுக்கே!
VOTE FOR
'WISDOM'-
THE LONG-LASTING
TOOTHBRUSH!
మీ వోటు
'విస్డమ్'కు
ఇవ్వండి
అది చాలకాలము
పనిచేయు బ్రష్
எம்மொழியிலும் விஸ்டம் கேட்பது விவேகமாகும் — அது நீடித்து உழைக்கும், சரியான வடிவமுள்ள நைலன் டூத் பிரஷ்
In any language, it's wise to ask
for WISDOM — the long-lasting,
correct-shape nylon toothbrush.
Wisdom REGD.
Wisdom
Wisdom REGD.
made with NYLON tufts

DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA

ரீயின்போர்ஸ்டு
சிமெண்ட் காங்க்ரீட் குழாய்கள்

உறுதியும் நம்பிக்கையும் வாய்ந்தவை

(ஒரு டால்மியா தயாரிப்பு)

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்

டால்மியாபுரம் – (திருச்சிராப்பள்ளி)

இந்தியன் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட், கவர்ன்மெண்ட், ரயில்வேக்கள், முனிசிபாலிடிகள் முதலிய ஸ்தாபனங்களுக்கு சப்ளை செய்வோர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஜாபிதாவிலுள்ளது.

DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA

DALMIA. DALMIA. DALMIA


DALMIA. DALMIA. DALMIA



நோவுகள், தலைவலி, ஜலதோஷம், ஜுரம்

இவற்றினின்று துரிதமாக நிவர்த்திபெற

B. 2.



நண்பரின் உதவி

கி. ரங்கராஜன்

அன்று முதல் தேதி.

சோதனையாக அன்றைக்கு என்று அருண ஜடேசனுக்குக் காரியாலயத்தில் வேலை கெட்டி வாங்கிற்று.

சீக்கிரமாக வந்தால் ஏதாவது ஒரு சினிமாவுக்குப் போகலாம் என்று அவன் மனைவி கனகம் காலையில் அவனுக்குச் சிற்றுண்டி கட்டிக் கொடுக்கும்போது கட்டளையிட்டது அவன் ஞாபகத்துக்கு வந்தது. அவசர வேகத்தில் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைக் கவனித்தான், ஐந்து அடித்து ஐந்து நிமிஷம். "சரி, இந்த வேலை இந்த யுகத்துக்கு மாளாது; எழுத வேண்டியவைகளை வீட்டுக்குத் தொலைத்துக் கொண்டு போய் எழுதினால்தான் உண்டு" என்று நினைத்தவனாய் மேஜை மீது அலங்கோலமாகக் கிடந்த 'பைல்'களை ஒன்று சேரக் கட்டினான். அடுத்தபடியாக உள் பாக்கெட்டில் கையை விட்டுத் திருப்திப்படுத்திக் கொண்டான். சம்பளப் பணம் பத்திரமாக இருப்பது தெரிந்தது. அலமாரியை இழுத்துப் பூட்டினான். விசுக்கென்று கிளம்பி விட்டான்.

மவுண்ட் ரோடு பஸ் நிலையத்தில் கூட்டமாவது கூட்டம்! பஸ்ஸுக்காக ரொம்பப் பேர் காத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு பஸ் வந்தது. அருணஜடை முண்டியடித்து அதில் கன வேகமாய் ஏறி உட்கார்ந்து கொண்டான். புரசைவாக்கம் வந்ததும் கீழே இறங்கி ஆபீஸ் கட்டுடன் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான். வீட்டில் அவன் மனைவி கனகம் சினிமாவுக்குப் போவதற்காகத் தன்னை அலங்கரித்துக் கொள்வதில் முனைந்திருந்தாள். நாலு தரம் கூந்தலைக் கலைத்துக் கலைத்துப் பின்னிக் கொண்டாள். முகத்தில் பவுடர் பூசிக் கண்ணுக்கு மை இட்டாள். கடைசி கடைசியாக நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டே கடைக் கண்ணால் சுவரிலிருந்த கடிகாரத்தைக் கவனித்தாள். ஆறு அடிக்க ஐந்து நிமிஷம். 'அட, இன்னுமா அவரைக் காணோம்!' என்று ஓடியது அவள் சிந்தனை. உள்ளுக்கும் வாசலுக்குமாக நடை பழகினாள்.

சந்தோஷ மிகுதியில் பறந்து வந்து கொண்டிருந்த அருண ஜடேசனைக் கண்டதும் "அப்பாடா, வந்து விட்டீர்களாக்கும். சுருக்க! உங்களுக்குத்தான் ஞாபக சக்தி அதிகமாயிற்றே, எங்கேயாவது வம்பளந்து கொண்டு நிற்கிறீர்களோ என்று நினைத்தேன். புறப்படலாமா?" என்று கேட்டுக் கொண்டே, அவன் கையைக் கவனித்தாள். "கையிலே அது என்ன பார்சல்?" என்று வியப்புடன் கேட்டாள்.

"ஆபீஸ் பைல். இதை எடுத்து உள்ளே வை முதலில். நான் இதோ அரை நொடியில் உடை மாற்றிக் கொண்டு வருகிறேன்"

என்று கூறித் தான் கொண்டு வந்த கட்டை அவளிடம் கொடுத்து விட்டுத் தன் அறைக்குள் நுழைந்தான். ஐந்து நிமிஷத்தில் மாற்றுடை தரித்து அவன் வெளியே வந்தபோது முகத்தில் சிரிப்பும், கையில் நீல வர்ணப் பட்டுப் புடவையும் ஜ்வலிக்கக் கனகம் நிற்பதைக் கவனித்து மலைத்தான்.

"இது ஏது புடவை?" என்று கேட்டான் அருண ஜடேசன்.

"ஏதோ காரைக்கால் அம்மையார் ஈசுவரனைத் தியானித்ததும் மாம்பழம் வந்து அவர் கையில் விழவில்லையா, அதுபோல் ஈசுவரனைத் தியானித்துச் சும்மா கையை அப்படி நீட்டினேன். 'பொத்'தென்று விழுந்தது இந்தப் புடவை. அது போகட்டும். இதென்ன விலை? ரொம்ப நன்றாக இருக்கிறதே! ஒரு நாளும் இல்லாத திருநாளாய் ஆபீஸ் கட்டு வருகிறதே என்று நினைத்து அதைப் பிரித்தேன். என்னை ஏமாற்ற முடியுமா?" என்றாள் கனகம்.

அருண ஜடேசனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தான் காரியாலயத்திலிருந்து கொண்டு வந்த கட்டு எப்படிப் புடவைப் பார்சலாக மாறிற்று என்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

"ஐயோ, குடி கெட்டுப் போச்சே!" என்று கத்த நினைத்தவன், ஒரே ஒரு நிமிஷம் யோசித்தான். புறப்படும் போது கையில் ஆபீஸ் கட்டு இருந்ததா, இல்லையா என்று தன்னையேதான் கேட்டுக் கொண்டான். இருந்தது போலவும் இல்லை போலவும் பட்டது. அப்படியானால் இது ஏது? இது ஏது? அவனுக்கு ஒன்றும் பிடி படவில்லை. "இதோ இரு, வந்து விட்டேன்" என்று தலைதெறிக்க ஓடினான் வெளியே.

நல்ல வேளை, ஆபீஸ் மானேஜர் இன்னும் தம் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அதனால் ஆபீஸ் மூடப்பட வில்லை.

"எங்கே ஐயா, திரும்பவும் வந்தீர்? மணிபர்ஸை மறந்து வைத்து விட்டீராக்கும்?" என்று அவர் கேட்டதற்குக்கூடப் பதில் சொல்லாமல் காலம் தவறிய புகை வண்டி போல அலமாரியை நோக்கி விரைந்தான். என்ன ஆச்சரியம்! அங்கே அந்த ஆபீஸ் கட்டு அவன் கட்டியபடியே இருந்தது. அருண ஜடேசனுக்கு அப்பொழுது தான் போன உயிர் திரும்பி வந்தது. ஆனால் அந்த உயிர் திரும்பவும் போய் விடும் தறுவாயில் இருந்தது. காரணம் 'மணிபர்ஸை வைத்து விட்டீராக்கும்' என்று அந்த மனிதர் கேட்டாரல்லவா? அந்தக் கேள்விதான், அவனுக்கு அவனுடைய மணிபர்ஸை ஞாபக மூட்டியது. ஆபீஸ் காகிதங்களைத் தொலைத்து விட்டோமே என்ற கவலையில் அவன் தன்னுடைய சம்பளப் பணத்தைச் சுத்தமாக மறந்து விட்டான். இப்பொழுது ஞாபகத்துக்கு வந்த போது பையைத் தடவிப் பார்த்துக் கொண்டான். அங்கே அது இல்லை. வீட்டில் வைத்ததாகவும் ஞாபகம் இல்லை. 'சரி, தொலைந்து விட்டது. பஸ்ஸில் தான் எவனோ கிளப்பிக் கொண்டு போய் விட்டான்' என்று நிச்சயமாகி விட்டது. சோர்ந்துபோய் வீட்டுக்கு வந்தான். வீட்டு வாசலில் அவன் மனைவி கவலைப் பிம்பமாக இருப்பதைக் கவனித்தான்.

"அகப்பட்டதா?" என்று அவன் கேட்டதற்கு, மணிபர்ஸ் இருக்கிறதா என்று பதிலுக்கு அவளைக் கேட்டுக் கொண்டே தன் அறைக்குள் நுழைந்து வேகமாகக் கோட்டின் ஆறு பைகளையும் பரபரப்புடன் துழாவினான். அது எப்படி அங்கே குதிக்கும்? ஷர்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டது அவனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. யாரோ தன் அஜாக்கிரதையை நல்ல முறையில் பயன் படுத்திக் கொண்டு தேட்டை போட்டு விட்டான் என்பது அவனுக்குத் தீர்ந்துபோன விஷயமாகி விட்டது. ஒன்றும் வகை யறியாமல் தவித்தான். அந்த மாதம் முழுதும் போக வேண்டுமே? காலையில் பால்காரன், தயிர்க்காரன், வெண்ணெய்க்காரன் என்று சரமாரியாக எல்லோரும் வந்து விடுவார்களே! அவர்களுக்கு வழி சொல்ல வேண்டுமே என்று திணறினான்.

ஒரு ரூபாயா, இரண்டு ரூபாயா? கலை கலையாக நூற்றி ஐம்பது ரூபாயை ஒரே நொடியில் கோட்டை விட்டு விட்டேனே என்று எண்ணி நைந்தான்.

அன்று அவர்களுக்குச் சினிமா இல்லை என்பது தீர்ந்து போன விஷயம்.

"வருந்திப் பயன் என்ன? போன பொருள் திரும்பக் கிடைக்கவா போகிறது? பேசாமல் எழுந்து சாப்பிட வாருங்கள். உங்களுக்குப் பணம்தானே வேண்டும்? நான் அதற்கு ஏதாவது வழி சொல்லுகிறேன். முதலில் எழுந்திருங்கள்!" என்று கூறி அவனைக் கிளப்பினாள் கனகம்.

"புடவைக்குக் கை நீட்டினதைப் போல், பணத்தையும் வெட்ட வெளியிலிருந்து வரவழைக்கப் போகிறாயா?" என்று கேட்டான் தன் மனைவியைப் பார்த்து.

"சும்மா பேச்சுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் கோபிக்கக் கூடாது. நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்களே அந்தப் புடவை, அது நல்ல பட்டினால் நெய்யப் பட்டது என்று நினைக்கிறேன். என் தோழி யொருத்தி சுப்பிரமணிய முதலியார் தெருவில் இருக்கிறாள். ஒரு வாரம் முன்பு சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்கு நல்ல புடவையே கிடையாதாம். உள்ளே இரண்டு புடவைகள் எப்போதோ வாங்கியவை, பட்டுப் புடவை என்று பேரைச் சொல்லிக் கொண்டிருக்கின்றனவாம். நல்ல புடவையாக ஒன்று வாங்க வேண்டும் என்றிருக்கிறாள். அவளைக் கேட்டுப் பார்க்கிறேன். இந்தப் புடவை அவளுக்குப் பிடித்தாலும் பிடிக்கும் என்று நினைக்கிறேன். அவளிடம் தள்ளி விடுகிறேன். இந்த மாதம் பாதியும்;

B.I.S.N. CO. LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

S. S. "ரஜூலா"

சென்னை புறப்படும் தேதி — 1954 அக்டோபர் 14
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1954 அக்டோபர் 15

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள் :

சென்னையிலிருந்து 14-10-54 : பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.

நாகப்பட்டினத்திலிருந்து 15-10-54 : பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் காலை 8 மணிக்கும் கப்பலேறலாம்.

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 14-10-54 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகிவிடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1

மதுரா கம்பெனி லிமிடெட்
முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்

★ Look like the STARS ★

use **PEARLINE Snow**

A refreshing and fragrant non-greasy vanishing cream (Snow) for day and night use. Prevents chapping and roughness of the skin — excellent for children. After shaving and at all times it renders the skin soft and fair. It is also an excellent powder base preserving and whitening the skin.


PEARLINE-PARIS LTD.
P. O. BOX 493, BOMBAY.



VIRGINIA MAYO in Warner Bros.' "KING RICHARD AND THE CRUSADERS



மூன்று காரியங்களையும் சாதிப்பது கால்கேட் முறையே!
உங்கள் வாய்த் துர்நாற்றத்தை அகற்றுகையில்
உங்கள் பற்களை சுத்தி செய்து
அவற்றை சொத்தையாகாமல் தடுக்கிறது
COLGATE
COLGATE
RIBBON DENTAL CREAM



நெல்லை சங்கீத சபா நாடகக் குழுவினர் செப்டம்பர் மாதம் 12-ந் தேதி யன்று திருநெல்வேலியில் கோமதி சுவாமிநாதன் எழுதிய 'புயலும் தென்றலும்' என்ற நாடகத்தை வெகு சிறப்பாக நடித்தனர்.

அடுத்த மாதம் பாதியுமாகப் பணத்தைக் கொடுக்கட்டுமே!" என்றாள்.

அருணஜடேசனுக்கு அது நல்ல யோசனையாகப் பட்டது. என்றாலும் மனம் முழுதும் சமாதானமாகவில்லை. "பஸ்ஸில் யாரோ தொலைத்து விட்டு வந்ததை நாம் விலை கூறிப் பணம் பெறுவதா?" என்று கேட்டான்.

"யார் அப்படிச் செய்யச் சொல்லுகிறார்கள்? வேண்டாமே! பேசாமல் இப்பொழுதே எடுத்துக் கொண்டு போய் அதன் சொந்தக்காரரைத் தேடிப் பிடித்துக் கொடுத்து விட்டு வாருங்கள். வரும்போது மட்டும் மறந்து போகாமல் உங்கள் பணப் பையை யாராவது கொடுத்தால் கொண்டு வாருங்கள்" என்றாள் பரிகாசமாக.

"கனகம்! என்னுடன் விளையாடுவதற்கு இதுதானா சமயம்? அப்படிச் செய்வது முறையல்லவே என்று சொன்னேன். உன் இஷ்டப்படியேதான் செய்யேன்!"

மறுநாள் அருணஜடேசன் காரியாலயத்துக்குப் போகும் போது, ஞாபகமாக "புடவையை என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான் மனைவியை.

"நேற்றைக்கே முடிவான விஷயமாயிற்றே அது?"

"அது சரி! என்ன விலை சொல்லப் போகிறாய்?" என்று கேட்டான்.

"பட்டானால் நல்ல பட்டு. சரிகையும் நிறைய இருக்கிறது. நூற்றி ஐம்பது ரூபாய் என்று சொல்லுகிறேன். அவள் கொடுத்தது கொடுக்கட்டும்."

"புடவையை என்னத்துக்காக விற்கிறாய் என்று அவள் கேட்டால்?"

"எனக்கு வேண்டுமென்று எடுத்துக் கொண்டு வந்தேன். ஆனால் கலர் என்னமோ பிடிக்கவில்லை. நீ கேட்டாயே உனக்குத்தான் இருக்கட்டுமே. எடுத்துக் கொள் என்று சொல்கிறேன்" என்றாள் கனகம்.

அருணஜடேசன் ஆபீஸுக்குப் போய் விட்டான். அன்று அவன் மாலை வீட்டுக்கு வந்ததும், அவன் தன் மனைவியிடம் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? "புடவை என்ன ஆயிற்று?" என்பதே.

"கொடுத்திருக்கிறேன். புடவை பிடித்திருக்கிறதாம். மாலையில் அவள் கணவன் வந்ததும் கேட்டுச் சொல்லுகிறேன் என்றாள்" என்று கூறி முடித்தாள்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், கனகத்தைத் தேடிக்கொண்டு அவள் தோழி அமிர்தவசனியே வந்து விட்டாள்.

வரும்போதே கையில் கத்தையாக ரூபாய் நோட்டுக்களை அந்த அம்மாள் கொண்டு வந்ததைத் தனது அறையில் இருந்தபடியே கவனித்தான் அருணஜடேசன்.

மூன்றே நிமிஷம்தான். தான் கொண்டு வந்த அந்த நோட்டுக்களைக் கனகத்திடம் கொடுத்து விட்டு அவள் மறைந்து விட்டாள்.

"நூற்றி இருபது ரூபாய் கொடுத்தாள். அதற்குமேல் கொடுக்க முடியாதாம். வேண்டாம் என்றால் திருப்பி அனுப்பி விடுவதாகச் சொல்கிறாள். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே கனகம் காப்பியும் கையுமாய்த் தன் கணவன் அறையை அணுகினாள்.

"சரி, வந்தவரையில் லாபம், முப்பது ரூபாய் கை நஷ்டம் என்று நினைத்துக் கொள்ளுகிறோம்" என்றான் அருணஜடேசன்.

ஒரு வாரம் வேகமாகச் சென்றது. அன்று ஞாயிற்றுக் கிழமை. அருணஜடேசனைத் தேடிக் கொண்டு யாரோ ஒருவர் அவன் அறைக்கு வந்தார். அவரை ஏற்கனவே எங்கோ பார்த்ததாக அவனுக்கு ஞாபகம். எங்கே என்று நிச்சயமாகத் தெரியவில்லை. அவரை வரவேற்று ஆசனம் கொடுத்தான்.

"நான் வேளாளத் தெருவில் இருப்பவன். தங்கள் மனைவியாரும் என் வீட்டுக்காரியும் நெருங்கிய தோழிகள் என்பது சமீபத்தில்தான் தெரிந்தது. ஆனால் நாம்தான் இதுவரையில் ஒருவரை ஒருவர் சந்தித்துக்

தெய்வ வழிபாடு

ஆர்ய சமாஜத்தின் தந்தை யென்று போற்றப் படும் மகரிஷி தயானந்த சரஸ்வதி வேத மந்திரங்களுக்கு விரிவுரை கண்டார்; இறை வழிபாடு, அக்னிஹோத்ரம், சுத்தி சம்ஸ்காரம் முதலியவைகளை அநுஷ்டான பூர்வமாக நடை முறையில் கொண்டுவரச் சௌகரியமா யிருக்கும் பொருட்டு, மேற்படி மந்திரங்களைத் தொகுத்து அளித்துள்ளார்.

ஆத்மஞான விலாசம் பெற்று, ஆத்மாநுபூதியில் திளைக்க வேத மந்திரங்கள் பெரிதும் துணை செய்யும். ஈசுவரஸ்துதி, ஸ்வஸ்திவாசனம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, பஜனைப் பாடல்கள் முதலியவை சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கிடைக்குமிடம்: ஆர்ய சமாஜ் (சென்ட்ரல்), சென்னை—1

கொள்ளவில்லை. அந்த வாய்ப்பு இன்றுதான் எனக்குக் கிடைத்தது. என் பெயர் சபாரத்தினம்" என்றார் அவர்.

"ஓஹோ அப்படியா! மிகவும் சந்தோஷம். நான் கூட உங்கள் வீட்டுக்கு வர வேண்டும் என்று நினைத்ததுண்டு. அதற்குள் நீங்களே முந்திக் கொண்டு விட்டீர்கள்" என்று புளுகினான் அருணஜடேசன்.

"மற்றொரு சமயம் வந்து உங்களுடன் சாவகாசமாகப் பேச வேண்டும். எனக்கு இப்பொழுது உங்களால் ஒரு சின்ன உதவி ஆக வேண்டியிருக்கிறது" என்றார் சபாரத்தினம்.

"ஓ, கட்டாயம் செய்கிறேன். என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்!"

"அன்று உங்கள் மனைவியின் மூலம் ஒரு புடவை அனுப்பினீர்களே, அது மாதிரி இன்னொன்று வேண்டும். உங்களால் வாங்கித்தர முடியுமோ?"

"அது மாதிரியா, அதுமாதிரி தானே? இந்தமாதிரி என்ன? இதைவிட உயர்வாகக் கூடக் கிடைக்கும். புடவைக்கு என்ன ஸார் பஞ்சம்?" என்றான் அருணஜடேசன்.

"கிடைக்கும். கிடைக்காது என்றேனா? நீங்கள் இதை எந்தக் கடையில் வாங்கினீர்கள்? வி. என். எஸ். கடையா?"

அதற்குமேல் உண்மையை மறைப்பதில் பிரயோஜனம் இல்லை என்று நினைத்தவனாய், தனக்கு அந்தச் சேலை வந்த வரலாற்றையும், அதனை விற்க வேண்டி வந்த நிர்ப்பந்தத்தையும் சொல்லி, "இதுதான் ஸார் விஷயம் அந்தப் புடவையை உங்களுக்குக் கொடுத்ததில் சம்பளத்தில் முப்பது ரூபாய்தான் போயிற்று என்று சமாதானம் செய்து கொண்டிருக்கிறேன்" என்று முடித்தான்.

"உங்களுக்கு என்னால் முப்பது ரூபாய் நஷ்டமாக வேண்டாம். அந்தத் தொகையை நான் கொடுத்து விடுகிறேன்."

"நீங்கள் ஏன் ஸார் கொடுக்க வேண்டும்? என்னுடைய அஜாக்கிரதைக்கு நான்தானே நஷ்டப் படவேண்டும்?"

"நீங்களும் நஷ்டப்படவேண்டாம். நானும் லாபம் பெற வேண்டாம். அந்தப் புடவை இருக்கிறதே, அதை நான்தான் வாங்கினேன் குறிப்பிட்ட தினத்தில் என் மனைவி என்னென்னமோ சாமான்களை வாங்கி வரச் சொல்லி ஒரு நீண்ட பட்டியலைக் கொடுத்தாள். அந்தப் பட்டியலில் இந்தப் புடவை சேரவில்லை. நானேதான் அதிகப்படியாக வாங்கினேன். பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினபோது இந்தப் புடவையை மறந்து விட்டேன். நாலு அடி தாண்டினபோதுதான் நினைவு வந்தது; கலவரத்துடன் திரும்ப பஸ் வழியே ஓட நினைத்துக் காலை மாற்றிப் போட்டபோது என்மீது இரண்டு மூன்று பேர்வழிகள் மோதினார்கள். அவர்கள் யார்? எதற்காக என்மீது மோத வேண்டும் என்று கவனித்தபோது, என் சட்டைப் பை இலேசாகக் கனத்தது. அடுத்த நிமிஷம் அந்த துஷ்டர்கள் மறைந்து விட்டார்கள். வீணாக அங்கே நிற்பதனாலோ, நான் ஏறி வந்த பஸ்ஸைத் தேடிக்கொண்டு போவதனாலோ பெறப் போகும் பயன் ஒன்றுமில்லை என்று நினைத்தவனாய் வீட்டுக்கு வேகமாக நடந்தேன். வீட்டுக்குள் நுழைந்து பையில் கனத்த பொருளைப் பார்த்தபோது அது மணிபர்ஸாக இருப்பதை அறிந்து திறக்கையில் புத்தம் புதிய நோட்டுக்களாக அதில் நூற்று ஐம்பது ரூபாய் இருந்தது. அந்த க்ஷணமே புடவை கெட்டுப்போன விஷயத்தைப் போலீஸில் எழுதி வைக்கும் நினைவைக் கை விட்டேன். அடுத்த நாள் என் புடவை எனக்கே திரும்பி விட்டது. அது திரும்பியதில் என் மனத்தில் பளிச்சென்று ஒரு எண்ணம் உதித்தது. அதை ஊர்ஜிதம் செய்து கொள்ளத்தான் உங்களிடம் வந்தேன். மணிபர்ஸைக் கையோடு கொண்டு வந்திருக்கிறேன். அது உங்களுடையதா என்று பாருங்கள்" என்று சொல்லிக் கொண்டே, மடியில் தயாராகக் கொண்டு வந்திருந்த பர்ஸை நீட்டினார் சபாரத்தினம்.

அருணஜடேசனுக்கு ஆச்சரியத்தால் கண்கள் அகல விரிந்தன. "என்னுடைய பர்ஸ்தான் ஸார், இது. அதை இப்படிக் கொடுங்கள்" என்று சொல்லிக் கொண்டே வேகமாக அதனை வாங்கி உள்ளே திறந்து பார்த்தான். அதிலே மூன்று பத்து ரூபாய் நோட்டுகள் இருந்தன.


"என்னுடைய பணம், நல்ல பணம், ஸார்" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பர்ஸைத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான் அருணஜடேசன்.

"என்னுடைய புடவை மட்டும் என்ன? அதைப் பொறுக்கி எடுக்க நான் நூறு கடை ஏறி இறங்கியது உங்களுக்கு என்ன ஸார் தெரியும்? அதுமாதிரி புடவையை இந்தச் சென்னைப் பட்டணத்தில் நீங்கள் வாங்கி விடவா? ஹூம்! அது முடியாது!" என்று கூறிக் கொண்டே சபாரத்தினம் எழுந்தார்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20. Dr. Guruswamy Mudaliar Road Kilpauk Madras 10.

பெர்க்கின்ஸ்' டீஸல் இன்ஜின்களையே


பொருத்துங்கள்



பஸ்களுக்கும்

லாரிகளுக்கும்

ஏனெனில்



- ★ எவ்வித ரஸ்தாவுக்கும் பளுவுக்கும் ஏற்ற அதிக சக்தி
- ★ பராமரிப்புக்கிடையே கூடுதலான மைல்கள் ஓட்டம்
- ★ பெட்ரோல் இயந்திரத்தை விட மைலுக்கு மூன்றணா செலவில் சேமிப்பு
- ★ புகை ஏற்படாததோடு எண்ணை சேதாரமும் இல்லை
- ★ குறைந்த ரிப்பேர் செலவுடன் சுலபமான பராமரிப்பு
- ★ எவ்வித சிரமமின்றி எளிதில் இயங்குவது
- ★ ஓட்டுபவர்களுக்கு மிகவும் சௌகரியம்

உங்களுக்கு அதிக செலவின்றி லாபமளிக்கிறது

ஸிம்ஸன் & கோ., லிமிடெட்

மதராஸ் - 2

பிராஞ்சுகள் : பெங்களூர்-உதகமண்டலம்-திருச்சிராப்பள்ளி-செகந்திராபாத் (Dn.)

இந்தியா முழுவதும் விற்பனையும் ஸர்வீஸும் உண்டு

அருகாமையிலுள்ள உங்கள் 'பெர்க்கின்ஸ்' வியாபாரியை விசாரிக்கவும்

REGISTERED No. M. 4392
Registered as a news paper in Ceylon

